Regd. No. M. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الإسلام

லர்

இதழ் 3

செந்தமிழ் மாதசஞ்சிகை

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1354 துல்ஹஜ்ஜு மீ 1936 ௵ மார்ச்சு மீ

1. அல்குர்ஆன் ... 57
2. அல்ஹதீது ... 59
3. ஹஜ்ஜுப் பெருநாள் ... 61
4. ஈதுல் அல்ஹா ... 65
5. குர்பானி ... 67
6. மதத்தின் அவசியம் ... 69
7. மதப் பிரசாரம் ... 73
8. ஒற்றுமைக்கானவழி ... 76
9. வோக்கிங் மஸ்திஜில் காதியானிப் பிரசாரமா? 79
10. சுகஜீவியாய் வாழ்வதற்குள்ள உபாயங்கள் ... 82
11. விவாகப் பிரிவினையைப்பற்றிய ஓராராய்ச்சி ... 84
12. இப்போதேனும் விழித்தலாகாதா? ... 95

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K.R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3 0 0
பிணங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு...		,,	4
தனிப் பிரதி	...	,,	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியா வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணிய அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவே டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேரு இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

" ஹிபாஜத்துல் இஸ்லாம் " ஆபீஸ்,

43-A, போஸ்டாபீஸ் தெரு,

G T., மதராஸ்.

OFFICE OF THE ... 30 MAR 1936 ... MADRAS

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 7	ஹிஜ்ரி 1354 துல்ஹஜ்ஜு ௴ 1936 ளூ மார்ச்சு ௴	இதழ் 3

அல் குர்ஆன்

"றஹ்மானுடைய அடியார்கள் பூமியின்மீது மெதுவாக நடப்பார்கள். இன்னும் அவர்கள் மடையர்களைச் சந்திப்பார்களாயின் சலாம் சொல்லுவார்கள். (அதாவது இன்னோர் அந்த மடையர்களுக்குக் கொடுக்கும் மறுமொழியினால் அவர்களைவிட்டு விடுதலைபெற்றுவிடுவர்.) இன்னும் அன்னோர் தங்களுடைய நாயனை இரவிலும் பகலிலும் வணங்குவார்கள். இன்னும் அன்னோர், எங்களுடைய நாயனே! நரகத்தின் வேதனையை விட்டு எங்களைக்காப்பாற்றி விடு; அதன்வேதனை கஷ்டத்தை விளைவிக்கக் கூடியதாக இருக்கிறதென்று கூறுவர். அந்த நரகம் ரொம்ப கெட்ட இடமாகவும் பயப்படக்கூடிய ஸ்தலமாகவு மிருக்கிறது. இன்னும் அன்னோர் செலவு செய்வார்களாயின், வீண்செலவு மில்லாது, கடுமையான உலுத்தத்தனத்தையு மனுஷ்டிக்காது நடுத்தரமானதைத் தெரிந்துகொள்வர். இன்னும் அன்னோர் அல்லாஹ்தஆலாவைத் தவிர வேறு எந்த வஸ்துவையும் வணங்கமாட்டார்கள்; அநீதியாக எந்த உயிரையும் கொன்று விடமாட்டார்கள்; பரஸ்திரீகளுடன் சம்மந்தம் வைத்துக்கொள்ள மாட்டார்கள். இதற்குமாறு செய்பவன் பாவவாளியாகும்; மறுமைநாளில் அவனுக்கு இரட்டிப்பான தண்டனை கிடைக்கும்; அதே வேதனையில் சதாவும் தாழ்மைப்பட்டுக் கிடப்பான். ஆனால் எவர்கள் தாங்கள் செய்த குற்றத்திற்கு அல்லாஹ்தஆலாவிடம் மன்னிப்புத்தேடி சாலிஹான நற்காரியங்கள் புரிய முற்படுகின்றார்களோ அவர்களுடைய பாவங்களை அல்லாஹ் மன்னிப்பதுடன் அப்பாவங்களை நன்மைகளைக்கொண்டு மாற்றிவிடுகிறான். அல்லாஹ் மன்னிப்பவனும் கிருபையாளனுமாகும். எவன் பாவமன்னிப்புத்தேடி நற்கருமங்கள் புரிய முற்படுகிறானோ அவன் அல்லாஹ்வின் பக்கல் திரும்பியவனாகும். இன்னும் அல்லாஹ்வின் அடியார்கள் பொய்சாக்ஷி சொல்லமாட்டார்கள். வீண்வார்த்தைகள் நடைபெறும் இடத்தின் வழியாக செல்லும்படி ஏற்பட்டால் வெகு சங்கையோடு அந்த இடத்தைவிட்டுக் கடந்து விடுவார்கள். இன்னும் அவர்கள் முன் அல்லாஹ்வின் திருஷ்டாந்தங்கள் எடுத்துக் காட்டப்படுமாகில் செவிடர்

குருடர்கள் போன்று குப்புற அடித்து விழுந்துவிடமாட்டார்கள். அந்த அடியார்கள், எங்களுடைய நாயனே! எங்கள் குடும்பத்தார் சந்ததிகளினின்று கண்குளிர்ச்சியை அளித்தருள்வாயாக; சாலிஹான நல்லடியார்களுக்கு முதன்மையானவர்களாக ஆக்கிவிடுவோயாக, என பிரார்த்திப்பார்கள். அந்த சாலிஹான நல்லடியார்கள் கஷ்டத்தை சகித்துக்கொண்டு நற்கருமங்கள் புரிவதன்மீது ஸ்திரமாக விருந்ததன் காரணமாக மேலான சுவன பதவியை அடைவார்கள். அதில் அவர்களுக்கு ஈடேற்றமும் சுகமும் கிடைக்கும். இந்த சுவர்க்கம் சதாவுமிருக்கும், தங்குவதற்கு தக்க இடமுமாகும்.''

மேலே கூறப்பட்டுள்ள ஆயத்தில் அல்லாஹ்தஆலா தன் அடியார்களுக்குள்ள சில அடையாளங்களைக் குறிப்பிடுகிறான். இவ்வடையாளங்களின் காரணமாக இன்னோர் மற்றவர்களைவிட தனிச் சிறப்பினை யுடையவர்களாகி விடுகின்றார்கள். அத்துடன் இன்னோரின் மனோதிருப்திக்காக, அவர்களின் செய்கைகளுக்குக் கிடைக்கக்கூடிய நற்கூலிகளையும் விபரித்துளான். மேலும் நல்லடியார்களது செய்கைகளுக்கு மாற்றமாய் கெட்டகாரியங்கள் புரிபவர்களுக்குக் கிடைக்கக்கூடிய தண்டனையையும் குறிப்பிட்டுக் காண்பித்திருக்கிறான். ஆகவே மேலே கூறப்பட்டுள்ள அல்லாஹ்வின் திருவசனத்தை அவனது அடியார்களாகிய நாம் நல்லவிதமாக நோட்டமிட்டுப்பார்த்து அந்த அடியார்களுக்குள்ள எந்த அடயாளங்களைப் பெற்றுக் கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும்; நாம் எவ்வாறான காரியங்கள் புரிவதை இஸ்லாம் விரும்புகிறது என்பனவற்றை நன்கு ஆராய்ந்து பார்த்தல் அத்தியாவசியமாகும். தவிரவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அடையாளங்கள் நம்மிடமிருக்கிறதா? அல்லாஹ்வின் அடியார்களென்று நாம் அழைக்கப்படுவதற்கு தகுதியுடையவர்களாக இருக்கிறோமா என்பன போன்ற விஷயங்களையும் நன்காராய்ந்து பார்த்தல்மிகமிக அவசியமாகும்.

அல்லாஹ்த ஆலாதனது சாலிஹான-நல்லடியார்களைக் குறிப்பிட்டு, அவர்கள் பூமியின்மீது நடப்பார்களாயின் அடக்கம் ஒழுக்கத்துடன் மெதுவாக நடப்பார்களென்று இந்த ஆயத்தின் ஆரம்பத்தில் கூறியிருப்பதால், இதற்கு மாற்றமாய் ஒழுக்கமற்ற முறையில் நடப்பது அகப்பெருமை கொள்வதாகவிருக்கும்.

இரண்டாவதாக, அல்லாஹ்தஆலாவின் நல்லடியார்கள் கல்வியறிவற்ற மடையர்களைச் சந்திப்பார்களாயின் அன்னோருடன் தர்க்கமாடாமலும், கடும் மொழிகளை உபயோகித்து சச்சரவு செய்து கொண்டிராமலும் இன்மொழிகளைக் கொண்டு வார்த்தையாடி, பிணக்கு ஏற்படாது செய்து அவர்களை விட்டு சலாமத்தாய்ச்சென்று விடுவார்கள் என்று அறிவிக்கிறான்.

மூன்றாவதாக, அல்லாஹ்தஆலாவின் நல்லடியார்கள், இராக்காலங்களின் சிலவற்றில் சஜ்தா செய்து கொண்டும் சிலவேளை நின்று வணங்கிக் கொண்டுமிருப்பார்களென்றும் இவ் வணக்கம் வேறு எந்தக் கருத்துக்குமன்றி அல்லாஹ்த ஆலாவிற்காகவே இருக்குமென்றும் கூறியிருக்கிறான்.

நான்காவதாக, அன்னோர் நரகத்தின் வேதனையை விட்டு கார்மானம் தேடுவார்கள். அதாவது, நற்கருமங்கள் புரிவது கொண்டு அவர்கள் மனதில் அகப்பெருமை ஏற்படாது சதாவும் அல்லாஹ் தஆலாவின் அதாபை-வேதனையை பயந்து அவனது கோபப் பார்வை ஏற்பட்டு விடாது பிரார்த்தனை புரிந்தவர்களாகவே இருப்பார்கள் என்று கூறியிருக்கிறான்.

ஐந்தாவதாக, அல்லாஹ் தஆலாவின் திருவசனங்கள் அன்னார்பால் ஓதிக்காண்பிக்கப்படுமாகில் குருடர் செவிடர்களே போல் அதை விட்டு புரக்கணித்துச் செல்லாது அவ்வசனத்தின் கருத்துக்களை நோட்டமிட்டு அதன்படி அமல் செய்பவர்களாக இருப்பார்களென்றும் கூறியிருக்கிறான். மேலும் அவ்வடியார்கள் சதாவும் யாஅல்லாஹ்! எங்கள் பெண்சாதி பிள்ளைகளினின்று எங்களுக்குக் கண் குளிர்ச்சியைத் தந்து சாலிஹீன்களின் கூட்டத்தில் சேர்த்துவைப்பாயாக, வெனவும் பிரார்த்தனை புரிவார்கள் என்று கூறியிருக்கிறான். ஆகவே, மேலே கூறப்பட்டுள்ள சற்குணங்களுடன் சிறந்து விளங்குபவர்களே அல்லாஹ்த ஆலாவின் உண்மையான நல்லடியார்களாகுமென்பது நமக்கு நன்கு தெரியவருவதால், அச்சிறந்த சற்குணங்களைக் கைகொண்டு சிறப்புற்று விளங்குவதற்கு நாம் முயற்சிப்போமாக,

---

அல்ஹதீது

ஒரு தடவை எமன் தேயத்து வியாபாரி ஒருவர் எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் சமூகம்வந்து, அல்லாஹ்வுடைய ரசூலே! மனிதன் எந்த நிலைமையில் இதரார்களிடம் யாசகம் கேட்பது ஆகுமாகக்கப்பட்டிருக்கிறது, என்று வினவினர். அதற்கு சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள், "மானிடன் இதரார்களிடம் எந்த வஸ்துவையும் கேட்பது கூடாது, ஆனல் அவனுடைய ஐசுவரியங்களெல்லாம் பாழடைந்து அவன் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையில் இதரார்களிடம் கேட்கலாம். அதவும் கஷ்டத்தைப் போக்கிக்கொள்ளும் வரைதான் பெற்றுக்கொள்ள வேண்டும். இன்னும் யாருக்காகிலும் மிடிமைத்தனம் ஏற்பட்டுவிடுமாகில் அவனுடைய அந்த கஷ்டத்தைப்போக்கிக் கொள்ளுவதற்கு மட்டும் இதரார்களிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்" என கூறியதாக ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி.) அவர்களால் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் அல்லாமா அப்துல் அஜீஜ் ஷாவீஷ் அவர்கள் இந்த ஹதீதுக்கு விரித்துரை கூறுங்கால், "யாசகம் கேட்பதை இஸ்லாம் மார்க்கம் எவ்வளவு தூரம் வெறுத்திருக்கிறதோ அதைப் போல் எந்த மதமும் அதனை வெறுக்கவில்லை என்பது திண்ணம். இதற்குக் காரணம், மனிதன் யாசகம் வாங்குவதற்காக இதரார்களை எதிர்பார்ப்பதுகொண்டு இவனுடை உரோஷம் மானிடத்தன்மை இவைகளெல்லாம் இல்லாது அழிந்தொழிந்துபோகிறது. துர்அதிஷ்டவசமாக இக்காலை யாசகம் வாங்க முற்பட்டிருப்பவர்களில் முஸ்லிம்கள் தான் அதிகமாய்க் காணப்படுகிறார்கள். இது வருந்தக்கூடிய சம்பவமாக விருக்கிறது. முன்னெரு காலத்தில் ஐசுவரியவான்கள் தானதர்மங்கள் செய்வதற்காக மதீனவின் வீதிகளைச் சுற்றிவந்து, தாங்கள் அளிக்கும் தர்மத்தைப் பெற்றுக்கொள்பவர்களைத் தேடியும் அதனைப் பெற்றுக்கொள்வதற்குயாவரும்முன்வராது கஷ்டத்துக்குமேல் அதிகமான கஷ்டங்களை அனுபவித்துக்கொள்வதற்குச் சம்மதித்தார்களேயன்றி இதரார்கள் கொடுப்பதைப் பெற்றுக்கொள்ளச் சம்மதித்தார்களில்லை; இதரார்களிடம் யாசகத்தின் கைகளை நீட்டினார்களில்லை. இக்காலத்திலோ ஆயிரக்கணக்கான மக்கள் பிச்சை வாங்குவதையே தங்கள் தொழிலாகக் கொண்டுள்ளார்கள். அதிலும் முஸ்லிம்களில் நாளுக்குநாள் சோம்பேறித்தனமும் வேலை யில்லாமையும் அதிகமாய்க்கொண்டே போகிறது. ஆகவே, நம் முஸ்லிம் சமுகம் இச் க்ஷீண திசையினைக் கண்டு அதற்கு தக்க பரிகாரஞ்செய்ய முன் வரவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

ஒருநாள் நபிகள்பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் தங்கள் இனத்தார்களை ஒன்று சேர்த்து அர்த்தபுஷ்டியுள்ள ஓர் சொற்பெருக்காற்றினார்கள். அதில், பனூஹாஷிம்காள்! உங்களை நரகத்தின் நெருப்பைவிட்டுக் காற்றுக் கொள்ளுங்கள். அப்துல்முத்தலி பின் சந்ததிகாள்! உங்களை நரகத்தின் நெருப்பைவிட்டுக் காற்றுக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் வேதனைவிட்டு உங்களைக் காப்பாற்றும் அதிகாரம் நான் பெற்றிருக்கவில்லை, எனக் கூறியதாக ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு உமர் (ரலி.)அவர்களால் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் இமாம்கஸ்லானீ (றஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், எவர்கள் தங்கள் தகப்பன் பாட்டன்மார்களின் காரியங்களைக்கொண்டு பெருமை பேசி வருகின்றார்களோ, இன்னும் தங்கள் வம்சத்தின் கெவர்தியைக் கூறி அதனல் தங்களுக்கு பிரத்தியேக விசேஷித்த மதிப்பு ஏற்பட்டிருக்கிறதாக கருதிக்கொள்கிறார்களோ அன்னோர் இந்த ஹதீதின் கருத்தை சிந்திக்கவேண்டுமென்றும், சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களுடைய இவ்வரும் மொழிகளில் அன்னோர் உணர்ச்சிபெறக்கூடிய அரும் வாக்கியங்கள் அமைந்திருக்கின்றனவென்றும், அல்லாஹ்தஆலாவின் சன்னிதானத்தில் சாலிஹான நல்ல அமல்களைத் தவிர வேறு எந்த வஸ்துவும் எவ்விதப் பிரயோஜனமும் செய்யமாட்டாதென்றும் கூறியிருக்கிறார்கள்.

மேலும் எந்த மனிதன் சாலிஹான நல்ல அமல் செய்யாது தன் தகப்பன் பாட்டனுடைய செய்கையின்மீது பெருமை பாராட்டிக் கொண்டிருக்கிறானோ அவனை பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் வெறுத்திருக்கிறார்களென ஹஸ்ரத் அபூதர்ர கிபாரீ (ரலி.) அவர்களால் றிவாயத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும், ஜாமிஉல்மஆரிப் என்ற கிரந்தத்தில் வரையப்பட்டிருக்கிறது.

நபிகள் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஒரு நாளன்று ஹஸ்ரத் பாத்திமா ஜுஹ்றா (ரலி.) அவர்களை அழைத்து அருமை மகளே! சாலிஹான நல்ல காரியங்கள் செய்வதிலீடுபடுவாயாக! நீ ரசூலுல்லாவுடைய மகளாக விருப்பதால் கியாமத்—மறுமை நாளில் எவ்வாறான கேள்வியும் ஏற்படாது என்று கருதலாகாது. உங்களில் யார் பேணுதலுடையவர்களாக இருக்கின்றார்களோ அவர்கள்தான் அல்லாஹ்தஆலாவிடம் சங்கையானவர்களாகும்; நான் அல்லாஹ்வுடைய ரஸூல் என்பதில் எவ்வாறான சந்தேகமும் கிடையாது. ஆனால் யாரையும் அவனுடைய வேதனையை விட்டு நானே காப்பாற்றுவதற்காக யான் சக்தி பெற்றிருக்கவில்லை, எனக் கூறினார்களெனவும் ஜாமிஉல் மஆரிப் என்ற கிரந்தத்தில் வரையப்பட்டிருக்கிறது.

ஒரு நாளன்று நபிகள் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் ஒற்றுமையோடு வாழ்வது, மனத்தூய்மை கொண்டிருத்தல் ஆகியவைகள் சம்மந்தமாய் சொற்பெருக்காற்றி வருங்காலை, ஒரு மனிதனுடைய ஹிருதயத்தில் ஈமானும் இதரர்கள்மீது வெறுப்புக் கொள்வதும் ஒன்று சேர்ந்திருக்கமாட்டாது என, அறிவித்ததாக ஹஸ்ரத் அப்துல்லாஹிப்னு ஜுபைர் (ரலி.) அவர்களால் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் அல்லாமா அப்துல் அஜீஸ் ஷாவிஷ் (ரஹ்.) அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், மனிதர்களுடைய வாழ்க்கையில் எப்பொழுதாகிலும் விதர்ப்பம், பகைமை கொள்ளல் ஆகிய துர்குணங்களின் பெரும்புயல் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் விரோதிகளே போலாய் விடுகின்றனர். இவ்வாறு ஏற்படுவது மானிடத் தன்மைக்குரிய சுபாவமேயாகும். ஆனால் இந்த விரோதத்தை வளர்த்துக்கொண்டுபோய் விரோதத்தின் தீ அதிகமாகும்படி செய்வது மானிடத் தன்மைக்கு வெகு தூரப்பட்டதும், மிருகத் தன்மையினளவில் கொண்டு சேர்ப்பதுமாக விருக்கிறது. நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களது தூய்மை பொருந்திய காலத்திலுங்கூட முஸ்லிம்களுக்கிடையே பல வாறான சச்சரவுகள் தோன்றிக்கொண்டு தானிருந்தது. ஆனால் அவ்வுத்தமர்கள் விரோதமென்னும் தீயை வளர்த்துக் கொண்டுபோகாது அதனை அணைத்து விடுவதற்கே முயற்சித்து, ஒருவரோடொருவர் ஒற்றுமையாக வாழ்வதற்கே முயற்சித்து வந்தார்கள். இச்சிறந்த குணங்கள் அன்னாரில் சிறப்புற்று விளங்கிய தன் பயனாகவே அவர்கள் உலகம் போற்றும் உத்தமர்களாய்த் திகழ்ந்தார்கள் எனக் கூறியியிருக்கிறார்கள்.

ஒரு நாளன்று நபிகள் பெருமானார் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் கெட்ட எண்ணங் கொள்ளுவதினாலேற்படும் நஷ்டங்களை விவரித்து வருங்காலை, "கெட்ட எண்ணம் வைப்பதினின்று பேணுதலாக இருந்துகொள்ளுங்கள்; நிச்சயமாக கெட்ட எண்ணம் கொள்ளுவது மிக மிக கெட்டதாக இருக்கும்" என கூறியதாக ஹஸ்ரத் அப்துல்லா ஹிப்னு உமர் (ரலி.) அவர்களால் றிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத் அல்லாமா சாலிஹ் ஜலாயிரி அவர்கள் இந்த ஹதீதை விரித்துரைக்குங்கால், கெட்ட எண்ணம் வைப்பது பித்னா பஸாது ஏற்படுவதற்குள்ள மூலகாரணமாகும். இதற்காகத்தான் பெருமானார் (ஸல்.) அவர்கள் இதனை பொய், படுதூர் கூறல் ஆகியவைகளில் சேர்த்திருக்கிறார்கள். சங்கைவான்களான சஹாபாக்கள் கெட்ட எண்ணம் கொள்ளுவதை கெடுதியாகக் கருதி ஒருவரோடொருவர் நல்ல எண்ணங் கொள்வதையே நேசிக்கிறவர்களாக விருந்தார்கள். ஹஸ்ரத் காலிதிப்னு வலீத் (ரலி.) அவர்களிடம் ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி.) அவர்கள் சம்மந்தமாக ஏதோ தூஷணையான வார்த்தைகள் கூறப்பட்டபோது ஹஸ்ரத் காலித் அவர்கள், அல்லாஹ்வின் மீது பிரமாணமாக அபூஉபைதா அவர்கள் மீது யான் எவ்வாறான கெட்ட எண்ணமும் கொள்ளமாட்டேன்; அவர்கள் மகாசிரேஷ்டமானவர்களாகும் எனக் கூறவே, இடையில் பித்னா பஸாது என்னும் நெருப்பை மூட்டுவதற்குப் பிரயத்தனம் செய்தவர்கள் ஆதரவு அற்றுவிட்டார்கள், எனக் கூறியிருக்கிறார்கள்.



ஹஜ்ஜுப் பெருநாள்

இஸ்லாம் மதத்தின் பிரதமக் கடமைகள் ஐந்தினுள் ஒன்ருன ஹஜ்ஜுக் கடமை அதிசீக்கிரம் நாளை மறுநாள் ஹிஜாஸில் வெகு சிறப்பாக நிறைவேற்றப்படும். உலகிலுள்ள பல பகுதிகளி லிருந்தும் லக்ஷக் கணக்கான முஸ்லிம்கள் அங்குச்சென்று அக்கடமையை நிறைவேற்றி வருகிருர்கள். இக்கடமை ஆண்டுதோறும் நிறைவேற்றப்படினும் முஸ்லிம்களில் இயல்புள்ளவருக்கு வயதில் ஒருமுறை நிறைவேற்றுவதுதான் கடமையாக இருந்துவருகிறது. எனினும், இக்கடமையை இயல்புள்ளவரும், இயல்பில்லாதவரும் ஒருங்கே நிறைவேற்றுவதுமல்லாமல், சந்தர்ப்பம் வாய்ப்பின் ஒருமுறைக் கதிகமாகவும் நிறைவேற்றுகின்றனர். இஸ்லாம் மதத்திலுள்ள கடமைகள் 5-ல் இது ஒன்றைத் தவிர பாக்கியுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு இடநிர்ணயங்கிடையாது. முஸ்லிம்கள் எந்த ஊரிலிருந்தாலும் சரி அந்த ஊரிலிருந்துகொண்டே அவைகளை நிறைவேற்றிவிடலாம். ஆனல், ஹஜ்ஜுக் கடமையை அவ்வாறு நிறைவேற்றுதல் முடியாது. எத்தேசத்தாராயினும் சரி, எவ்வளவு தூரத்தவராயினும் சரி யாவரும் ஹிஜாஸில் திருமக்காவிற்கு வந்து சேர வேண்டியதவசியமாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்னெனின், திருமக்காவிலுள்ள கஃபா என்ற ஆலயம், மனிதவர்க்கத்திற்கு மூலப்பிதாவான ஹஜ்றத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களால் தெய்வ வணக்கத்திற்கென்று முதல் முதலாகக் கட்டப்பட்டது. எனவே, இவ்வாலயம் அவர்களது சந்ததியினராகிய மனிதவர்க்கம் முழுவதற்கும் பொதுவானதாகவும், சமபாத்தியமுள்ளதாகவுமிருக்கிறது. இவ்வாலயம் ஒன்றைத் தவிர்த்து இக்குவலயத்திலுள்ள இதர ஆலயங்களிற் பல புராதனமானவையாகவும், பெரியார்களால் கட்டப்பட்டனவாகவுமிருந்தபோதினும் அவைகள் குறிப்பிட்ட ஒரு தேசத்திற்கோ அல்லது ஒரு வர்க்கத்திற்கோ அல்லது ஒரு ஜாதியினருக்கோ மட்டிலும் பாத்தியமுள்ளவை என்று கொண்டாடப்படத் தகுந்தனவாகவே இருக்கின்றன. மேலும், இவ்வுலகில் இவ்வாலயமிருக்குமிடத்தில்தான் முதல்முதலாக இறைவணக்கம் செய்யப்பட்டிருப்பதால் இதற்கு எப்பொழுதும் விசேஷ மகத்துவமிருந்துவருகிறது. எனவே, இந்த ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்ற உலக முஸ்லிம்கள் மக்காபுரியிலுள்ள இவ்வாலயத்திற்குச் செல்வதானது இவ்வாலயம் இவ்வுலகம் முழுவதற்கும் பொதுவாகவுள்ள புண்ணியஸ்தலம் என்பதை உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது. மக்காபுரியிலுள்ள மக்கள் இவ்வாலயத்தினண்டையில் வாசஞ்செய்பவர்களாக இருந்தும் உலகமக்களுக்குள்ள இந்த பாத்தியதையை அவர்கள் இல்லை என்று மறுத்துக்கூறவுமில்லை; கிரியாம்சையில் அவ்வாறு நடந்துகொள்ளவுமில்லை. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இக்காசினியிற்றோன்றி இஸ்லாம் மதத்தைப் பிரசாரம் செய்வதற்கு முந்தி

யும் கூட ஆங்குள்ள இவ்வாலயத்திற்கு உலகத்தின் நாலாபக்கங்களிலிருந்தும் மக்கள் லக்ஷக்கணக்கில் வந்து தரிசித்துச் செல்லுவதும், அப்படிவந்த ஜனங்களை ஆங்குள்ளவர்கள் உபசரித்து உதவிபுரிவதும் வழக்கமாகவும் இருந்து வந்திருக்கிறது. இக்காரணம் பற்றியே இவ்வாலயத்தைச் சுற்றிலும் குடியிருந்து வந்த குரைஷியருக்கு அக்காலத்திலும் கண்ணியம் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே, உலகமக்களனைவருக்கும் சமபாத்தியமாகவுள்ள புண்ணிய ஸ்தலத்தில் இன்னும் இரண்டு தினங்களுக்குள் லக்ஷகணக்கான புண்ணியவான்கள் தங்களது கடமையை நிறைவேற்றிவைப்பார்கள்.

இந்த ஹஜ்ஜுக் கடமையில் செய்யும் கிரியைகளில் ஒவ்வொன்றையும் தனித்தனியே எடுத்துக்கொண்டு, அவைகள் ஏற்பட்டதன் ஆதிக் காரணத்தை நாம் ஆராய்ச்சிசெய்வோமாயின், மாந்தருக்கு மாற்றமிலாவாண்டவன் இம்மாநிலத்திற் செய்த பெரும் அருள்களை நமக்கு நினைப்பூட்டுவதற்காகவே அவைகள் ஏற்படுத்தப்பட்டனவென்பது தெரியவரும். இவைகளைப்பற்றி இங்கு விரித்தெழுதமுடியாததால் விடுத்தனம். ஆனல், திருமக்காவில் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றும் சமயத்தில் உலகத்திலுள்ள எல்லா இடங்களிலும் நம்மவர் ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாடுகின்றனர். இவர் இப்படிக் கொண்டாடுவதற்குக் காரணம் யாது என்பதை இவ்விடத்தில் சுருக்கமாக விமர்சனம் செய்வோம். முற்காலத்திலிருந்த நமது முன்னேர்கள் இறைவன்மாட்டுத் தாங்கள் கொண்டிருந்த பக்தியின்மேலீட்டால், தங்களுக்குப் பிறக்கும் முதற்குமாரனை இறைவனுக்குத் தத்தம் செய்துவந்தனர். சிற்சில தேசத்தார் முதற் புதல்வனைக் கொன்று பலியிட்டும் வந்தனர். இப்படிப் பலியிடுவதால் இறைவனுக்குப் பரம திருப்தியுண்டாகும் என்று நினைத்துக்கொண்டுமிருந்தனர். இவ்வித நினைப்புச் சரியானதல்லவென்பதை இக்காலத்திலுள்ளவர் இப்பொழுது நன்கு தெரிந்துகொண்டிருந்தாலும் அக்காலத்திலிருந்தவர்கள் இதனை மிகவும் சரியானதென்றே கருதி வந்தனர். சுமார் 5000 வருஷங்களுக்கு முன் ஹஜ்றத் இப்ராஹீம் நபி (அலை.) அவர்கள் இறைவன்மாட்டு அதிக பக்தி விசுவாசம் கொண்டு, அவனுக்காகத் தொண்டாற்றி அம்முறையில் அநேகம் தியாகங்களைச் செய்திருக்கிருர்கள். இப்பெரியாருக்கு வெகுகாலமாகப் புத்திர பாக்கியமில்லாதிருந்தது. இறுதியாக வயோதிகப் பருவமடைந்தபின் இறைவன் தனது கிருபை கடாக்ஷத்தால் இப்பெரியாருக்குப் புத்திர பாக்கியத்தை அளித்தான்.

எனவே, ஹஜ்றத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவர்களுக்கு முதற்குமாரராகப் பிறந்தார்கள். இவர்கள் பிறந்த சில காலத்திலிருந்தே பல சோதனைகளுக்குத் தந்தையும் தனயரும் உட்படவேண்டியதாக இருந்தது. சுமார் 86 வயது வரை புத்திரனைக் காணமலிருந்து அப்பால் பெற்றெடுத்த புத்திரரையும், அப்புத்திரரின் மாதாவாகிய தமது இரண்டாவது மனைவியையும், தண்ணீரில்லாத பால வனத்தில் விட்டுவிடும்படி இறைவன் கட்டளையிட்டான். இறைவனது கட்டளைக்கு இம்மியளவும் மாறு செய்யாது நடப்பவரான நமது ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் தமது அன்பிற்குரிய மனைவியையும் அருமைப் புதல்வரையும் அவ்வண்ணமே விட்டுவிட்டார்கள். கல்லுக்குள்ளிருக்கும் தேரைக்கும், கற்பத்திலிருக்கும் சிசுவுக்கும் இரணம் கொடுத்துக் காப்பவனுன இரக்ஷகனுக்கு தனது நல்லடியாரான இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களது மனைவியையும் புதல்வரையும் காப்பது அரிதல்லவாதலின், தாயையும் குழந்தையையும் அற்புதமாகக் காத்து ரக்ஷித்து வளர்த்

தான். பிறகு சிறிது காலத்திற்குப் பின் ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாமவர்கள் தங்கள் மனைவியையும் மைந்தரையும் பார்க்க வந்திருந்தபோது தமது மைந்தரைத் தாம் இறைவனுக்கு அறுத்துப் பலியிடுவதாகச் சொற்பனம் கண்டார்கள். நபிமார்கள் காணும் கனவுகளிற் பல வஹீயாக இருப்பதுண்டு. ஆகவே, ஹஜ்றத் இப்ராஹீம் (அலை.) அவர்கள் நபியாக இருந்ததால், இந்தச் சொற்பனம் தெய்வக் கட்டளை என்று தீர்மானித்து,தங்கள் புதல்வரிடம் விஷயத்தைக் கூறினர்கள். இப்புதல்வனர் நபியாக இருந்ததால், விளையும் பயிர்முளையிலேயே தெரியும் என்றபடி குழந்தையாக இருந்த அந்தக் காலத்திலேயே இறைவன் திருச் சம்மதத்திற்காகத் தமது இன்னுயிரையும் தியாகம் செய்யத் துணிந்து, தமது தந்தையார் தம்மை இறைவனுக்காக அறுத்துப் பலியிடும்படி தம்மையே ஒப்புக் கொடுத்தார்கள். தந்தையும் தனயரும் இறைவன்பால் இவ்வளவு பக்திகொண்டிருந்தார்கள் என்பது மட்டுமல்ல, ஹஜ்றத் இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாமவர்களது அன்புக்குரிய மனைவியும், ஹஜ்றத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலா மவர்களது மாதாவுமாகிய ஹஜ்றத் ஹாஜரா அவர்கள் இறைவனது கட்டளைப்படி தமது ஈறல் குலைத்துண்டாகிய ஒரே புதல்வரைத் தமது கணவர் அறுத்துப் பலியிட முழு மனதுடன் ஒத்துழைத்தார்கள். தியாகமே உருவெடுத்த இக்குடும்பத்தார் இறைவனது கட்டளைக்கு எள்ளத்தனையும் பிசகாமல் கீழ்ப்படிந்த இந்தக் காரியத்தை இறைவன் அங்கீகரித்துக்கொண்டு, ஹஜ்றத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அறுக்கப்பட்டுப் பலியாகாமற் காத்துக்கொண்டதுடன் நரபலி கொடுக்கும் வழக்கத்தையும் அடியுடன் நிறுத்திவிட்டான். எனவே, ஹஜ்றத் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களது குறல்வளையில் பட்ட அதே கத்தியானது அவருக்குப் பதிலாக வேறொரு ஆட்டை அறுத்துப் பலி செய்தது. உலகத்தில் அன்று முதல் எத்தனையோ ஆயிரம் மனிதர்கள் உயிர் பிழைத்தனர் என்னலாம். இப்பெரும் அருளை ஹஜ்ஜுப் பெருநாளன்று முஸ்லிம்கள் பண்டிகையாகக் கொண்டாடி அன்றைய தினத்தில் ஆட்டையறுத்துக் குர்பானி செய்துவருகிறார்கள். இந்தப் பெருநாளானது இன்றும், இதற்கு முன்னும் இவ்வருளையே மக்களுக்கு நினைப்பூட்டுவதாக அமைந்துளது. இன்ஷா அல்லாஹ் இனி என்றும் அவ்வாறே நினைப்பூட்டிக் கொண்டிருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. எனவே, உலகமக்களுக்கு இறையருள் சுரந்ததை நினைப்பூட்டுவதும், அவ்வருளுக்கு நன்றியாகச் செய்ய வேண்டுமென இஸ்லாம் மதம் விதித்திருப்பதுமாகிய குர்பானி என்னும் கடமையை முஸ்லிம்கள் அன்று முதல் இன்றுவரை மிகவும் பயபக்தியுடன் செய்து வருகின்றனர். இவ்வாறான இப்பெருங் கடமையை முஸ்லிம்கள் நிறைவேற்றுவதை இற்றைநாளிலுள்ள இந்திய சகோதரர்களிற் பலர் தவறாக நினைத்துக்கொண்டு ஏட்டிக்குப் போட்டி என்ற முறையில், மஸ்ஜிதின் முன் மேளம் வாசிக்கவேண்டும் என்று பிடிவாதம் செய்து நாட்டில் பிளவையும் வேற்றுமையையும் உண்டுபண்ணி வைத்துவிட்டனர். இஸ்லாம் மதம் சிக்கனத்தையும் மிதச் செலவையும் போதித்து அவைகளை வற்புறுத்தும் மதமாதலால் மேளம் வாசித்தல், கூத்துப் போடுதல், நாடக மாடுதல் முதலிய வீணான விளையாட்டுகளை அடியுடன் தடுத்திருப்பதுடன் ஆடு, மாடு, ஒட்டகை ஆகியவைகளில் எதையேனும் பலியிட்டுக்கொள்ள அனுமதித்திருக்கிறது. ஆடு சிறிய பிராணியாதலின் ஒருவருக்கு ஒரு ஆடு என்றும், மாடு ஒட்டகை ஆகியவைகள் பெரிய பிராணியாதலின் ஏழு

பேருக்கு ஒரு பிராணி என்றும் நிர்ணயித்திருக்கிறது. நமது தமிழ் நாட்டில் பெரும்பாலும் ஆடுகள் மலிவான விலைக்குக் கிடைக்கின்றன வாதலின் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் அநேகமாய் மாடோ அல்லது ஒட்டகையோ குர்பானி கொடுக்கப்படுவதில்லை. இங்கு இந்தப் பிரசினையும் கிடையாது. ஆனல், வட இந்தியாவில் ஆடுகளின் விலை அதிகமாகவும் மாடுகளின் விலை மலிவாகவும் இருப்பதால் அங்குள்ள முஸ்லிம்கள் மலிவான பிராணியாகிய மாட்டை வாங்கி அறுத்து குர்பானி செய்கின்றனர். இதனல் குறைந்த செலவு ஏற்படுவதுடன், ஏழு பேருக்கு ஒரு குர்பானியாகவும் நிறைவேறி விடுகிறது. மேலும் அகிம்ஸை, ஜீவகாருண்யம் என்ற பிரசினையைப் பலமாக வற்புறுத்தும் கோஷ்டியினர், முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் ஒரு ஆட்டை அறுத்து லக்ஷக்கணக்கான பிராணிகளைக் குர்பானி செய்வதற்குப் பதிலாக ஏழு பேருக்கு ஒன்றுவீதம் குறைந்த அளவில் பிராணிகளை அறுத்து தங்கள் மார்க்கக் கடமையை நிறைவேற்றிக் கொள்ளட்டும் என்று முஸ்லிம்களிடம் பிரசாரம் செய்து அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். உண்மை இங்ஙனமிருக்க, ஒரு கொள்கையிலும் ஸ்திரமாக இல்லாத பொறுப்பற்ற பத்திரிகை ஒன்று, பேபர் சக்கிரவர்த்தி பசு குர்பானி கொடுக்கவேண்டாமென்று தமது மைந்தரான ஹுமாயூன் சக்கிரவர்த்திக்கு உபதேசித்தார் என்பதாக, பெரிய கொட்டை எழுத்தில் பிரசாரம் செய்யத் தொடங்கி இருக்கிறது. பேபர், ஹுமாயூன் ஆகியவர்கள் இந்தியாவைக்கட்டி ஆண்ட சக்கிரவர்த்திகளாவார்கள். இவர்களிடம் பணத்திற்கு தரித்திரமில்லை. பணத்திலேயே புரளுகிற இச்சக்கிரவர்த்திகள் ஒரு மாட்டிற்கு பதிலாக 7-ஆடுகளைக் குர்பானி செய்வதால் அவர்களுக்குப் பிரமாதமான நஷ்டமொன்று விளைந்துவிடாது. இக்காலத்தில் செல்வ நிலைமையில் ஏனைய சமூகத்தினரைப் பார்க்கினும் பின்னடைந்திருக்கிற முஸ்லிம் பொது ஜனங்கள், நபர் ஒன்றுக்கு ஒரு ஆடு வீதம் குர்பானி கொடுப்பது கொண்டு முஸ்லிம் சமூகத்திற்கு லக்ஷக்கணக்கான ரூபாய்களை நஷ்டப்படுத்திக்கொள்ள முடியாது என்பதை அப்பத்திரிகை உணர்ந்து கொள்ளுமாக. தவிரவும், அரசர்களாகவுள்ளவர்கள் தங்கள் பிரஜைகளின்பால் நடந்துகொள்வதுபோல் எல்லாப் பிரஜைகளும் நடந்துகொள்ளவேண்டும் என்பது கட்டாயமல்ல. அரசர்கள் சட்டவரம்பிற்கு மீறியவர்கள் என்று தாவாச் செய்யப்பட்டுவரும் இக்காலத்தில், ஒரு அரசர் செய்த காரியத்தை மற்றவர் செய்யவேண்டும் என்று எதிர்பார்ப்பது மூடத்தனமேயாகும். அதே பேபருடைய வம்சத்திலுதித்த சில அரசர்கள் மதுபான மருந்தியதாகவும், ஹிந்துக்களைப் போல் நாமம் போட்டுக்கொண்டிருந்ததாகவும் சில சரித்திரக்காரர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இவர்கள் எழுதி இருப்பது உண்மை என்று வைத்துக் கொள்வதாயின் இந்த அரசர்கள் மதுபானம் அருந்தியதற்காக இந்தியாவிலுள்ள எல்லா முஸ்லிம்களும் மதுபானம் அருந்தவேண்டுமா? இந்த அரசர்கள் நாமம் போட்டுக்கொண்டு கோவணமும் கட்டியதைப் பின்பற்றி இந்தியாவிலுள்ள எல்லா முஸ்லிம்களும் நாமம் போட்டுக்கொண்டு கோவணம் கட்டவேண்டுமா என்பதை அப்பொறுப்பற்ற பத்திரிகை கவனித்துப் பார்க்கட்டும். முஸ்லிம்களின் மார்க்க விஷயத்திற்கு திருகுர்ஆன், ஹதீது இமாம்களாய மகான்களின் சொல் ஆகியவைகளே தற்போது வழிகாட்டிகளாக இருக்கின்றனவேயன்றி முற்காலத்திலிருந்த அரசர்கள் தங்கள் குடும்பத்திற்குமட்டிலும் ஏற்படுத்திக்கொண்ட ஒரு வழக்கம் முஸ்லிம் சமூகத்திற்கு வழிகாட்டியாக

இருக்கமுடியாது என்பதை அப்பத்திரிகை உணரட்டும். மேலும், பேபர் சக்கிரவர்த்தி பசு பலி செய்யவேண்டாமென்று தமது மைந்தருக்குத் தான் கட்டளையிட்டாரேயன்றி தம்முடைய முஸ்லிம் பிரஜைகளுக்குக் கட்டளையிடவில்லை என்பதை அப்பத்திராசிரியர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். இந்தப் பத்திரிகையில் வெளிவந்த இவ்வியாசத்தைப் பார்த்து முஸ்லிம்கள் ஏமார்ந்து போகும் காலம் மலையேறிவிட்டது. ஆதலின், இஸ்லாம் என்ற பெயரை வைத்துக்கொண்டு இஸ்லாத்திற்கு முரணான பிரசாரம் செய்து இனி வெற்றியடையமுடியாது என்பதை இவர்கள் உணருவார்களாக.

ஈதுல் அல்ஹா

உலக முஸ்லிம்கள் கொண்டாடும் மார்க்க சம்மந்தமான திருநாட்களில், முஸ்லிம்கள் தங்கள் உடல், பொருள், ஆவி முதலிய அனைத்தையும் அல்லாஹ்விற்காக அற்பணஞ் செய்து அவன் கட்டளைப்படி நடக்கவேண்டுமென்பதை ஞாபக மூட்டுவதற்காக துல் ஹஜ்ஜுமீ 10வயன்று கொண்டாடப்படும், ஹஸ்ரத் இப்ருஹீம் (அலை.) அவர்கள் செய்த தியாகங்களின் ஞாபகார்த்தமான "ஈதுல்அல்ஹா" பெருநாள் மிக்க விசேஷம் பொருந்தியதாகும்.

ஜும்ஆ தொழுகை வாஜிபானவர்கள்மீது இரண்டு பெருநாள் தொழுகையும் வாஜிபாகும். ஆனால் தொழுகைக்குப்பின் குத்துபா ஓதுவது வாஜிபல்ல, சுன்னத்தாகும். ஒரு ஊரில் பல இடங்களில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றலாம். ஆனால் ஒரே இடத்தில் தொழுவது நல்லது. பெருநாள் தொழுகை யாவரும் ஒன்றுசேர்ந்து தொழுவதற்காக ஏற்பட்டிருப்பதால் ஜமாஅத்து தவறிவிட்டால் அதைக் கலாச் செய்யவேண்டியதில்லை. ஆனால் வேறு இடத்தில் ஜமாஅத்தாகத் தொழலாம்.

சூரியோதயத்திற்கு ஒரு மணிக்குப் பின்னிவிருந்து அடி சாய்வதற்குள் தொழுகையை நிறைவேற்றவேண்டும். தொழுகைக்குமுன் நன்னீராடி, நறுமணம்பூசி, நேர்த்தியான உடை தரித்துக்கொள்வது முஸ்தஹப்பு. பெருநாள் தொழுகையை நிறைவேற்றுமுன் நபில் தொழுகைகளை நிறைவேற்றலாகாது. தொழுகைக்குச் செல்லும்போது வழியில் இரைந்து தக்பீர் ஓதுவது முஸ்தஹப்பு.

இமாம் தன்னைத் துயர்ந்தோர்களுடன் இரண்டு ரக்கஅத்து தொழுகையை நிறைவேற்றுவார். அவர் "இந்தப் பெருநாள் தொழுகையை அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுகின்றேன்" என (நிய்யத்து) நிர்ணயஞ்செய்து 'அல்லாஹ் அக்பர்' என தக்பீர் கட்டுவார். முக்ததீகளாகிய அவரைத் துயர்ந்தோரும், இந்தப் பெருநாளின் தொழுகையை இந்த இமாமைப்பின்பற்றி அல்லாஹ்வுக்காக தொழுகிறேன் என நிய்யத்துச்செய்து தக்பீர் கட்டவேண்டும். எல்லோரும் 'தனா' (சுப்ஹானகல்லாஹும்ம) ஓதியபின் கையை உயர்த்தி தக்பீர் சொல்லி கையைத் தொங்கவிட வேண்டும். இவ்விதமாக இரண்டு முறை தொங்கவிட்டு மூன்றாவது முறையில் முன்போல் தக்பீர் கட்டிக்கொள்ளவேண்டும். இவ்விதமாக தக்பீர் சொல்லுவதில், ஒவ்வொரு முறையின் இடைநேரத்தில் மூன்று 'தஸ்பீஹ்' ஓதப்பிடிக்கும் அவ்வளவு நேரம் மௌனமாக இருக்கவேண்டும். இவ்வாறு தக்பீர் கட்டுவதில் 'தக்பீர் தஹ்ரீமா' — ஆரம்பத் தக்பீரையுஞ் சேர்த்து நான்கு முறை 'தக்பீர்' சொல்லவேண்டியதிருக்கும். பின்பு வழக்கம்போல் எல்லாத் தொழுகைகளிலும் ஓதுவதுபோல் அஊது, பிஸ்மில்லா, ஸூரத்துல்பாத்திஹா, கிரஅத் ஆகியவைகளை ஓதி, ருக்கூஉ ஸுஜூது செய்து, இரண்டாவது ரக்கஅத்தை வழக்கம்போல் ஆரம்பித்துத் தொழவேண்டும். ஆனால் கிரஅத் ஓதி முடிந்தபின், முற்கூறிய பிரகாரம் மூன்று முறை தக்பீர் சொல்லிக் கையைத் தொங்கவிடவேண்டும். பின்பு நான்காம் முறை

தக்பீர் சொல்லி, ருக்கூஉ செய்யவேண்டும். இவ்வாறு இரண்டு ரக்கஅத்தையும் தொழுது ஸலாம் கொடுத்தபின் 'குத்பா' ஓதவேண்டும்.

ஈதுத் தொழுகையில் இமாம் மூன்று தக்பீர்களையும் சொன்னபின் ஒருவன் வந்து இமாமுடன்சேர்ந்தால் அவன் தானாகவே மூன்று முறை கையை உயர்த்தித் தக்பீர் சொல்லிக்கொள்ள வேண்டும். இமாம் ருக்கூவிலிருக்கும்போது வந்து சேர்ந்தால் இமாம் ருக்கூவைவிட்டு நீங்குவதற்குமுன் தக்பீர் சொல்லி, அப்புறம் இமாமுடன் ருக்கூவில் சேர்ந்துகொள்ளலாமென்று தோன்றினால் அவ்விதம் செய்யலாம். இல்லையேல் இமாமுடன் ருக்கூவில் சேர்ந்துகொண்டு, ருக்கூவிலேயே மூன்றுமுறை தக்பீர் சொல்லவேண்டும். ஆனால் ருக்கூவில் தக்பீர் சொல்லும்போது கையை உயர்த்தவேண்டியதில்லை. ருக்கூவில் தக்பீர் சொல்லி முடிவதற்குள் இமாம் ருக்கூவை விட்டு நீங்கிவிட்டால், தக்பீர் சொல்வதையும் விட்டுவிட வேண்டும்.

இமாம் ஒரு ரக்கஅத்து தொழுதபின்போ, அல்லது இமாம் இரண்டாவது ரக்கஅத்தில் ஸுஜூது அல்லது இருப்பில் இருக்கும்போதோ வந்து சேர்ந்தால் இமாம் ஸலாம் கொடுத்தபின் எழுந்து தவறினவைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும். ஆனால் தவறினவைகளை நிறைவேற்றும்போது கிரஅத்துக்குப் பின்புதான் தக்பீர் சொல்ல வேண்டும். ஈதுத் தொழுகையை நிறைவேற்றியபின், வீட்டிற்கு வந்து நாலு ரக்கஅத்து நபில் தொழுவது நல்லது.

துல்ஹஜ்ஜு மாதம் 9-ந் தேதியிலிருந்து 13-ந் தேதிவரையிலுள்ள 5-தினங்களுக்கும் "அய்யா முத்தஷ்ரீக்" என்று பெயர். இந்த தினங்களில் முதல் நாள் அதாவது, துல்ஹஜ்ஜு மாதம் 9-ந் திகதி காலை பஜ்று தொழுகையிலிருந்து கடைசி நாள் அதாவது, 13-ந் தேதி அஸர் தொழுகை முடியவுள்ள 23-நேரத்துபர்லு தொழுகைக்குபின்பும் தக்பீர் ஓதுவதுஇமாம் முக்ததீ ஆகிய இருவர் பேரிலும் வாஜிபாகும். ஈதுத் தொழுகைக்குப் பின்பும் பலமான சொல்படி தக்பீர் ஓதுவது வாஜிபு. தொழுகை முடிந்தவுடன் இமாம் முக்ததீ ஆகிய யாவரும் சேர்ந்து தக்பீர் ஓதவேண்டும். தனியே தொழுபவர்களுக்கும், முஸாபிர்களுக்கும் வாஜிபில்லை. ஆனால் முஸாபிரானவன் முகீமாகிய இமாமைப் பின்தொடர்ந்து தொழுதால் அப்பொழுது தக்பீர் சொல்ல வேண்டும். இமாம் மறதியாக தக்பீர் சொல்லாமலிருந்து விட்டாலும் அவரைப் பின்பற்றி தொழுதவர்கள் தக்பீர் சொல்ல வேண்டும்.

(ஷாபிஈ மத்ஹப் பிரகாரம்)

ஆக்கில் பாலிகான-வயதை அடைந்தவர்களுக்கு பெருநாள்தொழுகை சுன்னத்துமுஅக்கதா. அதிகாலையிலேயே தொழுமிடத்துக்குச் செல்லுதல், தொழுகை முடிந்தபின் உல்ஹிய்யாக் கொடுக்கவேண்டியிருப்பதால் தொழுகையை தாமதப்படுத்தாமல் முன்னதாகவே தொழுவது, தொழுகைக்குமுன் உணவருந்தாமலிருந்து தொழுகைக்குப்பின் உணவருந்தல், அதிலும் 'உல்ஹிய்யா' பிராணியின் ஈரலைப் புசிப்பது சுன்னத்து.

முதல் ரக்கஅத்தில் தக்பீர் தஹ்ரீமாவுக்குப் பின் 'வஜ்ஜஹ்து' ஓதி தக்பீர் தஹ்ரீமாவைப் போல் ஏழுமுறை தக்பீர் கட்டவேண்டும். பின்பு அஊது, கிரஅத் ஓதி ருக்கூஉ ஸுஜூது முதலியன செய்யவேண்டும். இரண்டாவது ரக்கஅத்தில் தக்பீர் சொல்லி, எழும்பியபின், ஐந்து முறை தக்பீர் கட்டவேண்டும். இந்த தக்பீர்களுக்கிடையில் "ஸுப்ஹானல்லாஹி வல்ஹம்து வில்லாஹி வலா இலாஹ இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்" என்பதை நெஞ்சுக்குக்கீழ் கை வைத்துக்கொண்டு மெதுவாக ஓதவேண்டும்.

இந்த தக்பீர்களை இமாம் குறைத்துக்கொண்டால் அவரைப் பின்பற்றி தொழுபவர்களும் குறைத்துக்கொள்ளுவது சுன்னத்து. இமாம் அதிகப்படுத்தினால் அவரைப் பின்பற்றித் தொழுவோர் அதிகப்படுத்தக்கூடாது. ஒவ்வொரு ரக்கஅத்திலும் மும்மூன்று தக்பீர் சொல்லும்படியான ஹனபி மத்ஹபுக்காரர்களை ஷாபிஈ மத்ஹப்காரர்கள் பின்பற்றி தொழுதால், ஹனபி இமாமைப்போல் மூன்று தக்பீர் கட்டிக்கொள்ளலாம். அதைப்பார்க்கிலும் அதிகமாக்க வேண்டியதில்லை. துல்ஹஜ்ஜு மீ 9உ யாகிய அறபாவுடைய நாள் ஸுப்ஹுவிலிருந்து அய்யாமுத் தஷ்ரீக் கடைசி நாளாகிய 13உ அஸர் முடியத் தொழும் தொழுகை யாவற்றிலும் அதாவது, பர்லு, நபில், அதா, கலா, ஜனாஸாத்தொழுகை ஆகிய யாவற்றிற்குப் பின்னும், அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர், லாஇலாஹ இல்லல்லாஹு அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து. என்று தக்பீர் சொல்வது சுன்னத்து.

குர்பானி

ஜக்காத் விதியான முஸ்லிம் ஆண் பெண் அனைவரும் ஈதுல் அல்ஹா தினமாகிய துல்ஹஜ்ஜு மீ 10உ முதல் 12உ முடிய வுள்ள மூன்று தினங்களுக்குள் குர்பானி கொடுக்க வேண்டியது வாஜிபு. குர்பானி கொடுக்க கடமையில்லாதவர்கள் குர்பானி கொடுத்தால் அதற்குரிய நன்மையைப் பெறுவார்கள். ஆனால் கடமைப்பட்டவர்கள் குர்பானி செய்யாவிட்டால் குற்றவாளியாவர். குர்பானி கொடுக்கப்படும் பிராணியின் உரோமங்களின் கணக்குப்படியும், உதிரச் சொட்டுகளின் கணக்குப் படியும் குர்பானி கொடுத்தவருக்கு மறுமையில் இறைவனால் நற்கூலியளிக்கப்படும். இது நமது மார்க்க கிரந்தங்களின் தீர்ப்பு.

புஷ்டியுள்ளதும், கொம்புள்ளதும், குற்றமில்லாததுமான பிராணியை குர்பானி செய்ய வேண்டும். இது நாயகமவர்களின் கட்டளை. மெலிந்து போனதும், கண் பார்வையில்லாததும், காதில் பாதி அல்லது அதற்குமேல் அறுக்கப்பட்டதும், கொம்பு பாதி அல்லது பாதிக்குமேல் உடைந்ததுமானவைகளை குர்பானி செய்வது கூடாது. ஆனால் உடையடித்த கடா, மோழைக்கடா ஆகியவைகள் ஜாயிஸாகும். ஆடு, மாடு, ஒட்டகம் ஆகியவைகளைக் குர்பானி செய்யலாம். ஒட்டகமாக இருந்தால், 5 வயதுக்குக் குறையாததாக இருக்கவேண்டும். மாடு, பசு, எருமை, எருமைக்கடா ஆகியவைகள் இரண்டு வயதுக்கு குறையாததாக இருக்கவேண்டும். வெள்ளாடு ஒரு வயதிற்குக் குறையாததாகவும், செம்மறி தும்பை ஆடு 6-மாதத்திற்குக் குறையாததாகவுமிருக்கவேண்டும். இவைகளன்றி வேறெந்தப் பிராணியையும் குர்பானி கொடுக்கலாகாது. அப்படி கொடுத்தால் அது குர்பானியாக நிறைவேறாது.

பசு, எருமை, எருது, எருமைக்கடா, ஒட்டகம் ஆகியவைகள் ஒவ்வொன்றும் ஏழு குர்பானிக்குச் சமமாகும். ஆதலால் ஏழுபேர் சேர்ந்து ஒரு பசுவையோ, அல்லது எருதையோ அல்லது மேலே குறிப்பிட்ட வேறெந்த பிராணியையோ குர்பானி கொடுக்கலாம். ஆனால் அந்த ஏழுபேரும் குர்பானி கொடுப்பவர்களாகவே இருக்கவேண்டும். எனவே, அவர்களிற் சிலர் குர்பானி கொடுப்பவர்களாகவும், மற்றவர் குர்பானியுடைய நிய்யத்தில்லாமல் மாமிசம் வாங்குகிற அல்லது விற்பனை செய்கிற நிய்யத்துடன் சேர்ந்திருந்தால் அந்த குர்பானி ஆண்டவனிடத்தில் ஒப்புக்கொள்ளப்படமாட்டாது. குர்பானிக்காக அன்று புதிதாக வாங்கிய பிராணியைப் பார்க்கிலும் வீட்டில் வளர்த்ததே விசேஷமானதாகும். ஏனெனில், அவைகளை வீட்டிலேயே வைத்து வளர்த்ததால் அவைகள் மீது அதிகப் பிரியமிருக்கும். பிரியமுள்ள பிராணியை குர்பானி செய்வதில் அதிக நன்மையுண்டு.

தன்னுடைய கையினாலேயே குர்பானி செய்வது விசேஷம். வேறொருவரைச் செய்ய ஏவினால் குர்பானி செய்யுமிடத்தில் அவன் இருக்க வேண்டும். பிராணியை அறுக்கும்போது "இன்னீ வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லாஹி பத்தரஸ்ஸமாவாத்தி வல்அர்லீ ஹனீபன் வமா அன மினல்முஷ்ரிக்கீன். இன்ன ஸலாத்தீ வநுஸ்கீ வமஹ்யாய வமமாத்தி லில்லாஹி றப்பில் ஆலமீன். லாஷரீக்க லஹு வபிதாலிக உமிர்து வஅன அவ்வலுல் முஸ்லிமீன்." அதாவது, விண்ணையும் மண்ணையும் படைத்தவனுக்காகவே நிச்சயமாக நான் என் முகத்தை நேராகத் திருப்பிக்கொண்டேன். இன்னும் நான் இணைவைப்போர்களில் சேர்ந்தவன் அல்லன்; நிச்சயமாக என்னுடைய தொழுகை, கிரியை, ஜீவியம், மரணம் ஆகிய இவை சர்வ உலகத்தினரையும் காத்தளிக்கும் அல்லாஹ்வுக்கே தஞ்சமாம். அவனுக்கு யாரும் இணையில்லை; இன்னும் இ(வ்வாறு இணைவைக்கக் கூடாது என்ப)தைக்கொண்டுதான் நான் ஏவப்பட்டேன். தவிரவும் நான் முஸ்லிம்களில் முதன்மையானவன், என்ற துஆவை ஓதவேண்டும். பின்பு "அல்லாஹும்ம லக்க வமின்க பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்." அதாவது, ஆண்டவனே உனக்காகவே இன்னும் உன்னில்நின்றுமே (அறுக்கிறேன்). அல்லாஹ்வின் நாமத்தைக்கொண்டு

(அறுக்கிறேன்). அல்லாஹ் மிகப் பெரியவன். என்று கூறி அறுக்கவேண்டும். அறுத்தபின்பு, "அல்லாஹும்ம தகப்பல் மின்னீ கமா தகப் பல்த மின்கலீலிக்க இப்றுஹீம். வஹபீபிக முஹம்மதின் றஸூலுல்லாஹி அலைஹிமஸ் ஸலாத்துவஸ்ஸலாம்." அதாவது, நாயனே! உன்னுடைய தோழர் இப்றுஹீம் (அலை.) அவர்களிடத்தில் நின்றும், உன்னுடைய அன்ப ரான முஹம்மது றஸூலுல்லாஹ் (ஸல்.) வில் நின்றும் ஒப்புக்கொண்டதுபோல், என்னில் நின்றும் இதை ஒப்புக்கொள்வாயாக என்று பிரார்த்திக்கவேண்டும். பிராணியை அறுக்கும் போது, அதைப் பிடித்துக்கொண்டிருப்பவரும் "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று கூறிக்கொண்டிருப்பது நல்லது.

பலர் கூட்டமாகச் சேர்ந்து செய்த குர் பானியாக இருந்தால், அதன் மாமிசத்தை நிறுத்து பாகம் செய்துகொள்ளவேண்டும்; உத் தேசமாக பாகம் செய்து கொள்ளலாகாது. குர்பானியின் மாமிசத்தை மூன்று சமபாக மாகப் பிரித்து, ஒரு பாகத்தை ஏழைகட்கும் மிஸ்கீன்களுக்கும் கொடுக்கவேண்டும். பாக்கி யுள்ள இரண்டு பாகத்தை தானும் தன் குடும் பத்தினரும் தன்பந்து மித்திரரும் உபயோகித் துக் கொள்ளலாம். அந்த மாமிசத்தையும் அதி லுள்ள எந்த வஸ்துவையும் இதர எந்த ஜாதி யினருக்கும் கொடுக்கலாகாது. குர்பானிசெய்ப வர் துல்ஹஜ்ஜு மாதம்பிறை பிறந்ததிலிருந்து குர்பானி செய்யும்வரை தலைக்ஷவரம் செய்து கொள்ளாமலிருப்பது நலம்.

இயல்புள்ளவர் இறந்துபோன தன்னுடைய உஸ்தாது, தாய் தகப்பன் முதலிய பந்துக்கள், நபிகள் நாயகம் (ஸல்.), உம்மஹாத்துல் மூமி னீன் ஆகியவர்களின் அர்வாஹுகளுக்காகவும் குர்பானிசெய்து அதன் நன்மையை அவர் களுக்குச் சாட்டலாம். கூலிக்கு குர்பானி அறுப்பவர்களுக்கும் தோலுரிப்பவர்களுக்கும் கூலியை பிரத்தியேகமாகக் கொடுக்கவேண் டும். குர்பானித் தோல்கள் ஏழைகளுக் கும் மிஸ்கீன்களுக்கும் உரியனவாம். ஆதலால் அவைகளை மஸ்ஜிது செலவுக்கும் இதுபோன்ற பொதுக் காரியங்களுக்கும், பொதுப் பண்டிற் கும் கொடுக்கக்கூடாது.

ஈதுல்அல்ஹா தொழுகைக்குப்பின் குர் பானி செய்யவேண்டும். ஏதேனும் தவிர்க்க முடியாத காரணத்தால் துல்ஹஜ்ஜு மீ 10வ முதல் 12வக்குள் குர்பானி கொடுக்கமுடிய் வில்லையானால் அதன் கிரயத்தை ஸதக்கா செய்யவேண்டும். குர்பானிக்காக பிராணி நிறுத்தப்பட்டிருந்தால் அந்த பிராணியை விற் பனைசெய்து அந்த தொகையை ஸதக்கா கொடுத்துவிடவேண்டும்.

குர்பானி தோல்.

குர்பானி செய்யப்படும் பிராணிகளின் தோல்கள் சம்மந்தமாக நம் முஸ்லிம் சகோதரர் கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள் பல உள. குர்பானித் தோல்களை ஏழைகளுக் குச் சொந்தமாக்கிவிடவேண்டு மென்பது குர் பானி நிறைவேறுவதற்குள்ள முக்கியநிபந்தனை யாகும். குர்பானி செய்பவர் அத்தோல்களை விற்றுத் தனக்குச் சொந்தமாக உபயோகித் துக்கொள்ளக்கூடாது. குர்பானி தோல்களை வாங்கும் மத்ரஸா, அஞ்சுமன், எதீம்கானு ஆகிய பொது ஸ்தாபனங்கள் அத்தோல்களை விற்பதனால் கிடைக்கும் பணத்தை தங்கள் பொது நிதியில் சேர்க்காமல் ஜக்காத் பணத் தைச் சேர்க்கவேண்டியவகையில் செலவுசெய்து விடவேண்டியது.மத்ரஸா கட்டடச்செலவு உஸ் தாது பேஷ் இமாம் சம்பளச்செலவு ஊர்பொது வில் பல விஷயங்களுக்காகவும் ஏற்படுத்தப் பட்டிருக்கும் பண்டுகள் முதலிய செலவுகளை அதிலிருந்து செய்யலாகாது. ஆகவே இது முக்கிய விஷயமாகவிருப்பதால் முஸ்லிம் சோதி ரர்கள் இம்முக்கிய விஷயத்தை கவனத்தில் வைப்பார்களென நம்புகிறேன்.

(ஷாபிஈ மத்ஹப்பிரகாம்)

ஹஜ்ஜுப் பெருநாள் இரவு பகலில் தனக்கும், தன் பராமரிப்பில் இருப்பவர்களுக்கும் உள்ள செலவுகளைவிட்டு அதிகமான ஐவேஜியுள்ள முஸ்லிமான ஆக்கில்பாலிகானவர்கள் உல் ஹிய்யா கொடுப்பது சுன்னத்து முஅக்கதா. குர்பானிக்காக பிராணிகளை அறுக்கும்போது அல்லது அறுப்பதற்கு முன் உல்ஹிய்யா வென்று நிய்யத்துச்செய்வது ஷர்த்து. இந்த நிய்யத்துச் செய்வதற்கும், அறுப்பதற்கும் புத்தி சுவாதீனமுள்ள வேறொரு முஸ்லிமைத் தனக்குப் பதில் வக்கீலாக நியமிக்கலாம். இப்பிராணிகள் சொரி பிடித்தனவாய், அதிக மாக நொண்டுவனவாய், மெலிவினால் மூளை வறண்டனவாய், பயித்தியம் பிடித்தனவாய், குருடாய், ஒற்றைக்கண் பொட்டையாய், மாமி

சத்தைக் கெடுத்து விடக்கூடிய வியாதி உள்ளன வாய் இருத்தல் ஆகாது.

ஹஜ்ஜுப் பெருநாளில் சூரியோதமாகி இரண்டு ரக்கஅத்துத் தொழுது இரண்டு குத்பா ஓதுவதற்கு எவ்வளவு நேரம் செல்லுமோ அவ்வளவு நேரம் சென்றதிலிருந்து அய்யாமுத்தஷ்ரீக்களின் கடைசிநாளில் சூரியாஸ்தனமாகும்வரை உல்ஹிய்யாக் கொடுக்கலாம். ஆனால் இந்த தினங்களுக்குள் வரும் இரவுகளில் உல்ஹிய்யாச் செய்வது மக்றூஹு.

இந்த உல்ஹிய்யா பிராணியின் மாமிசத்தில் கொஞ்சமாயினும் குறைந்தது ஒரு பக்கீருக்காவது ஸதக்கா கொடுப்பது வாஜிபு. இந்த பிராணிகளின் ஈரல், குலை ஆகியவைகளைக் கொடுத்தால் அது மாமிசத்தை கொடுத்ததாக ஆகாது. அதன் மாமிசத்தைச் சமைத்துப் பக்குவப்படுத்திக் கொடுப்பதும் கூடாது. அந்த பிராணியுடைய எதையும், தோலையும் விற்பனை செய்வதும், அதை அறுப்பவர்களுக்கு கூலியாக கொடுப்பதும், காபிர்களுக்குக் கொடுப்பதும் ஜாயிஸல்ல.

மதத்தின் அவசியம்

உலகம் மதத்தை அலக்ஷியம் செய்து கொண்டே போகிறது; முஸ்லிம்களிலுள்ள படித்த வகுப்பினரும் மதத்தைமதிக்காதிருந்து வருகின்றனர் என்று முஸ்லிம்களுக்குள் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இதற்குக் காரணம் மேனாட்டு மோஸ்தரார்தான் என்றுங் கூறுகின்றனர். இவ்வாறு கூறும் புகார் ஆதாரமற்றதாகவுமில்லை. மேனாட்டுக் கல்வி பயின்ற முஸ்லிம் வாலிபர்கள் பெரும்பாலும் மதத்தை அலக்ஷியமாகவே மதிக்கிறார்கள் என்பது உண்மையேயாகும். இதற்குக் காரணம் அவ்வாலிபர்கள் மதத்தில் சொல்லப்பட்ட விஷயங்களை ஆழ்ந்து கவனிக்காததேயாகும். தவிரவும், அவர்களிற் சிலர் மத விஷயத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற முயற்சி கூடச் செய்வதில்லை என்றுங் கூறலாம். "மதம் என்பதும் தர்மம் என்பதும் விரோதத்தையும் துவேஷத்தையும் வளர்ப்பனவாகவே இருக்கின்றன; இந்நாளில் நடைபெறும் கலகங்களுக்கும் சண்டைகளுக்கும் மதம் தான் காரணமாக இருக்கிறது" என்றுஞ் சிலர் கூறுகின்றனர். "மதம் என்பது பழங்காலச் சங்கதி; இப்பொழுது உலகம் மாறிவிட்டது; முன்னேற்றமடைந்த இக்காலத்தில் மதப் பேச்சுப்பேசுவது வீண் விஷயமாகும்" என்று சில வாலிபர்கள் கூறுகின்றனர். இவர்கள் மத விஷயங்களைக் கொஞ்சங்கூட அறியாதவர்கள் என்பதற்கும், இவர்கள் தங்களது நினைப்புகளையும், பிறரிடமிருந்து கேள்விப்பட்டவைகளையும் உண்மை என்று நம்பிக்கொண்டிருக்கின்றனர் என்பதற்கும் இவர்கள் இப்படிக் கூறுவது தக்க சான்றாக இருந்து வருகிறது.

தவிரவும், இவர்களது இளமைப் பருவத்தில் இவர்களது முதியோர்கள் இவர்களுக்கு மார்க்கக் கல்வி போதிக்காமலும், மதவிஷயங்களை அறிவிக்காமலும் இவர்களை விலக்கிவைத்திருக்கிறார்கள். எனவே, இவ்வாலிபர்கள் இப்படிக் கூறுவதற்கு இம்முதியோர்கள் தான் காரணஸ்தர்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால், முதியோர்கள் இளைஞர்களை ஆரம்பத்தில் மார்க்கக் கல்வியில் பயிற்றுவிக்கவில்லை என்பதற்காக இவ்வாலிபர்கள் குற்றமற்றவர்களாகி விட்டபோதிலும் இவர்கள் படித்திருப்பதால் நல்லவைகளையும் தீயவைகளையும் பாகுபாடு செய்துகொள்ளச் சக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆதலால், இவர்கள் நல்லவைகளைத் தெரிந்துகொள்ள முயற்சி எடுத்துக்கொள்வதோடு இனி வருவோருக்கு வழிகாட்டுவதற்காக இவ்வாலிபர்கள் நேரான பாதையையே தங்களது முக்கிய நோக்கமாக நிர்ணயித்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

தவிரவும் இவ்வாலிபர்கள், சிற்சில சமூகத்தார் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்டிருக்கிற சில ஆசாரங்களையே மதம் என்று நினைத்துக்கொண்டிருப்பதால் இவ்வாசாரங்கள் இவர்களுக்கு அற்பமாகவோ ஒப்புக்கொள்ளப்படத்தகாதனவாகவோ காணப்படுகின்றன. ஆதலால் இவைகளை இவ்வாலிபர்கள் நிராகரித்துத் தங்கள் இஷ்டம்போல் வாயில் வந்ததை யெல்

லாம் கூறிவிடுகின்றனர். ஆதலின், மதம் என்றால் என்ன? மனிதனுக்கு மதம் இருக்க வேண்டியது அவசியமா? என்ற விஷயங்களைப் பற்றிக் கூறுவது அவசியமாகும். "மதுஹப்" என்ற வார்த்தைக்கு நேர்வழி என்பது பொருள். நல்லொழுக்கங்களைப் பூர்த்தி செய்விப்பது தான் நேர்வழியின் கடைசி எல்லையாக இருந்து வருகிறது. தர்மம் என்பதற்கும் கிட்டத்தட்ட இதே பொருள்தானிருந்து வருகிறது. எனவே, மதுஹபு என்பதற்கும் தர்மம் என்பதற்கும் ஒரே கருத்து என்று கூறுவது பொருந்தும்.

நேரான வழியைக் கடைப்பிடிக்காமல் மனிதன் வெற்றிகரமான வாழ்க்கையை நடத்தமுடியாது. மனிதன் வெற்றிகரமான வாழ்க்கையை நடத்துவதுதான் மனித இயற்கையின் லக்ஷியம் என்றும், இவ்வுலகத்தை இறைவன் சிருஷ்டித்ததன் நோக்கம் என்றும் தெரியவருகிறது. வெற்றிகரமானதும், சாந்தியளிக்கக் கூடியதுமான வாழ்க்கையை விரும்பாத மனிதர் உலகில் எவருமில்லை. அமைதியின்மையான வாழ்க்கையை அனைவரும் வெறுக்கின்றனர். எனவே, மனிதனுக்கு இப்படிப்பட்ட வாழ்க்கைக்கான மார்க்கத்தைக் காட்டுவதற்கான ஒருவழி இருக்க வேண்டிய தவசியமாக இருக்கிறது. அவ்வழிதான் இவ்வுலகில் அமைதி சமாதானம் ஆகியவைகளை ஏற்படுத்த முடியும். அதாவது, மதக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து உண்மையாக நடப்பது ஒன்றினாலேயே அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் காரியங்களைத் தடுக்க முடியும். தவிரவும், கல்வி கற்றவர்க்கத்தைச் சேர்ந்தவர்களும்கூட ஏதேனும் ஒரு மதத்தைப் பின்பற்றுவதாகவே தங்களைப்பற்றி கூறிக்கொள்கிறார்கள். ஆகவே, மதம் மனிதருக்கு அவசியமானதென்பது தெரியவருகிறது.

மதத்தை இரண்டு பாகங்களாகப் பிரிக்கலாம். "ஹுக்கூக் குல்லா" அதாவது அல்லாஹுத ஆலாவுக்குரிய உரிமைகள் என்பது ஒரு பாகம். "ஹுக்கூக்குல் இபாத்" அதாவது அடியார்களுக் குரியவைகள் என்பது மற்றொரு பாகம். அல்லாஹுத ஆலாவுக்கு இருந்துவரும் உரிமைகள் மனிதனுடைய ஸ்தூலத்துடன் சம்மந்தப்பட்டவைகளாக இருக்கின்றன. இந்த உரிமைகளை நிறைவேற்றுவதைத்தான் வணக்கம் என்றும் 'இபாதத்து' என்றும் சொல்கிறார்கள். எனவே, அல்லாஹுத ஆலாவுக்கு இருந்து வருகிற உரிமைகளுக்காகவே அவனை வணங்குவது மனிதர்மீது கடமையாக்கப் பட்டிருக்கிறது. பிறர் செய்நன்றியை மறக்காமல் அதற்குத்தக்க கைம்மாறு செய்வது மனித இயற்கையாகும். உதாரணமாக, ஒருவர் மற்றொருவருக்கு ஒரு உபகாரம் செய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது உதவியை அடைந்தவர் தமக்குச் செய்த இவ்வுதவிக்குத் தக்க கைம்மாறு எவ்விதத்திலேனும் செய்யவேண்டும் என்று நினைக்கிறார். அப்படியே செய்யவேண்டுமென்று தனக்குள் உறுதியும் செய்துகொள்கிறார். ஆனால், தமக்கு உபகாரம் செய்தவர் தம்மிடம் உதவிதேடவில்லையாயின், அவர் செய்த நன்றியையேனும் எப்பொழுதும் நினைத்துக்கொண்டும் அவருக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்துகொண்டுமிருக்கிறார். இது மனிதருக்கு மனிதர்செய்யும் உபகார உதவிகளைப்பொறுத்த விஷயம். மனிதனுக்குச் சர்வ சக்தியும் இல்லை. ஆதலின் மனிதர் செய்யும் உதவிக்கும் எல்லையுண்டு.

ஆனால், அல்லாஹு சுல்ஹானஹுவத ஆலாவோ சர்வ சக்தன். ஆக்கல் அழித்தல் ஆகியவைகளுள்ளவன். அவனே மனிதனைச் சிருஷ்டித்து அவனுக்கு வேண்டிய சகல காரியங்களையும் செய்பவன். ஆதலின், அல்லாஹுத ஆலா மனிதருக்குச் செய்துள்ள உபகாரங்களை கணக்கிடவும் முடியாது. அவைகளின் தன்மைகளை நிதானிக்கவும் முடியாது. அவைகளுக்கு ஈடு செய்யவும் முடியாது. அவன் நம்மை மனிதனாகச் சிருஷ்டித்ததே அவன் செய்த பேருபகாரமாகும். இந்த ஒரு உதவிக்கு நாம் நமது வாணாள் முழுவதும் நன்றிசெலுத்தியபோதினும் நமது நன்றி அவனது இவ்வொரு உதவிக்கு ஈடாகாது. தவிரவும், அல்லாஹுதஆலா பிறரிடம் தேவையற்றவன். சர்வ சக்தன். ஆதலால், நமது பிறதியுபகாரம் அவனுக்குத் தேவையில்லை. எனவே, நாம் அவன்செய்த நன்றியை மனதார உணர்ந்து வாயார வாழ்த்திக் கொண்டிருக்கக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வாறு நாம் அவனது உபகாரங்களை நினைத்து நினைத்து ஸ்தோத்திரம் செய்துகொண்டிருந்தால் அவனது கருணை நமக்கு மேன்மேலும் கிடைத்துக்கொண்டே இருக்கும். அவனது கருணை நமக்கு இடைவிடாமல் எப்பொழுதும் கிடைத்துக்கொண்டிருக்கவேண்டுமாயின் அவனது கட்டளைக்கு நாம் மாறு செய்யாதிருக்கவேண்டும். அவன் நமக்கு விதித்துள்ள

கட்டளைகளில் மிகவும் கண்டிப்பானதும் முக்கியமானதாகவும் இருப்பதானது அவனுக்கு நாம் இணைவைக்கக்கூடாது என்பதேயாகும்.

மனிதருக்குக் கிடைக்கும் சகல உதவிகளும் அல்லாஹுத ஆலாவினுலேயே நடைபெறுகின்றன. அவன் செய்த இவ்வுபகாரங்களுக்குத் தக்கபதில் நாம் செய்யமுடியவில்லையானுலும் "இவ்வுபகாரங்களைச் செய்தவன் அல்லாஹுதஆலா தான்" என்றேனும் நாம் மனமார உணரவேண்டும். இது குறைந்தபக்ஷம் செய்யும் நன்றி எனலாம். இதுவும் செய்யாமல் வேருெருவர் இவ்வுபகாரங்களைச் செய்ததாக நாம் கருதுவோமாயின் அல்லாஹுத ஆலாவுக்கு நம்மீது வெறுப்பு உண்டாக மாட்டாதா? என்பதைச் சிந்துத்துப்பாருங்கள். உதாரணமாக, அஹ்மது என்பவருக்கு முஹம்மது என்பவர் ஒரு உபகாரம் செய்வதாக வைத்துக்கொள்வோம். எனவே, முஹம்மது செய்த இவ்வுபகாரத்திற்காக அஹ்மது என்பவர் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார். அஹ்மது என்பவர், தமக்கு உபகாரம் செய்தவர் முஹம்மது என்று கருதாமல் வேருெருவர் என்று கருதும்பக்ஷத்தில், முஹம்மது என்பவருக்கு அஹ்மதின்மீது ஆத்திரமும் கோபமும் உண்டாகாதா என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். ஆனுல், தனக்கு உபகாரம் செய்தவர் இன்னர் என்பதை அஹ்மது தெரிந்துகொள்ளாமல் இருக்கும்போது தவறுதலாக வேறு ஒருவரெனக் கருதி இருந்தால் அது மன்னிக்கப்படத் தகுந்ததாக இருக்கும். தனக்கு உபகாரம் செய்தவர் முஹம்மது என்பவர்தான் என்ற விஷயத்தை அஹ்மது நன்கு தெரிந்துகொண்டே வேறு ஒருவருக்கு நன்றி செலுத்தினுல் முஹம்மது என்பவருக்குத் தீராத வருத்தமுண்டாகும் என்பது நிச்சயம். இதுபோலவே தான் அல்லாஹுதஆலா நமக்குச் செய்த சகல உபகாரங்களும் அவன்தான் நம்மைப்படைத்தான். அவன்தான் நம்மைக் காப்பாற்றுகிறுன். நமது விருப்பங்களை நமக்கு நிறைவேற்றிக் கொடுப்பவனும் அவனே. ஆகவே, நாம் அவனை நினைக்காமல் நமக்கு லாபநஷ்டமுண்டாக்குவதும், நமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதும் வேறு ஆசாமியென்று நினைப்பதும், அதற்காக அந்த வேறு ஆசாமியைப் பூஜிப்பதும் அல்லாஹுத ஆலாவுக்குத் திருப்தியளிக்கமாட்டா. இப்படிச் செய்ததற்காக அவனுக்கு நம்மீது கோபம்தான் ஏற்படும். இதனைக்குறித்துத்தான் இறைவன் தனது திருமறையில் "நிச்சயமாக அல்லாஹுத ஆலா தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான். இதல்லாதவைகளைத் தான் நினைத்தவருக்கு மன்னித்துவிடுவான்." என்று கூறியிருக்கிறுன்.

இனி மதத்தின் இரண்டாவது பங்காகிய அடியார்களுரிமைகளை எடுத்துக்கொள்வோம். இது மனித சமூகத்தைச் சேர்ந்த எல்லோருக்குள்ளும் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. இதற்கு "மனித கடமை" என்றும் மாற்றுப்பெயர் சொல்லலாம். அதாவது, மனிதன் புதல்வனுகவும், சகோதரனுகவும், புருஷனுகயும், தந்தையாகவும், போஷகனுகவும், அயலகத்தானுகவும், உத்தியோகஸ்தனுகவும், மேலதிகாரியாகவும், வயித்தியனுகவும், வேலைக்காரனுகவும், எஜமானுகவும் இன்னும் பலப்பல அந்தஸ்துகளுள்ளவனுகின்றுன். ஒரே மனிதனுக்கு இந்த அந்தஸ்துகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றுக வருவதுமுண்டு. இவைகளில் சில ஏககாலத்திலேயே வருவதுமுண்டு. இவைகளிற் சில ஒன்றன்பின் ஒன்றுக வருவதும் சிலவைகள் வராமல் இருப்பதுமுண்டு. எனவே, இந்த அந்தஸ்துகளில் எதுவுமே இல்லாத மனிதன் இருப்பதில்லை. இந்தஅந்தஸ்துகளுக்கு ஏற்பட்ட சில பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றன. இப்பொறுப்புகளை நேர்மையாக நிர்வகிப்பதுதான் மதமாக இருந்துவருகிறது. ஜட்ஜாக இருப்பவன் ஜனங்களின் வழக்குகளை விசாரித்துத் தீர்த்துவைக்க வேண்டும். வக்கீலாக இருப்பவன் தனது கக்ஷிக்காரனின் கக்ஷியை வாதாடவேண்டும். போலீஸ் அதிகாரி ஊரில் கலகம் குழப்பம் இல்லாமல் அமைதியை நிலைநிறுத்த வேண்டும். வைத்தியன் நோயாளிக்குச் சிகிச்சை செய்யவேண்டும். உபாத்தியாயர் மாணவருக்குக் கல்விகற்பிக்க வேண்டும். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கடமையைச் செய்கின்றனர். ஆனுல், இவைகளை நேர்மையாகச் செய்யவேண்டும் என்பதுதான் மதத்தின் கட்டளையாக இருக்கிறது. இவைகளை நேர்மையாகச் செய்வதற்குரிய வழிகளை மதம் நமக்குக் காண்பித்துக் கொடுக்கிறது.

ஒரு தப்பருத்தம்

மதம் உலகில் அமைதியையும் சமாதானத்தையும் நிலவச் செய்வதற்காக வந்திருக்கிறது என்றுல், மதத்தின் காரணமாக உலகில் ஏன்

யுத்தங்களும் சண்டைகளும் நிகழுகின்றன? இதற்குமுன் நடைபெற்ற யுத்தங்களும் இதன் நிமித்தமாகவன்றோ நடைபெற்றிருக்கின்றன? என்று மதத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளாத சிலர் வினவுகின்றனர். உலகில் இதற்குமுன் நடைபெற்ற யுத்தங்களுக்கும் ரத்தம்சிந்தியவை களுக்கும், இப்பொழுது நடைபெற்றுக் கொண் டிருக்கிற சண்டை சச்சரவுகளுக்கும் மதம் காரணமாயில்லை. ஆனல், மதத்தை மாற்றுவ தாலும் திருத்துவதாலுமே இவைகள் நிகழ்ந் திருக்கின்றன. மனிதன் தனது மனம்போன படி திரும்பி தனது இஷ்டம்போல் மதத்தை உபயோகப்படுத்தி தனது சுய நலத்தைச் சாதித்துக்கொள்ள முயலும்போதுதான் இந்த தகராறுகளும் மாச்சரியங்களும் உண்டாகின் றன. ஒரு கூட்டத்தார் தங்களது மனம்போன போக்குப்படி மதத்தில் சீர்திருத்தம் செய்து அமைத்து, அதனையே மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்று நினைக்கின்றனர். மற்றொரு சாரார் அவ்வாறு செய்யவிடாமல் வழிமறிக் கின்றனர். இந்தவிதத்தில் சத்தியம் அசத்தியம் ஆகியவைகளுக்கிடையில் போராட்டம் ஆரம்ப மாகி விடுகிறது.

களங்கமற்ற மனத்துடன் உலகச்சரித் திரத்தை நாம் ஆராய்ந்து பார்ப்போமாயின் மத சம்பந்தமாக ஏற்பட்ட சண்டைகளுக்குள் மதத்திற்குச் சம்பந்தமில்லாத வேறு காரண மும் இருப்பது தெரியவரும். மனிதன் குறிப் பிட்ட ஒரு கொள்கையின்பேரில் அல்லது ஒரு ஆசாரத்தின்பேரில் ஒருகாலம்வரை இருந்து வருவானுயின் அப்புறம் அக்கொள்கை அல்லது ஆசாரம் எவ்வளவு தவறுனதாக இருந்தாலும் சரி, இயற்கைக்கு விரோதமாக இருந்தாலும்சரி அதற்கு விரோதமாகக்கூறும் விஷயங்கள் அவ னுக்கு மனவருத்தத்தை யுண்டாக்குவன வாகவே தோன்றும். ஆகவே, அவன் தனது கொள்கையிலுள்ள தவறைச் சீக்கிரத்தில் ஒப் புக்கொள்வதில்லை. அநேகம் சமயங்களில் பிறர் கூறும் நேர்மையான விஷயங்களையும்கூட நிரா கரிக்கவும் மறுதலிக்கவும் தயாராகி விடுகின் றுன். எனினும், இறுதியில் சத்தியத்திற்குத் தான் ஜெயம் ஏற்படுவது வழக்கம்.

உதாரணத்திற்காக சமீபகாலத்திலுள்ள ஒரு சரித்திரத்தை எடுத்துக்கொள்வோம். ஹஜ் றத் ஈஸாஅலை ஹிஸ்ஸலாமவர்களைச் சிலுவை யிலறைந்துவிட்டதாக வேதக்காரர்களில் ஒரு கூட்டத்தார் கருதுகின்றனர். பின்னர் ஒரு காலத்திற்குப்பின் அதே வேதக்காரக் கூட்டத்தார் அந்த ரஸூல் அவர்களுக்காகத் தங்களது பொருள்களையும் உயிர்களையும் அற் பணஞ்செய்ய முன்வருகின்றனர். அந்த நபி யவர்கள்பால் அவர்களுக்கேற்பட்ட அபிமானத் தின் மேலீட்டால் அதே வேதக்காரக் கூட்டத் தார் அந்த நபியவர்களை அல்லாஹுத ஆலாவின் புதல்வர் என்று நம்பிக்கொண் டிருக்கின்றனர். இன்னும் உண்மையல்லாத இந்தபோதனை, அந்த நபியவர்கள் போதித்ததாகவும், இவ்விதம் நம்பு வதுவதுதான் முக்தியளிக்கத்தக்கது என்பதாக வும் அக்கூட்டத்தாரால் கருதப்படுகிறது.

இதுபோலவே, ஹஜ்றத் றஸூலே அக்ரம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் நபிப் பதவியை அடைந்து தங்கள் பந்துமித்திரர் களிடம் முதல்முதலாக சத்தியமதத்தைப் போதிக்கத் தொடங்கியபோது அப்பெருமா னர் (ஸல்.) அவர்களது பந்துக்களும் உறவின ரும்கூட நாயகம் (ஸல்.) அவர்களை எதிர்த்துப் பலவித இன்னல்களை விளைவிக்க முயன்றனர். பிறகு சிறிது காலத்திற்கப்பால் சத்தியம் தலை தூக்கி அசத்தியம் அடங்கியபோது, அதே ஜனங்கள், நாயகம் (ஸல்.) அவர்கள் ஜாடையா கக் கூறும் ஒரு சிறு கட்டளையைபுங்கூட நிறை வேற்றுவதற்காகத் தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்ய முற் பட்டனர்.

இந்தக் காலத்தையே எடுத்துக்கொள்வோம். ஹிந்துக்கள், கிறிஸ்துவர்கள் ஆகிய பிற மதத் தார் இஸ்லாம் மதத்திற்கு விரோதமாகப் பல துறைகளிலும் வேலைசெய்து அதனை ஒழித்து விடப் பகீரதப் பிரயத்தனம் செய்கிறுர்கள். இதற்குக் காரணம், இவர்கள் தங்கள் மதம் தான் சத்தியம் என்றும், இஸ்லாம் மதம் அவ் வாறில்லை என்று நம்புவதுமேயாகும். எனவே, மதசம்மந்தமாக ஏற்பட்ட இந்தச் சண்டை இஸ்லாத்தைப் பற்றி அவர்கள் தவறுக உணர்ந்துகொண்டிருப்பதனுலேயாகும். இந்தத் தப்பபிப்பிராயத்தை அன்பினுலேயே மாற்ற முடியுமேயன்றி தடிகளாலும் கழிகளாலும் தண்டங்களாலும் முரட்டுத்தனத்தாலும் ஏசல் பேசலாலும் மாற்றமுடியாது. ஆகவே, பிறமத நண்பர்களிடம் இஸ்லாத்தின் சத்தியத்தன் மையை வெளிப்படுத்தும் விஷயத்தில் முஸ்லிம் பிரசாரகர்கள் பொறுமையையும் க்ஷமிப்பையும்

அதிகமாக உபயோகப்படுத்த வேண்டும். மதுரமான வாக்குகளேயும் அருமையான பேச்சுக்களேயும் கூறவேண்டும்.

மதசம்மந்தமாக ஏற்பட்ட சகல சச்சரவுகளுக்கும் அடிப்படையான மூலகாரணம் தப்பபிப்பிராயமேயன்றி வேறொன்றுமில்லை. நபிமார்கள் தோன்றி ஜனங்களில் சத்தியத்தைப் போதிக்க வாரம்பித்தபோது அசத்தியமான கொள்கையிலுள்ளவர்கள் அச்சத்போதனையை அசத்தியமென மதித்து எதிர்த்தனர். பிறகு, வழிதவறிய அக்கூட்டத்தாருக்குத் தங்களது தவறு வெளியானபோது நபிமார்களது போதனையை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டனர். எனவே, மதசம்மந்தமாக ஏற்பட்ட சண்டைகளுக்கெல்லாம் மதம் தூண்டுகோலாக இருக்கவில்லை என்பதும், மதசம்மந்தமென்று கூறிக்கொண்டு சிலமனிதர்கள் தங்களது சுயநலத்திற்காகச் சண்டையை உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்பதும் இதிலிருந்து நன்கு வெளியாகின்றது.

இஸ்லாம் மதம்

மதம் என்பது யாது? அதன் அவசியம் யாது? என்பதைப்பற்றி எழுதிய இவ்வியாசத்தில், இஸ்லாம் என்ற பதத்திற்குள்ளபொருளேயும் இங்கு குறிப்பிடுவது நல்லது என்று கருதுகிறோம். தலை சாய்த்தல், வழிப்படுதல் என்பது இஸ்லாம் என்ற பதத்திற்குப் பொருளாகும். எனவே தெய்வச் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து சமாதான மாகவும் அன்பாகவும் நடந்துகொள்ளுவது என்ற கருத்து இஸ்லாம் என்ற பதத்திலிருந்து வெளியாகிறது. விவேகமுள்ள எந்த மனிதரும் மனதுக்கிசைந்ததும், அர்த்த புஷ்டியுள்ளதுமான இந்தப்பதத்தைக் கண்டஞ்சவுமாட்டார்; தன்னுடைய மதத்திற்கு இந்தப் பெயரைக் கூறிக்கொள்ள லஜ்ஜைப்படவுமாட்டார். நியாயமாகப் பார்க்கப்போனல் ஒவ்வொருவரும் தத்தம் மதத்திற்கு இதே பெயரைச் சூட்டிக்கொள்ள ஆசைப்படுவர். குறிப்பிட்ட ஒரு மனிதரின் பெயரைக்கொண்டோ அல்லது தேசத்தைக்கொண்டோ நாமம் சூட்டிக்கொள்வதைப் பார்க்கினும் இந்தப்பெயர் எவ்வளவு பெருமையுள்ளதாக இருக்கிறதென்பதை வாசகர்கள் கவனிப்பார்களாக. இந்த பெயர் ஒன்றிலிருந்தே இஸ்லாம் மதம் குறிப்பிட்ட ஒரு தேசத்தாருக்கோ சமூகத்தாருக்கோ சொந்தமில்லை என்பதும், மனிதராகப்பிறந்த அனைவருக்கும் இது பொதுவான மதம் என்பதும் தெரியவருகிறது. இது உலகிற்குப் பொதுவான மதமாக இருப்பதால் தான் பிரசாரவர்க்கம் இல்லாமலே நாடோறும் பெருகி உலகத்தினுள் ஏனைய மதங்களேப் பார்க்கினும் அதிக ஜனப்பெருக்குள்ள மதமாக இப்பொழுது விளங்கிக்கொண்டிருக்கிறது. இஸ்லாம் மதத்தின் இவ்வளர்ச்சியை ஆராய்ந்த பல அறிஞர்கள், வருங்காலத்தில் உலகம் முழுவதிலும் இஸ்லாம் பரவிவிடும் என்றுங் கூறியுள்ளார்கள். எனவே, கடவுள் ஒருவன் என்ற நம்பிக்கையுள்ளவர்கள் இவ்வொரு உண்மையையேனும் உணர்ந்து இஸ்லாம் மதத்தை அங்கீகரித்துவிடுவாராயின் உலகில் சச்சரவுகளோ சண்டைகளோ இருந்துவர நியாயமில்லை. எல்லாம்வல்ல இறைவன் மக்களுக்கு உண்மையை உணரும் ஆற்றல்தந்து அவனது பெரும் கருணையில் சேர்த்துக்கொள்வானாக.

மதப் பிரசாரம்

உலகத்தில் எங்குபார்த்தாலும் மதப் பிரசாரம் தலை விரித்தாடிக்கொண்டிருக்கிறது. மதப்பிரசார சபைகளே ஏற்படுத்தி பிரசாரக் கூட்டங்களே வெளியில் அனுப்ப ஏற்பாடு செய்யாத தேசமொன்றுமில்லை என்றே கூறலாம். ஐரோப்பாவிலுள்ள கிறிஸ்துவ தேசத்தினர் தங்கள் தங்களுக்கென மிஷனரி சொஸைட்டிகளே ஏற்படுத்திக்கொண்டு லக்ஷக்கணக்கான திரவியங்களேச் செலவு செய்கின்றனர். இவர்களேப் பின்பற்றி இந்தியாவிலுள்ள ஆரிய ஸமாஜிகளும் கூட தங்களது ஹிந்துமதத்தை உலகமெங்கும் பரவச்செய்ய முயன்றுவருகின்றனர். இதுபோலவே இதர மதத்தினரும் தங்கள் தங்கள் மதத்தைப் பிர

சாரம் செய்யும் வேலையில் சளைக்கவில்லை. ஆனால், ஒருவிஷயம் மாத்திரம் இந்தவிடத்தில் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது. கிறிஸ்து மதம் பிரசார மதமன்று; இஸ்ரவேலர்களை ஒன்று சேர்த்து நியாயப் பிரமாணங்களைக் கடைப்பிடித்து நடக்கும்படிச் செய்வதற்காகவே ஹஜ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் உழைத்துவந்தார்கள். இவ்விஷயத்தை பைபிள் வாசிப்போர் நன்குணர்ந்திருக்கலாம். ஹிந்து மதமும் பிரசாரமதமன்று. அந்த மதத்தில் பிறந்தவர்கள்தான் அந்தமதத்தில் இருக்கலாம். வேறுமதத்தவர் ஹிந்து மதத்தைத் தழுவுவதற்கு ஹிந்துமதத்தில் சட்டமில்லை. புத்தர்கள், ஜைனர்கள், ஆரியசமாஜிகள், சிக்கியர்கள் ஆகிய பல மதத்தினரும் ஹிந்துமதத்திலிருந்தே வெளிப்பட்டவர்கள். இவர்களை எல்லாம் ஒருகாலத்தில் ஹிந்துமதம் ஒதுக்கிவைத்திருந்தது. ஆனால், இப்பொழுதோ ஹிந்துமதத்தார் இவர்களை எல்லாம் தங்களது மதத்தார் என்று கூறி அணைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வண்ணம் பிரசாரமார்க்கமல்லாத மதத்தவர் தங்களது மதச்சட்டத்தை மீறி அந்தந்த மதத்தைப் பிரசாரம் செய்து பரவச்செய்வதற்காக நாடெங்கும் அலைந்து திரிந்து பகீரதப் பிரயத்தனம் செய்வதன் நோக்கம் மக்கள் அனைவரும் முக்தி பெறவேண்டும் என்பதற்காகவன்று. தங்களது சுயநலத்திற்காகவும், தங்களது ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொண்டு ஆட்சிபுரிய வேண்டும் என்பதற்காகவுமே யாகும். எனவே, நாடு பிடித்து ஏகாதிபத்தியத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற நோக்கம் இல்லையேல் இக்குழாத்தினரின் மதப்பிரசாரமும் அடியுடன் நின்றுபோகும் என்று கூறலாம். கிறிஸ்துவ சமூகத்தினர் இதுபோழ்து உலகில் அதிகாரம் பெற்றவர்களாக இருப்பதால் அவர்கள் தங்கள் அதிகாரத்தை நாளுக்குநாள்பலம் பொருந்தியதாகச்செய்து கொள்ளவதற்காகவும், தங்களது அதிகாரத்துக்கு விரோதமாகச் சுதேசிகள் கிளம்பாமலிருப்பதற் காகவும் தங்கள் மிஷனரிசொஸைட்டிகளைவேலைசெய்ய அனுமதித்து அச்சுதேசிகளுக்கு உதவிசெய்வதுபோலகாண்பித்து, சுதேசிகளைத் தங்கள்மதத்தில் சேர்த்து வருகிறார்கள். ஆனால், ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு ।தற்போது உலகில் எவ்விடத்திலும் தனி அரசாங்கம் கிடையாது. ஆதலால், தங்கள் மதத்திற்குப் புறம்பானவர்கள் என்றுகூறி ஒதுக்கித்தள்ளி இருந்த புத்தர்கள் முதலானவர்களைத் தங்கள் மதத்தின் கிளையிலுள்ளவர்கள் என்று கூறி அவர்களோடு உறவாடவும், சிக்கியர், ஜைனர் போன்றவர்களை ஹிந்துக்களென்றுகூறி தங்களுடன் இணைத்துக்கொள்ளவும் முற்பட்டிருக்கின்றனர். இதற்குக்காரணம், இந்திய தேசிய ராஜீய வியவகாரத்தில் தங்களுக்குள்ள பெரும்பான்மை அந்தஸ்தை இழந்துவிடக்கூடாது என்பதேயாகும். இதே நோக்கத்தில்தான் ஆரிய சமாஜிகள் என்று ஒரு கூட்டத்தார் கிளம்பி முஸ்லிம்களையும் கிறிஸ்துவர்களையும் சுத்திசெய்து ஹிந்து மதத்திற்கு மீண்டும் மீட்டிவிடுவதாகக் கூறிக்கொண்டு இவ்வேலையில் பகீரதப் பிரயத்தனம் செய்துவருகிறார்கள். எனவே, தற்போது உலகில் மதப்பிரசார சபைகளை ஏற்படுத்திக் கட்டுப்பாடாகப் பிரசாரம் செய்துவரும் கூட்டத்தினரில் பெரும்பாலருடைய நோக்கம் தங்களது தேசத்தினுடையவோ அல்லது ராஜீயத்தினுடையவோ நன்மையைக் கருதியதாக இருக்கிறதேயன்றி மக்கள் சமமாக இருக்கவேண்டும், யாவரும் இன்புற்றிருக்க வேண்டும், "யான் கண்ட இன்பம் பெறவேண்டும் இவ்வையகம்" என்பதாக இல்லை.

இனி முஸ்லிம்களை எடுத்துக்கொள்வோம். முஸ்லிம்கள்தற்போது உலகில் பலபாகங்களிலுமாகச்சேர்ந்து ஏறக்குறைய 70-கோடி ஜனங்கள் இருந்து வருகின்றனர். உலகத்தில் தோன்றியுள்ள பெரிய மதங்கள் எல்லாவற்றிற்கும் பிறகு ஹஜ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அனுப்பப்பெற்று சம்பூரண இஸ்லாம் மதத்தைப் போதித்தார்கள். ஆயினும், இதிலுள்ள உயர்ந்த லக்ஷியங்களாலும், நேர்மையான நடத்தைகளாலும் இம்மதம் சென்ற 1394-வருஷங்களுக்குள் உலகமெங்கும் பரவி கோடிக்கணக்கான மக்களை ஸ்வீகரித்துக் கொண்டிருக்கிறது. இக்கோடிக்கணக்கான மக்களிற் பெரும்பாலர் எளியோராகவும், வலியோரால் வாட்டப்படுவராகவும், பிறரால் ஒதுக்கித் தள்ளப்பட்டவர்களாகவும் இருக்கும் வகுப்பினர் என்பதிலும், அவ்வகுப்பினரின் சந்ததியினர் என்பதிலும் சந்தேகமில்லை. எனவே, இப்பொழுது உலகில் முதற்றரமான ஜனத்தொகையுள்ள பெரியமதம் இஸ்லாம் மதமேயாகும். தவிரவும், இஸ்லாத்தின் புதல்வர்களான முஸ்லிம்களுக்கு ஆதிமுதல் இன்றுவரை சுயேச்சையான அரசாங்கமும்

இருந்து வருகிறது. முஸ்லிம்களின் ஆட்சியை இவ்வுலகில் இல்லாமற் செய்து ஒழித்து விடவேண்டும் என்று பகைவர்கள் இடைவிடாது முயன்று வந்தாலும் அவர்களது ஆட்சி ஒழிவதே இல்லை. இன்றைய தினமும் உலகில் 7-8 முஸ்லிம் அரசாங்கங்கள் பூரண சுயேச்சையுடனிருந்து வருகிறது.

ஜனப்பெருக்கும், அரசாங்க ஆதரவும் முஸ்லிம்களுக்கு இருந்தும் முஸ்லிம்கள் தங்கள் மதத்தைப் பரவச்செய்வதற்காகச் சட்டப்படியுள்ள பிரசார சபையை ஏற்படுத்திக்கொண்டு பிறமதத்தாரைத் தங்கள் மதத்தில் சேர்த்துக் கொள்ள முயற்சி செய்வதில்லை. ஆனாலும், இஸ்லாம் மதம் உலகில் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே இருக்கிறது. ஆயிரக்கணக்கான பிறமதத்தார் தினந்தோறும் இஸ்லாத்தைத் தழுவிவருகின்றனர். இப்படித் தழுவும் புதிய முஸ்லிம்களை ஆதரித்து வேண்டிய உதவி செய்வதற்காகச் சில இடங்களில் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுமிருக்கின்றன. அச்சங்கங்கள் தங்கள் எல்லைக்குள் தங்களாலான உதவியைப் புரிந்து வருகின்றன. இம்முறையில் உலகின் பல பாகங்களில் முஸ்லிம் சங்கங்களைக் காண முடியுமேயன்றி ஏனைய தேசத்தினர் தங்களில் ஏற்படுத்தி இருக்கிற பிரசார சபைகளைப்போல் கட்டுப்பாடான சபைகள் முஸ்லிம்களில் இல்லை. இதற்குக் காரணம் முஸ்லிம்களுக்குத் தேசம் பிடிக்கவேண்டும், ஏகாதிபத்தியத்தைப் பெருகிக்கொள்ளவேண்டும், பிறரைக் கீழ்ப்படித்திவைக்கவேண்டும் என்ற எண்ணமில்லை. தன்னைப்போலவே பிறரும் இருக்கவேண்டும் என்ற கொள்கை முஸ்லிம்களுள்ளத்தில் இளமை முதற்கொண்டே பதிந்துவிடுவதால் அவர்கள் பிறரை அடக்கி ஒடுக்கித் தங்களுக்குமட்டிலும் விசேஷமான உயர்வைத் தேடிக்கொள்ள விரும்புவதில்லை. ஒவ்வொரு முஸ்லிமும் பிற சமூகத்தார் எவ்வளவு தாழ்ந்த நிலைமையில் இருந்தாலும் அவர்களைச் சமத்துவமாக நடத்தி வருவதால், முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள இடங்களில் வகுப்புக்கலகமும் இருப்பதில்லை, ராஜீயவிஷயங்களில் மதஉரிமைசம்மந்தமான பிளவுகளுமிருப்பதில்லை. முஸ்லிம்களின் இந்நேர்மையான நடத்தையானது பிறமதத்தாரைக் கவர்ந்து அவர்களை இஸ்லாத்தில் சேரும்படித் தூண்டி விடுகிறது. இம்முறையில் முஸ்லிம்களில் ஒவ்வொருவரும் மதப் பிரசாரகராகவே இருந்து வருகின்றனர். இவர்களது மதப் பிரசாரத்திற்குப் பணச் செலவும் திரேக உழைப்பும் தேவையில்லை. இவர்களது இப்பிரசார முறையை வெல்லுவதற்கு உலகில் வேறெந்தமார்க்கமுமில்லை.

ஆகவே, ஏழை எளியாரை ஆதரித்துக் காப்பதும், அவர்களை உள்ளன்புடன் உபசரிப்பதும் இஸ்லாம் மதமேயாகும். ஏழைகளுக்கும், வீழ்த்தப் பட்டோருக்கும், தாழ்த்தப் பட்டோருக்கும், ஒடுக்கப் பட்டோருக்கும் அபயமளித்து அவர்களுக்கு சம உரிமையைக் கொடுத்து சகோதரர்களாக நடத்துவதும் இக் காசினியில் இஸ்லாம் மதம் ஒன்றேயாகும். இது போழ்து இந்திய நாட்டில் தாழ்த்தப் பட்ட மக்களாகிய ஹரிஜனங்களுக்குள் தோன்றியிருக்கும் சமஉரிமை சமத்துவம், சகோதரத்துவம் என்ற தாகவிடாயைத் தீர்த்துவைக்கக் கூடியதும் இஸ்லாம் மதமேயாகும். தங்களது இவ்வுரிமைகளை அடைவதற்காக தீண்டாதார் வேறு மதத்தைத் தழுவ விரும்பும் பக்ஷத்தில் அவர்களுக்கு இவ்வுரிமைகள் இஸ்லாம் மதத்தில் மாத்திரம் அளிக்கப் படுமே யன்றி வேறு எந்த மதத்தாலும் அளிக்கப்பட மாட்டாது என்பதை நன்கு உணரட்டும். ஏனெனில், இஸ்லாம் மதத்தின் அஸ்திவாரம் ஏழை எளியாருக்கு உதவுவதும், தள்ளப் பட்டவரை ரக்ஷிப்பதுமாக இருக்கிறது. பிறமதத்தின் லக்ஷியம் ஆள் சேர்த்து அதிகாரம் பெறுதல், அல்லது அதிகாரம் செலுத்துதல் என்பதாக இருக்கிறது. இந்த லக்ஷியமுள்ள மதங்களில் கஷ்டப் படுவோருக்கு அபயம் கிடைப்பதென்பது குதிரைக் கொம்பேயாகும்.

பிறமதங்களில் மிஷ்னரி சொஸைட்டிகளிருப்பதால் அந்த சொஸைட்டியார் தங்களைக் காப்பாற்றி வேண்டிய உதவிபுரிவர் என நினைத்து அந்த மதங்களைத் தழுவுவதும், அவ்வாறு தழுவியபின் அவர்கள் கோரிச் சென்ற சமத்துவம் முதலிய உரிமைகள் கிடைக்காமல் முன்போலவே கஷ்டப் படுவதும், அதற்கப்புறம் அவர்களிற் சிலர் வேறு மதத்தைத் தழுவுவதும் நாடறிந்த உண்மையாகும். முஸ்லிம்களில் மிஷனரி சொஸைட்டிகள் இல்லை யென்றாலும், இருக்கிற ஓரிரு சொஸைட்டிகளுக்குப் பொருளில்லை யென்றாலும் இஸ்லாம் மதத்தினுடைய லக்ஷியமே இவ்வுலகில் எல்லா மக்களும் சமத்துவமாக இருக்கவேண்டும்; மறுமையில் நற்பயனை அடையவேண்டும் என்றிருப்பதால்

ஒவ்வொரு முஸ்லிமும் தம் சொந்த ஹோதாவில் புதிய முஸ்லிம்களுக்குத் தம்மாலான உதவியை மனமுவந்து செய்வதால் இஸ்லாம் மதத்தைத் தழுவும் பிற சமயத்தார் மறுபடியும் தங்கள் பூர்வீக மதத்தில் திரும்புவது அரிதினும் அரிதாக இருந்து வருகிறது. ஆதலின், தீண்டப் படாத சகோதரர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவும் பக்ஷத்தில் அவர்கள் விரும்பும் சம உரிமை முஸ்லிம்களால் அளிக்கப் படுவது மட்டுமில்லாமல் வேண்டிய உதவிகளை முஸ்லிம்களிடமிருந்து பெற்றுக் கொள்வார்கள் என்பதிற் சந்தேகமில்லை.

தீண்டாதார்கள் இவ்விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக விஷயத்தை ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை தெரியவரும். தீண்டாதார்கள் பிற மதம் புகும் பிரச்சினையில் இஸ்லாம் மதத்தைத் தழுவும் விஷயத்தையும் ஆலோசனை செய்கிறார்கள் என்பதை முஸ்லிம்கள் அறியாமலில்லை. தங்களது உயிரினும் அதிக மதிப்புவாய்ந்த இஸ்லாம் மதத்தைத் தீண்டாதார் தழுவுவார்களாயின் அவர்களை வரவேற்கவும், வேண்டிய உதவி செய்யவும் முஸ்லிம்கள் தயாராகஇருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை தாழ்த்தப் பட்ட மக்களுக்கு அறிவித்துக்கொள்கிறோம்.

ஒற்றுமைக்கான வழி

முஸ்லிம்களுக்கும் இந்தியாவிலுள்ள இதர சமூகத்தினருக்குமிடையில் ஏற்பட்டுள்ள பிளவுகளுக்கும் விகர்ப்பங்களுக்கும் ஹிந்துமகா சபையைச் சேர்ந்த ஹிந்துக்கள் தாம் பொறுப்பாளிகளென்பது விஷயங்களை ஆராய்ந்து பார்த்ததிலிருந்து தெரியவருகிறது. சமூக ஒற்றுமையைக் குறைப்பதற்காக சென்ற சில வருஷங்களாக எந்தெந்த வழிகளில் விஷத்தைக் கலந்து வருகிறார்களென்பதை ஆரிய சமாஜிகளால் நடத்தப்பெறும் பத்திரிகைகளில் மாத்திரமிருந்தே அறிந்துகொள்ளலாம். அப்பத்திரிகைகளில், விகற்பத்தையும் வேற்றுமையையும் உண்டுபண்ணுவதற்கான விஷயங்களில்லாத பக்கம் கிடைப்பதரிது. அவர்களிலுள்ள சில தலைவர்கள், வழிகாட்டிகள் எனப்படுவர்கள் மிகவும் முழுமோசமான மூளைச் சக்தியுள்ளவர்களாக இருப்பதால், முஸ்லிம்களை வசுவதையும் திட்டுவதையும் தவிர அவர்களுக்கு வேறு வேலை என்பதே கிடையாது. இந்தியாவிலுள்ள பல்வேறு சமூகத்தினரிடை பிளவுகளையும் வேற்றுமைகளையும் உண்டுபண்ணி ஒருவரையொருவர் குரல்வளையை நெறிக்கச் செய்து தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே அவர்களுடைய சகல முயற்சிகளும் பிரயத்தனங்களும் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

இவர்கள் இப்படிச் செய்வதால் தேசாபிமானம் என்ற முந்தாணி துண்டுதுண்டாகக் கிழிந்துவிட்டது; ஒற்றுமை ஐக்கியம் என்ற மூலதனம் கொள்ளை கொள்ளப்பட்டுவிட்டது; பத்திரிகைத் தொழிலினுடைய உண்மையான நோக்கம் பாழ்படுத்தப்பட்டது; இந்திய தேசியத்தின் பலமான இணைப்புகளைச் சிதரவடிப்பதில் இவர்கள் வெற்றியடைந்துவிட்டனர், என்பன போன்ற காரியங்களுக்காக நாம் வருந்தவில்லை. ஆனால், இந்தியாவின் அசல் நோக்கம், அல்லது அந்த ஜனங்கள் தங்களது கருத்தில் கொண்டிருக்கிற தேசாபிமானம் என்பது அவர்களுடைய விஷமத்தனமான இச்செய்கையினால் கிடைத்துவிட்டதா என்பதுதான் நமது முக்கிய கவனிப்பாக இருந்து வருகிறது?

இவர்களுக்குள்ளும் சில பெரியார்கள் இருக்கிறார்களாதலின் இவர்கள் இவ்விதமான கோர மனப்பான்மையும், விவகார உணர்ச்சியும் தேசியத்தைக் கொல்லும் பாஷாணங்களாகவிருக்கின்றனவென்பதை உணர்ந்து பலமுறை சமூக ஒற்றுமையை ஏற்படுத்த முன்வந்துமிருக்கின்றனர். ஆனால், இந்த தகராருக்குக் காரணம் மேலெழுந்த வாரியாகவுள்ள அற்ப விஷயங்கள் தாம் என்றே இவர்கள் கருதியிருந்தனர். புண்ணில் ஆழமாகச் சத்திர சிகிச்சை செய்யாமலிருப்பதும், தோலுக்கு மேலில் சுத்தம் செய்துவிடுவதுமட்டிலுமே போதுமானது என்று இன்னோர் கருதிவிட்டார்கள் போலிருக்கிறது. ஆனால், புண்ணை ஆற்று

வத்ற்குப் புண்ணுக்குள் உள்ள நச்சுத் தண்ணீரை வெளிப்படுத்துவது அவசிய மாகவிருந்தது. இந்த நச்சுத்தண்ணீர்தான் புண்ணுக்குள் 'இருந்துகொண்டு உள்ளுற பொறையோடிக் கொண்டிருக்கிறது. எனவே, சென்றகாலத்தில் தாங்கள் ஆளப்படும் ஜாதியா ராக இருந்தோம் என்றும், அதற்கு தக்க பழி வாங்கிவிட வேண்டும் என்றும் ஹிந்து நண்பர் கள் எண்ணிக்கொண்டும், 1857-ம் வருஷத்து சிப்பாய் கலகத்திற்கு முன்னர் நடைபெற்ற சில வருந்தத்தக்க விஷயங்களை மறுபடியும் ஞாபகமூட்டிக் கொண்டும் இருப்பதை நிறுத் திக்கொண்டு அதாவது எதிர்காலத்தில் இன்ப மாக இருக்கவேண்டும் என்பதற்காக இறந்த காலத்தை இப்பொழுது திரும்ப நினைத்துக் கொண்டிருக்காமல், இந்தியாவிலுள்ள தற்போ தைய அடிமைத்தன்மையின் பேரில் தங்க ளுடைய உணர்ச்சியையும் சிந்தையையும் செலுத்தும்வரை ஹிந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்குமிடையிலுள்ள வேற்றுமை முடிவடை யாது என்பது நம்முடைய பலமான அபிப் பிராயமாகும்.

ஒவ்வொரு சமூகத்திலும் நல்லோரும் தீ யோருமிருக்கின்றனர். ஒவ்வொருவருடைய காலத்திலும் நன்மையும் தீமையும் நிகழுகின் றன. ஒவ்வொரு சமூகத்திலும் நியாயஸ்தனும் அநியாயஸ்தனு மிருந்திருக்கிறுன். பொது வான இவ்விதியைவிட்டு இந்தியாவிலுள்ள முஸ்லிம் அரசாட்சிக்காலம் விலக்கப்பட்டில்லை. ஆகவே, இந்தியாவில் முஸ்லிம்கள் ஆட்சி செய்த காலத்தில் நன்மையும் தீமையும் நிகழ்ந் திருக்கலாம். முஸ்லிம் அரசர்களிற் பலர் நீதி வானுகவும் நேர்மையாளராகவும் இருந்திருக்க லாம். இதுபோல ஒன்றிருவர் கொடுங்கோல ராகவும் அநியாயக்காரராகவும் இருந்திருக்கக் கூடும். இந்தியாவிலுள்ள முஸ்லிம் அரசர்கள் அனைவரும் மிகவும் நல்லவர்கள் என்றும், அவர் களில் எவரும் மயிரிழைகூடப் பிசகாமல் நடந்துகொண்டனர் என்றும் சொல்லிக்கொள்ள ஒருவரும் தயாரில்லை. ஆனுலும், அதற்காக முஸ்லிம் ஆட்சியில் நடைபெற்றசில உண்மைத் தவறுகளையும், அநேகம் பொய்க்கதைகளையும் ஒன்றுசேர்த்துக் கொண்டு ஹிந்துமகா சபை யின் கூட்டங்களிலும், மகாநாடுகளிலும், பள் ளிக்கூடங்களிலும், பத்திரிகைகளில் தினசரி பத்திபத்தியாகவும், நாவல்களிலும், நாடகங்களி லும், சரித்திரங்களிலும் திரும்பதிரும்ப நினைப் பூட்டிக்கொண்டிருப்பது புத்திசாலித்தனமான காரியமாகுமா? என்று வினவுகின்றேம். இவ் வாறு செய்வதன்மூலம் சின்னஞ்சிறு பிள்ளை களினுடைய நாவில் இக்கதைகள் தினசரி பிரஸ் தாபிக்கப்பட்டு, பல்வேறு சமூகத்திலும், தப் பருத்தமும், கெட்ட எண்ணமும், விரோதமும், வேற்றுமையும், துவேஷமும் வேரூன்றி விடாதா என்று நாம் வினவுகின்றேம்?

மகா சபையைச் சேர்ந்த ஹிந்துத்தலைவர்கள் பொதுஜன சமூகத்தைத்தூண்டி விடுவதற்காக அவர்களது உணர்ச்சிகளை, வெறுப்பு விரோ தம் ஆகியவைகளால் கிளப்பி விட்டிருக்கிறுர் கள் என்பதும், இதற்காக அவர்கள் முஸ்லிம் களைத்தான் குறியாகத் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறுர்கள் என்பதும், அவர்களது சிந்தையும் பிரயத்தனமும் மதசம்பந்தமாகவும் ராஜீய சம்மந்தமாகவும் உள்ள அஸ்திபாரத்தை சேகரிப்பதிலேயே செலவு செய்யப் பட்டிருக் கின்றன என்பதும் தெரியவருகிறது. இதையே அவர்கள் தேசமெங்குமுள்ள ஹிந்துக்களிடத் தில் பரப்பி, இறந்தகாலத்திலிருந்த வேற்றுமை களை நிகழ்காலத்திய சச்சரவுகளுக்கு முக்கிய காரணமாக்கிக் கொண்டிருக்கிறுர்கள். மத சம்பந்தமாக சுவாமி தயானந்தரும், ராஜீய விஷயங்கள் சம்மந்தமாக திலகரும் முஸ்லிம் களுக்கு விரோதமாகப் பலத்த போராட்டத் திற்கான காரியங்களை எல்லாம் ஒன்றுசேர்த் தனர். இந்தியாவிலுள்ள மூலைமுடுக்குகளிலெல் லாம் சுவாமி தயானந்தரின் சத்தியார்த்த பிரகாசம் என்ற நூல் பிரசுரம் செய்யப்பட்டு ஹிந்துக்களிடம் பிரசாரம் செய்யப்பட்டது. இந்த நூலில் இஸ்லாம் மதத்திற்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் விரோமாக இயன்றவரை ஹிந்து சமூகத்தைச் சண்டைபோடும்படி தூண்டப்பட்டிருக்கிறது. இந்தச் சதியாலோ சனையை அதிகப் பிரயோசனகரமுள்ளதாகவும் கட்டுப்பாடானதாகவும் ஆக்குவதற்காக நமது நாட்டிலுள்ள கிராமங்கள், பட்டினங்கள், நக ரங்கள் ஆகியவைகளிலெல்லாம் ஆரிய சமாஜம் என்ற வலை வீசப்பட்டிருக்கிறது. வாராந்திர, மாதாந்திர, வருஷாந்திரக் கூட்டங்களிலெல் லாம் பிரசங்கங்களின் பீடிகையானது இஸ்லாத் தையும் முஸ்லிம்களையும் தூஷிப்பதும், இஸ்லா மிய அரசாட்சி நடைபெற்ற காலத்தில் நிகழ்ந்த அற்ப விஷயங்களையும், அக்காலத்தில் நடந்த தாக இட்டுக் கட்டிக்கொண்ட விஷயங்களையும் மிகைப்படுத்திக் கூறுவதும், ஹிந்துக்களின்

உணர்ச்சிகளை முஸ்லிம்களுக்கு விரோதமாகத் தூண்டிவிடுவதுமாக ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. பத்திரிகைகள், பிரசுரங்கள், சஞ்சிகைகள், புத்தகங்கள் ஆகியவைகளெல்லாம் இஸ்லாத்திற்கும் இஸ்லாம் மதப் பெரியார்களுக்கும், இஸ்லாத்தின் புதல்வர்களுக்கும், முஸ்லிம் அரசர்களுக்கும் விரோதமாக ஏசுவதற்கும் திட்டுவதற்குமென்றே ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. எனவே, இம்முறையில் விரோதவேற்றுமை என்ற பெரும் பிரவாகத்தை முழுச்சக்தியுடன் இஸ்லாம் மதத்தினர்மீது ஓடும்படிச் செய்யப்பட்டிருக்கிறது.

இம்முறையில் திலகர், ஹந்துப் பொது ஜனங்களினுடையவும் முக்கியமாக மகாராஷ்டிரர்களினுடையவும் வகுப்பு உணர்ச்சியைத் தூண்டிவிடுவதற்காக ஔரங்கசீபுக்கும் சிவாஜிக்குமிடையில் நடைபெற்ற போராட்டங்களை மிகைப்படுத்திக் கூறி சிவாஜியை ஒரு தேசிய வீரரென்றும், இதற்குநேர் எதிராக ஔரங்கசீப்பை ஹிந்துக்களுக்கு அநீதி செய்தவரென்றும், துவேஷியென்றும் கருதும்படி செய்து விட்டார். இதனுல் இட்டுக்கட்டப்பட்டவைகள் யதார்த்தமாகவே நிகழ்ந்தனபோல் தோன்றும்படிச் செய்யப்பட்டன. இது சம்மந்தமாக போலி எழுத்துக்கள் வெளியில் கொண்டுவரப்பட்டன. பொய்க்கதைகளும், நாவல்களும், நாடகங்களும் எழுதப்பட்டன. இவைகளுக்கென பிரசுராலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. நாடகக் கொட்டகைகளும், வேடிக்கை காட்டப்படுமிடங்களும் இவைகளின் பிரசாரத்திற்காக ஏற்படுத்தப்பட்டன. இவ்விதமான முறையில் விரோதம், வேற்றுமை, துவேஷம் என்பவைகள் குஜராத்திலிருந்து ஆரம்பித்து வங்காளம் வரையிலும், கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீரம் வரையிலும் பரவச் செய்யப்பட்டன. இதன்பயனுக விஷம்கலந்த நூல்களும் பிரசுரங்களும், பிரசங்கங்களும் ஹிந்து வாலிபர்களின் இருதயங்களிலும் மூளையிலும் விஷத்தைப் பரவச் செய்துவிட்டது. இவர்களாலேற்படுத்தப்பட்ட ஏசல்களும் தூஷணைகளும் எவ்விதத் தடங்கலுமின்றி இன்றுவரை நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.

இந்த மட்டுடன் போதுமாக்கிக் கொள்ளாமல் ஹிந்து நூலாசிரியர்கள் வேண்டுமென்றே பல நூல்களை இதற்கு முன்னும் எழுதினர். இப்பொழுதும் எழுதுகின்றனர். இவைகளில் முஸ்லிம் அரசாங்கங்களுக்கு அபகீர்த்தி யுண்டுபண்ண முயற்சி செய்யப்பட்டிருப்பதுடன், முஸ்லிம் அரசர்கள்மீது தவருன குற்றங்களைச் சுமத்தி, ஹிந்துக்கள் அநீதி செய்யப்பட்டவர்கள் என்பதை ருஜுப்பிப்பதற்காக பொய்க் கதைகள் ஜோடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாருன புத்தகங்கள் ஸ்கூல்களின் பாடப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்விதமாக ஹிந்து இளைஞர்கள் அக்ஷராப்பியாசத்திலிருந்து கல்விகற்று முடியும்வரை, முஸ்லிம்களுடன் ஒற்றுமையாக இருப்பதற்கு விரோதமான உணர்ச்சியுள்ளவர்களாக மாறும்படியான விதத்தில் படிப்பிக்கப் பட்டுவிடுகிருர்கள். ஆனுல், கல்விகற்ற ஹிந்து நண்பர்களிற் சிலர் சமூக ஒற்றுமைக்கு ஆவலுள்ளவர்களாகக் காணப்படுவது உண்மையேயாகும். ஆயினும் அவர்கள் தங்களது பிறவிக்குணத்தாலேயே இவ்விஷயத்தில் ஆர்வமுள்ளவர்களாக இருந்து வருகின்றனர்.

முஸ்லிம்களுக்கு விரோதமாக வேற்றுமையையும் துவேஷத்தையும் உண்டுபண்ணுவதற்காக ஆரிய சமாஜிகளின் இயக்கமும் மும்முறமாக வேலை செய்துகொண்டும், சுமார் முப்பது அல்லது நாற்பது வருஷகாலமாக துவேஷ நூல்கள் தங்கு தடையின்றிப் பிரசுரிக்கப்பட்டுக்கொண்டும், விஷமப் பிரசங்கங்களும், ஆசிரியர்களின் நூல்களும் இப்பிரசாரத்திற்கென்றே ஒதுக்கிவைக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது முஸ்லிம்கள் சார்பாக இதற்கு விரோதமான காரியமேதேனும் செய்யப்பட்டிருக்கிறதா என்ற வினு இவ்விடத்தில் இயற்கையாக உண்டாகின்றது. ஹிந்துக்களை அல்பமாக மதிக்கவும், கேவலமாக நினைக்கவும், அவர்கள்பால் துவேஷமும் ஆத்திரமும் கொள்வதற்காகவும் முஸ்லிம்களைத் தூண்டிவிடும் ஸ்தாபனம் முஸ்லிம்களுக்குள் கட்டுப்பாடாக இருக்கிறதா என்பதைக் கவனிக்கின், அப்படிப்பட்ட போட்டி ஸ்தாபனம் எதுவும் முஸ்லிம்களால் ஏற்படுத்தப்படவே இல்லை. அவ்வாறு எங்கேனும் இருக்குமாயின் அந்தச் சமயத்திலுண்டான கிளர்ச்சிக்கு அல்லது நிலைமைக்குத் தக்கவாறு தங்களைத் தற்காப்புச் செய்துகொள்ளும் நிமித்தம் ஒன்றிரண்டு ஏற்படுத்தப்பட்டு நிலைமை மாறியவுடன் அவைகள் உயிரற்ற ஸ்தாபனமாக்கப்பட்டிருக்கலாம்.

எனவே, முஸ்லிம்கள் சமூக ஒற்றுமைக்குப் பங்கம்வரும் தோரணையில் எந்தக்காரியத்தை

யும் செய்யவே இல்லை என்பதும், அவர்கள் எப்பொழுதும் இந்தியாவிலுள்ள பல்வேறு சமூகத்தினருக்குள்ளும் ஒற்றுமையுண்டாக்குவதற்கே முயற்சிசெய்து வந்திருக்கிறார்கள் என்பதும் தெளிவாகிவிட்டது. துர்அதிர்ஷ்டம் வாய்ந்த இந்த தேசத்தில் ரத்தஆறு ஓடுவதற்கு பதிலாக நேசம் என்ற பாசம் உண்டாகவேண்டும் என்றே முஸ்லிம்கள் விரும்பினர். ஆனால், மகாசபை மனப்பான்மையும் அவர்களது சுயநல எண்ணமும் எப்பொழுதும் இதற்குத் தடையாகவே இருந்து வருகிறது.

எனவே, இந்தியாவிலுள்ள பல்வேறு சமூகத்தினரும், பாலும் சர்க்கரையும்போல் ஒன்று சேர்ந்து தங்களுடைய தேசிய வாழ்க்கையை அமைதியாகவும் சமாதானமாகவும், முன்னேற்றகரமானதாகவும், வெற்றியுள்ளதாகவும் ஆக்கவேண்டுமென்று விரும்புவார்களாயின், இன்னும் தங்களுடைய மதசம்பந்தமானதும் சமூக சம்பந்தமானதுமான காரியங்களுக்கு இடைஞ்சல் உண்டாகக்கூடாது என்றும், தங்களது ராஜீய, வியாபார சம்மந்தமான காரியங்களில் ஒருவருக்கொருவர் நேர்மையான சம்மந்தமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றும் விரும்புவார்களாயின், அவர்களது ஐக்கியமான சக்திகள், ஆரியசமாஜமனப்பான்மையை மாற்றுவதற்காக ஒதுக்கிவைக்கப் படவேண்டும். இது ஒன்றில்தான் இக்காரியம் ஈடேறமுடியும். இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் விரோதமாக கட்டுப்பாடான முறையில் செய்யப்பட்டுவரும் பிரசாரங்கள் ஒரேஅடியாக நிறுத்தப்படவேண்டும். பிரசங்கிகளும் நூலாசிரியர்களும் தங்களது பிரசங்கங்களையும் நூல்களையும் தங்களது மதத்திலுள்ள சிறந்த விஷயங்களை வெளியிடுவதற்காகப் பிரத்தியேகப்படுத்திக் கொள்ள வேண்டும். இதர சமூகத்தினரை தூஷித்தல் திட்டுதல் போன்ற காரியங்களை நிறுத்திவிட வேண்டும். இந்திய இஸ்லாமிய ஆட்சிகாலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை சரித்திரத்தில் மிகவும் நீதியாய் எழுதவேண்டும். ராஜீயம், பொருளாதாரம் ஆகியவைகளுக்குரிய விஷயங்களை கிரியாம்சையில் செய்ய முயலவேண்டும். ஒவ்வொரு சமூகத்தாரும் தங்களது மத சம்பந்தமானதும் ராஜீய சம்பந்தமானதுமான உரிமைகளைப் பாதுகாக்கும் விஷயத்தில் நியாயமாகவே முயலுகின்றனர் என்று உணரவேண்டும். இவ்விதமான நிலைமை எற்பட்டால்தான் சமூக ஒற்றுமை என்ற கட்டிடத்தை கட்ட முடியும். இல்லையேல் விகற்பமும் வேற்றுமையும் வகுப்புப்பிளவும் இன்னும் அதிகமாக ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அந்நியர் நம்மை மிகைத்துக்கொண்டே இருப்பர். இந்தியாவில் சமூக ஒற்றுமை ஏற்படும் நாளில் இவையனைத்தும் பறந்துபோம். அப்படிப்பட்ட நன்னாள் எந்நாளோ?

"பாரான்".

வோக்கிங் மஸ்திஜில் காதியானிப் பிரசாரமா?

பிரிட்டிஷ் பிரபல நௌமுஸ்லிம் ஒருவர் கூறும் விபரம்.

[இங்கிலாந்திலுள்ள முஸ்லிம்களால் "தி பிரிட்டிஷ் முஸ்லிம் சொஸைட்டி" என்பதாக ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதும், சிலகாலத்திற்குமுன் "அகில இந்திய தப்லீக்" மகாநாட்டில் தலைமை வகித்த பிரிட்டிஷ் நௌமுஸ்லிம் ஜனப் லார்டு ஹெட்லீ அல்பாரூக் மர்ஹூம் அவர்கள் இச்சங்கத்திற்குத் தலைவராக இருந்ததும் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். இச்சங்கத்தைப்பற்றி காதியானிப் பத்திரிகைகள் போற்றிப் புகழ்ந்து எழுதி வருவதையும், தங்களது காதியானி பிரசார நூல் ஒன்றில் இச்சங்கத்தின் வேலைகளைப்பற்றி எழுதி இருப்பதையும் படித்த வகுப்பினர் நன்கு அறிந்திருப்பார்கள். இச்சங்கத்தில் காதியானிகளின் செல்வாக்கு அதிகமிருக்கிறது என்பதற்காகவே "தி வெஸ்டர்ன் முஸ்லிம் அஸ்ஸோஸியேஷனி"ன் ஜீவியத் தலைவரான ஜனப் டாக்டர் காலித் ஷெல்டிரேக் அவர்களும் வேறு சிலரும் இதில் சம்மந்தப்படாமல் ஒதுங்கி இருப்பது நேயர்கள் அறிந்த விஷயமாகும். இச்சங்கத்திற்கு காரியதரிசியாக இருந்த மிஸ்டர் அஹ்மதுபானெட் என்பவர் இப்பொழுது அச்சங்கத்திலுள்ள தமது பதவியை ராஜிநாமாச்செய்து விலகிக்கொண்டார்.

இவர் விலகிய விபரம் பத்திரிகைகளிலும் வெளியாயிற்று. ஆனால், இப்பொழுது அவர் ராஜிநாமாக் கொடுத்ததற்குக் காரணம் என்ன என்ற விபரம் ஷியாராலேயே எழுதப்பட்டிருப்பதால் அதனை நேயர்களின் பார்வைக்காக மொழிபெயர்த்துப் பிரசுரிக்கின்றனம். இவ்வறிக்கையினால், லண்டன் வோக்கிங் மஸ்ஜிதில் காதியானிகள் இஸ்லாமிய பிரசாரம் செய்கிறார்களா அல்லது காதியானிப் பிரசாரம் புரிகின்றனரா? என்பதும், முஸ்லிம்களாகிய நாம் லாகூர் காதியானிகளுக்குக் கொடுத்துதவும் பணம் இஸ்லாமியப் பிரசாரத்திற் குதவுகின்றதா? அல்லது காதியானிப் பிரசாரத்திற் குதவுகின்றதா? என்பதும் வெளியாகும். ப-ர்.]

பிரிட்டிஷ் முஸ்லிம் சொஸைட்டி ஆங்கிலேய வாழ்க்கையின்முன் நன்மதிப்பையும் செல்வாக்கையும் அடைவதற்காகத் தனக்குள்ளாகவே சீர்திருத்தம் செய்துகொள்வது அவசியமாக இருந்தது. அச்சங்கம் தானாகச் சீர்திருத்திக் கொள்ளட்டும் என்பதற்காகவே "நான் என் ராஜிநாமாச் செய்தேன்" என்ற விபரத்தைப்பற்றி விவரிக்காமல் மௌனம் சாதிக்கவேண்டும் என்று எண்ணி இருந்தேன். ஆனால், தற்போது நிகழ்ந்த சம்பவங்கள் எனது அபிப்பிராயத்திற்குக் துணையாக நிற்கவில்லை. ஆகவே, இதுசமயம் உண்மை விபரங்களைப் பொது ஜனங்களுக்கு அறிவித்துவிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு வந்திருக்கிறேன். மேலும், இதுசம்பந்தமாக ஒரு அறிக்கை வெளியிடவேண்டும் என்று அநேகர் என்னைக் கேட்டுக்கொண்டு மிருக்கின்றனர். ஆதலால், அங்கு நடக்கும் விபரங்களைச் சுருக்கமாக வெளியிட முன்வந்துளன்.

இந்த சொஸைட்டியை சுயேச்சையுள்ள ஸ்தாபனமாக்கிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் நான் முன்னின்றுழைத்தேன். இந்தச் சபையை இங்கிலாந்து முஸ்லிம்களுக்குப் பாத்தியப்பட்டதாக ஆக்கிவிடவேண்டுமென்பதும், இதில் குறிப்பிட்ட ஒரு கூட்டத்தாருக்கோ ஒரு வகுப்பாரின் நன்மைக்கோ உரிமை இருக்கப்படாது என்பதும் எனது கருத்தாக இருந்தது. தற்போது இங்கிலாந்தில் செய்துவரப்படும் இஸ்லாமிய மதபோதனைகளில் ஒரு முக்கிய மாறுதல் செய்துவிட வேண்டும் என்றும் நான் எண்ணி இருந்தேன். வோக்கிங் மஸ்ஜிதினுடைய இமாம்தான் ஒவ்வொரு தொழுகையிலும் இமாமத்துச் செய்து வரவேண்டும் என்று இச்சங்கத்தின் தலைமை ஸ்தலத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வழக்கத்தை முறித்துவிடவேண்டும் என்றும் நான் விரும்பினேன்.

மேலும் இந்த சொஸைட்டியை குறிப்பிட்ட ஒரு வேலை செய்வதற்குத் தகுதியுள்ளதாக ஆக்கிவிடவேண்டும் என்று நான் இரண்டு வருஷகாலம் தொடர்ச்சியாக ஆலோசனை செய்துகொண்டிருந்தேன். பிறகு, சொஸைட்டியின் உள்வயணத்தை ஆழ்ந்து கவனித்துப் பார்த்ததில் அச்சொஸைட்டிக்காக நான் செய்த முயற்சிகளெல்லாம் வீணாகப்போய்விட்டது என்பதுமட்டுமில்லாமல் அது தவறானமுறையில் உபயோகிக்கப்பட்டுவருகிறது என்பதையும் உணர்ந்துகொண்டேன். முஸ்லிம்களுக்கு ஊழியம் செய்வதற்கென்று தினசரி அதிகச் சிரமத்துடன் சிலமணி நேரங்களை ஒதுக்கி வைத்திருந்தேனாயினும் இந்த சொஸைட்டியின் தற்போதய நிலைமையை நன்கு கவனித்துப் பார்த்ததிலிருந்து சத்தியம் இல்லாமல் ஒழிந்துகொண்டே வந்திருக்கிறது என்பதும், தற்போதய நிலைமையை உறுதிப்படுத்தி வைப்பதற்காக வேண்டுமென்றே சத்தியத்தை அடக்கி மறைத்து வைக்கப்பட்டு வந்திருக்கிறதென்பதும் தெரியவந்தது.

இந்தியாவிலுள்ள பத்திரிகைகளில் இச்சங்கத்தின் ஊழியங்கள் சம்மந்தமாகப் பாராட்டுதல்களும் போற்றுதல்களும் காண்பிக்கப்பட்டு வந்திருக்கின்றன வாதலின், இச்சங்கத்தின் கேவல நிலைமையைப்பார்த்து வாசகர்கள் எனது இவ்வறிக்கையை நம்பும் விஷயத்தில் இருமனங் கொண்டவர்களாக இருக்கும்பக்ஷத்தில் அவர்கள் தயவுசெய்து இங்குவந்து விஷயங்களை நேரில் பார்த்துக்கொள்ளட்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சொஸைட்டிக்கு நான் ஊழியம் செய்துகொண்டிருந்த காலத்தில் தினசரி இதிலுள்ள பல அங்கத்தினர்களுக்கிடையில் தொடர்ச்சியாகச் சச்சரவு நிகழ்ந்துகொண்டே இருந்தது. இச்சங்கத்தின் ஊழியர்களிற் பலர் பிணங்கிக்கொண்டே இருந்தனர். ஆனால், சொஸைட்டியிலுள்ள தற்போதைய ஊழியர்கள் மிகவும் ஒற்றுமையாய் வேலைசெய்து வருகிறார்கள் என்றே வெளிக்கு அறிவிக்கப்பட்டு வந்தது. பொதுஜனங்களிடம் இம்மாதிரி அறிவித்ததானது சுத்தத்தவறானதும், உண்மை

யற்றதுமான விஷயமாகும். புதிய காரியதரிசியைத் தெரிந்தெடுப்பதற்காகவும், சங்கச் சட்டங்களைப் பரிசிலனை செய்வதற்காகவும் கடந்த சிலகாலத்துக்குமுன் இந்த சொஸைட்டியின் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. இந்தக்கூட்டம் சட்டவிரோதமானது என்று கூறி இதனைவிட்டு வெளியேறியமுதல் கனவான்தான் அதனுடைய தற்போதைய பொக்கிஷதாராக இருந்து வருகிறார்.

இச்சங்கம் ஏதேனும் ஊழியம் செய்ய வேண்டுமாயின் ஆங்கிலேய மனப்பான்மைக்கேற்ப இஸ்லாமியப் பிரசாரம் செய்வதற்குத் தகுந்த நூல்களை வெளியிடவேண்டும் என்பது எனதபிப்பிராயம். எனக்குத் தெரிந்தவரை வோக்கிங்மிஷன் வெளித்தோற்றத்தில் காதியானிக் கொள்கைகளை நேர்முகமாகப் பிரசாரம் செய்வதில்லை என்று தெரியவருகிறது. ஆனால், அந்தரங்கத்தில் அதன் சகல பிரசாரமும் அந்தக்கொள்கையைப் பரவச்செய்வதாகவே இருக்கிறது. அவர்கள் ஆங்கிலேயர்கள் முன் சமர்ப்பிக்கும் இஸ்லாமானது கொள்கை சம்மந்தப்பட்டவரையில் கிறிஸ்துவமயமான இஸ்லாமாகத்தானிருக்கிறது. இதில் அஹ்மதிக் கொள்கைகளும், அபிப்பிராயங்களும் பலமாக மிகைத்திருக்கின்றன. ஆனால் இஸ்லாத்தைப் பிரசாரம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் சபையில் காதியானிக் கொள்கைகளுக்கு எவ்வித இடமும் இருக்கக்கூடாது என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனெனில், அஹ்மதியர்களும் காதியானிகளும் இஸ்லாத்தின் வட்டத்திற்குப் புறம்பானவர்கள் என்று இந்தியாவின் பிரதம முப்தியான மௌலானா முஹம்மது கிபாயத்துல்லா சாகிப் அவர்கள் மிகத்தெளிவாக பத்வாக்கொடுத்திருக்கிறார்கள்.

சென்ற 1934-ம் வருஷத்தில் வோக்கிங் மிஷன் இந்த சொஸைட்டிக்கு ஒரு உதவிநிதியேற்படுத்தியது. இந்த உதவியின் காரணமாக சொஸைட்டியின் சுயேச்சை பாதிக்கப்படுகிறதா இல்லையா? என்ற விஷயம் விவாதத்திற்கிடமானது. என்றாலும், இந்த சொஸைட்டிக்கு வோக்கிங் மிஷன் கொடுக்கிற இவ்வுதவியினால் இரண்டிற்கிடையில் நெருங்கிய சம்மந்த மேற்பட்டிருக்கிறது. இதனால், இந்த சொஸைட்டியின் சகல காரியங்களும் வோக்கிங் மிஷனின் செல்வாக்கின் கீழிலேயே நடைபெற்று வருகிறது. இந்த உதவிக்காக வோக்கிங் மிஷன் ஏற்படுத்திய சகல நிபந்தனைகளும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன: வோக்கிங் இமாம் நியமிக்கப்பட்டு விட்டார்; எனது வருஷாந்திர ரிப்போர்ட் அமுக்கிவைக்கப்பட்டது; வருஷாந்திரப் பொதுக்கூட்டத்தின் போழ்து சங்கத்தின் கொள்கைக்கும் சட்டத்திற்கும் விரோதமாக தேர்தல் நடத்தப்பட்டது.

கடைசியில் செய்யப்பட்ட இந்த நடவடிக்கையினால், இச்சங்கத்தின் சட்டதிட்டங்களனைத்தையும் மாற்றி இந்த சங்கத்தை வோக்கிங் மிஷனின் தலைமையின்கீழ் ஏற்படுத்திவிட விரும்புவதாக கருதப்படவேண்டும். எனவே, வோக்கிங் மிஷனின் உதவிக்குப்பிறகு இந்த சொஸைட்டியின்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள நிபந்தனைகளைவிட்டு விடுதலை பெறவேண்டும் என்றுகேட்க இச்சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு உரிமை இருக்கிறது. வோக்கிங் மிஷன் தனது கொள்கையையும், நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்காக இஸ்லாமிய உலகம் முழுவதிலும் உதவிதேடுகிறது. இவ்வித நிலைமையில் தனக்குக் கிடைத்துள்ள நிதியிலிருந்து சிறிது தொகையை முஸ்லிம் சங்கம் ஒன்றிற்கு உதவியாக அளித்தால் அதற்காக விசேஷ கட்டுத்திட்டத்தையும், நிபந்தனையையும் ஏற்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை.

எவ்வித நிலைமையின் காரணமாக நான் எனது பதவியை ராஜினாமாச் செய்தேன் என்பதை மேலே கூறியுள்ள விபரத்திலிருந்து வாசக நேயர்கள் யூகித்தறிந்து கொள்ள முடியும். வோக்கிங் மிஷனிடமிருந்து உதவிபெறுவது சம்மந்தமான பிரச்சினை இந்தசொஸைட்டியில் ஏற்பட்டபோதே நான் ராஜினாமாச் செய்திருக்கவேண்டும் என்பது உண்மையேயாயினும், சொஸைட்டியின் செல்வ நிலைமையை உத்தேசித்து அப்பொழுது நான் இவ்விஷயத்திற்கு அவ்வளவு முக்கியாம்சத்தைக் கொடுக்கவில்லை. ஆனால், இப்பொழுது கட்டுத்திட்டங்களும், நிபந்தனைகளும் அமலில்வந்து சங்கத்தின் சுயேச்சை பறிக்கப்பட்டு விட்டபடியால் நான் ராஜினாமாச் செய்யவேண்டிய நிலைமைக்கு வர நேர்ந்தது; எனது அனுதாபமான சகல முயற்சிகளும் வீணாயின; என்னுடைய எல்லா அபிலாஷைகளும் தலைகீழாகப் புரட்டப்பட்டு விட்டன.

நான் ராஜினாமாச் செய்தபின் இந்தியாவில் என்னைப்பற்றிப் பிரசுரிக்கச்செய்த செய்தி

20837

களெல்லாம் பொய் பிரசாரங்களாகும். இங்கிலிஷ் பத்திரிகைகளில் ஷியா சுன்னி வகுப்புகளுக்கிடையிலுள்ள வித்தியாசங்களும் பாகுபாடுகளும் பிரசுரிக்கப்படுகின்றன.

நான் எனது சொந்த நலத்தை அடைவதற்கான முயற்சியில் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை; இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தச் சங்கத்தில் நான் சாதாரண அங்கத்தினனாகக்கூட இருக்க விரும்பவில்லை என்பதையும், சாதாரண அங்கத்தினர் பதவியையும்கூட நான் ராஜினாமாச் செய்துவிடுகிறேன் என்பதையும் இஸ்லாமிய உலகம் முழுவதற்கும் மிகவும் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"அல்ஜமிய்யத்"

சுகஜீவியாய் வாழ்வதற்குள்ள உபாயங்கள்.

ஆரோக்கியம் மனிதனது ஜன்ம சுதந்தரமாகும். பிறப்பது எப்படி இயற்கையோ அப்படியே சுகமாக விருப்பதும் இயற்கையேயாகும். ஒருவன் தான்செய்யும் துர்க்கிருத்தியங்களுக்கு எவ்வாறு ஜவாப்தாரியோ, அவ்வாறே அவன் அசௌகரியத்திற்கும் ஜவாப்தாரியாவான். எந்த ஜனங்கள் தங்கள் தேகங்களை தங்கள் இஷ்டப்படி நடத்தி தங்களுக்குச் செவ்வையாய்த் தெரிந்திருக்கவேண்டிய தேகாரோக்கிய விதிகளை மீறி நடக்கிறார்களோ அவர்கள் தேகப்பாவிகளாவர். அவர்கள் தங்களுக்கு விரோதமாக ஒருகுற்றத்தைச் செய்வதுடன் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும், பின்னால் வரப்போகிற தங்கள் சந்ததியார்கட்கும் விரோதமான குற்றத்தைச் செய்கிறார்கள் என்று டாக்டர்கள் கூறியிருக்கின்றார்கள். சுகஜீவியாக விருக்கவேண்டுமாயின் சுகாதார வாழ்வின் விதிகளை அனுசரிக்கவேண்டும். அப்போதுதான் நமது வாழ்நாள் மிகவும் சந்துஷ்டியாகச் சென்று கொண்டிருக்கும். பலஹீனமுள்ளவர்கள் எவ்வளவு சுலபமாய்த் தங்கள் பலக் குறைவை இயற்கையினின்று அடைகிறார்களோ, அப்படியே பலசாலிகளும் தங்கள் பலத்தை அடைகின்றார்கள்.

வியாதிப்படுவது ஓர் அவமானம். அது தேக பலஹீனத்தை மட்டுமின்றி மனோதிடமில்லாதிருப்பதையும் காட்டும். ஆரம்பத்தில் காண்பிக்கும் இயற்கையின் எச்சரிக்கையை அலட்சியம் செய்வதின் பலன் இதுவாகும். இயற்கையானது அற்பக் குறிகளைக் காட்டி நமக்கு எச்சரிக்கை செய்கிறது. இந்த எச்சரிக்கைகள் முக்கியமானவை என்று கவனியாது இயற்கையின் சட்டங்களை மீறி நடந்துகொண்டே வந்தால் அதாவது, அதைக் கோபமூட்டினால் அது தன் ஆயுதங்களாகிய வியாதிகளைக்கொண்டு நம்மை பதிலுக்கு எதிர்க்கிறது.

இளம்பிராயத்தில் வியாதியை எதிர்க்கும் சக்தி அதிகமிருப்பதால் அநேக வியாதிகளை ஜெயிக்கலாம். ஆனால், வயது செல்லச்செல்ல எதிர்க்கும் சக்தி கம்மிப்பட்டு, மெதுவாய், கள்ளத்தனமாய் அநேக விதமான வியாதிகள் தோன்றுகின்றன. இவற்றை எதிர்க்க தேகத்துக்கு வலுவில்லை. கழிவிடையும் போஷணையும் முக்கியமான அம்ஸங்களாதலின் இவை இரண்டும் சரிசமானமாக இருந்தால் ஆரோக்கியமும் சுகவாழ்வும் உண்டாகும். வயிற்றை சதாவும் நிறப்பிக்கொண்டிராமல் அனேக நேரங்களில் பட்டினியாக விருப்பதுகொண்டு மனிதன் சுகஜீவியாக வாழ முடியுமென்று டாக்டர்கள் தங்கள் ஆராய்ச்சிமூலம் கண்டுபிடித்திருக்கின்றனர். மனிதனைக் கொல்லுவதில் கூரிய வாளைவிட அதிகமாய் உண்பது கொடியதென டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மனிதன் நாற்பது அல்லது நாற்பத்தைந்து வயது ஆனவுடன் தன்னுடைய ஆகாரத்தை மிகவும் குறைத்துக்கொள்ளவேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய தவசியம். அதன் அளவு எவ்வளவு? அதன் குணம் என்ன? என்பவைகளை ஒவ்வொருவருடைய தொழில், அவர் செய்யும் வியாயாமங்கள் இவைகளைக் கவனித்து தீர்மானிக்க வேண்டும். ஆனால், இங்கு நாம் பொதுவாகத்தான் சொல்லவேண்டும். எனவே கார்போஹைட்ரேட்டு (புஷ்டியுள்ள பதார்த்தம்) களையும் கொழுப்புச் சத்துள்ளவைகளையும் மெதுவாய்க் குறைக்க வேண்டும்.

சுத்தமான காற்று

சரியானபடி சுவாஸித்தல் முக்கியம் என்பதை இங்கு நாம் வற்புறுத்தவேண்டிய அவசியம் இல்லை. ஆரோக்கியத்திற்குச் சுத்தமான காற்று அவசியம் என்பதையும், அந்தக்காற்றினல் சுவாஸ சம்மந்தமான வியாதிகள் வரவொட்டாமல் தடுக்கலாம் என்பதையும் அநேகம் தரம் சொல்லக்கேட்டிருக்கிறோம். ஆனல் இத்துடன் தினம் பிராணுயாமம் செய்யும் பழக்கத்தை அனுசரிக்கவேண்டும். நாம் தினம் ஒருதரமோ, அல்லது இரண்டுதரமோ பிராணுயாமம் செய்து நுரையீரல்களைச் சுத்த காற்றைக் கொண்டு சுத்தம் செய்யவேண்டும். க்ஷய ரோகத்தைத் தடுத்துக்கொள்வதற்கு தினம் 100 ஆழ்ந்த சுவாஸங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள். உண்பதும் தண்ணீர் அருந்துவதும் வாழ்நாளைக்குள்ள முக்கிய காரியங்களென பொதுவாகவுள்ள அபிப்பிராயத்துக்கு மாருக, ஜீவாதாரமான காற்றுனது ஜீவியத்திற்கு முக்கியமானதென சுகாதார சாஸ்திரம் ஸ்தாபிக்கிறதென டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிருர்கள். ஆனல் வியாயாமஞ் செய்வதற்கு மூன்று காரியங்கள் பிரதானமாகும். (1) பிராணுயாமம் செய்ய ஆரம்பிப்பதற்குமுன் இரைப்பை காலியாக இருக்கவேண்டும்; (2) இடம் திறந்த வெளியாக இருக்கவேண்டும்; (3) சௌகரியமான தேகநிலை இருக்கவேண்டும். நாம் வேலை செய்துகொண்டிருக்கும்போது கூட நாமே சில சுவாஸங்களை உட்கொள்ளவேண்டும். இந்த பழக்கத்தை அனுசரித்தல் மிகவும் சிறந்ததாகும். இந்த சொற்ப காரியத்தினல் அப்போதைக்கப்போது பிராணவாய்வு தேகத்திற்கு சப்ளை ஆகும்.

வியாயாமம்

இதை ஒழுங்காய்ச் செய்யவேண்டும். தேகத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் அனுகூலத்தைக் கொடுக்கும்படியான சில வியாயாமங்களை தினம் 10 அல்லது 15 நிமிஷகாலம் வரையில் எடுத்துக்கொள்ளும் பழக்கத்தை அனுசரிப்பது நலம். இந்தக் காலநிர்ணயம் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில், வியாயாமம் செய்வதற்கு அதிக நேரம் செல்லுமானல் அதில் ஊக்கமுள்ளவர்கள் தவிர, மற்றவர்கள் அதைவிடாமல் நடத்திக்கொண்டு வரமாட்டார்கள். ஒரு தொழிலி லீடுபட்டிருப்பவர்களுக்கு இக்கால நிர்ணயம் மிகவும் சௌகரியமாக இருக்கும். வியாயாமம் தக்க முறையில் செய்வதால் மலச்சிக்கலை ஜெயிக்கலாம். மனிதன் எந்தவிதத்திலும் மலச்சிக்கல் உண்டாகுவதைத் தடுக்கவேண்டும். இல்லையேல் இரைப்பையின் கீழேயுள்ள சாக்கடையில் அநேகவித வியாதிகள் உற்பத்தியாகும். அவையாவன:—தேகம், தன்னில் உற்பத்தியாகும் விஷத்தினல் விஷப்படுதல், இரத்தமின்மை, ஒருவிதமான அசௌகரியம் முதலியன இதனல் உண்டாகும் அநேக வியாதிகளில் இவை சிலவாம்.

ஆகாரம்

நமது தேகத்திற்கு முக்கியமாய் இரண்டு விஷயங்களுக்காக ஆகாரம் தேவை. முதலாவது எரிகரும்பாயிருப்பது; இரண்டாவது தனது இயந்திரத்தையே கட்டுவதற்கு வேண்டிய சாமானுகவிருப்பது. அதாவது பின்வரும் காரணங்களுக்காக நமக்கு ஆகாரம் தேவை. (1) இளமையில் நமது தேகங்கள் வளருவதற்கு; (2) தேகத்தின் தசை நார்கள் தினம் தேய்ந்து போவதைப் பழுதுபார்த்து புதுப்பிப்பதற்கு; (3) ஜீவியத்திற்கு வேண்டிய சக்தியைக் கொடுப்பதற்கு; (4) தேகத் தொழில் மனத்தின் தொழில் இவைகளுக்கு வேண்டிய சக்தியைக் கொடுப்பதற்கு.

இந்த ஆகாரந்தான் மனிதனுக்கு முதலில் தேவை. நாம் நன்கு தீரவிசாரித்துப் பார்ப்போமாகில் நமது வியாதிகள் பெரும்பாலும் ஆரம்பத்திலேயே உண்டானதில்லை என்பதையும், ஆகாரம் வாழ்க்கை இவை, ஒழுங்கு தப்பியதால் ஏற்பட்டதென்றும் தெரிந்துகொள்கிறோம். ஆனல் நாகரீகம் விருத்தியாக ஆக நமது ஆகாரம் அதி நுட்பமான விதங்களாக மாறிவிட்டன. இது நன்மைக்கா? கெடுதலுக்கா? இந்த ஆகாரங்கள் வாஸ்தவத்தில் நமது ஆரோக்கியத்திற்கு நல்லதா? அல்லது அவற்றை எவ்வளவு சாப்பிடவேண்டும் என்பவைகளை கொஞ்சமேனும் கவனிக்கிறதில்லை. எந்த உணவினல் நமக்கு நன்மை ஒன்றுமில்லை என்று நிச்சயமாய்த் தெரிகிறதோ அதை வேண்டாமென்று தள்ளிவிட பின்வாங்கக் கூடாது. நாம் அதிகப்படியாக தின்றோ, குடித்தோ, புகைபிடித்தோ வருவோமாயின் நாளடைவில் வருந்தவேண்டிவரும். அதே

விதமாக எவ்வளவு தேவையோ அதற்கும் கம்மியாக வியாயாயம் எடுத்துக்கொண்டு நிரம்பப் போர்வையும் போர்த்துக்கொண்டால் அநேகவிதமான கோளாறுகள் ஏற்படும்.

மேலும் மரணப்புள்ளி விவரங்களைப் பார்ப்போமாயின், அதிலிருந்து விஷயங்களைத் தெரிந்துகொள்கிறோம். (1) அளவுக்குமிஞ்சி யுண்டு அதனால் வியாதி ஏற்பட்டு மரணமடைகிறவர்கள். (2) போஷணக் குறைவினால் மரணமடைகிறவர்கள். தனவந்தர்களி லனேகர் யோசனையின்றி அதிகமாகயுண்பதனால் குடல்களினின்றே அவர்களுக்கு வியாதிகள் உற்பத்தியாகின்றன. ஏழை வகுப்புகளில் பிராணுதாரமான சிலவஸ்துக்கள் ஆகாரத்தில் குறைவுபடுவதால் வியாதிகள் உற்பத்தியாகின்றன. ஆகவே மானிடன் மேலே கூறப்பட்டவைகளை நன்கு ஆராய்ந்துபார்த்து தக்கமுறையில் நடந்துகொள்ள முயற்சிப்பது அவனது பிரதான கடமையாகுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விவாகப் பிரிவினையைப் பற்றிய ஓராராய்ச்சி.

(ஜமிய்யத்துல் உலமா காரியதரிசி மௌலானா ஹாஜி ஹாபிஜ் அஹ்மது சயீது சாகிப் அவர்கள் எழுதியது.)

இவ் வுலகத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்துவரும் காலம்வரை அவர்கள் இஸ்லாமியச் சட்டங்களையும், ஷரீஅத்தில் சொல்லப்பட்ட திட்டங்களையும் அனுசரித்து நடக்கவேண்டுமென்பது மிகவும் அவசியம் என்ற விஷயம் பகிரங்கமானதேயாகும். சில முஸ்லிம்கள் தங்களது கவனமின்மையாலோ, அல்லது அஜாக்கிறதையாலோ, அல்லது அறியாமையினாலோ அவ்விதிவிலக்குகளைக் கவனித்து நடக்காமல் இருப்பதும், ஒரு கொடுங்கோலன் தனது முஸ்லிம் பிரஜைகளை இஸ்லாமிய சட்டப்படி நடக்கவொட்டாமல் தடைசெய்து, இத்தடையின் காரணமாக சில முஸ்லிம்கள் இஸ்லாமிய ஷரீஅத்தின் திட்டங்களை அனுசரிக்க முடியாமல் இருப்பதும் வேறு விஷயம். எவ்வாறாயினும், முஸ்லிம்கள் இஸ்லாமிய ஷரீஅத் விதித்துள்ள திட்டத்தின்படி நடக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

எனவே, தற்போது இந்தியாதேசத்தில் மாத்திரம் சுமார் 8 கோடிக்கு அதிகமாகவே முஸ்லிம்கள் இருந்துவருகின்றனர். இந்த எட்டுக் கோடிப்பேர்களும் குடும்பஸ்தர்களாகவும் இவர்களிலுள்ள ஆடவரும் பெண்களும் மணவாழ்க்கையை நடத்தவேண்டியவர்களாகவும், மணமில்லாதவர்கள் மணஞ்செய்துகொள்ள வேண்டியவர்களாகவும் இருந்து வருகின்றனர். ஆனால் சிலசமயங்களில் குடும்ப வாழ்க்கையில் ஒருமனப்பட்ட அபிப்பிராயமில்லாத காரணத்தால் தம்பதிகளிருவரும் தங்களது விவாக பந்தத்தைவிட்டு விலகிக்கொள்ளவும் நேரிடுகிறது.

இதனால், 'தலாக்' என்னும் விவாக விலக்குச்செய்துகொள்ள நேரிடுகிறது. சிற்சில சமயங்களில் 'பஸக்' என்னும் விவாகப்பிரிவினை, 'குல்உ' என்னும் சம்மத விவாகவிலக்கு ஆகியவைகளும் நேர்ந்துவிடுகின்றன. இதுபோல, ஸ்திரிகள் தங்களது மணாளர்களிடம் அன்னவஸ்திரங் கேட்குதல், இதற்காக விவகாரம் செய்தல் ஆகிய காரியங்களும் ஏற்படுகின்றன. விவாகம் ஏற்பட்டபின் விவாக விலக்கோ, விவாகப் பிரிவினையோ, சம்மத விவாக விலக்கோ எதுவும் ஏற்படாமல் யாவரும் எக்காலத்திலும் சந்தோஷமாக வாழ்ந்து வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. விவாக ஒப்பந்தத்தின் மூலம் ஸ்திரியும் புருஷரும் குடும்பவாழ்க்கையை நடத்துவதுபோல, விவாக ஒப்பந்தத்தைவிட்டு விலகிக்கொண்டு தங்களுக்கு இஷ்டமானவரை மணந்து குடும்ப வாழ்க்கை நடத்துவது சகஜமாக நடைபெறக் கூடிய காரியமேயாகும். எனவே, இவ்விதமான சந்தர்ப்பங்களில் ஸ்திரியோ புருஷரோ

தங்களது விவாக ஒப்பந்தத்தை விலக்கிக் கொண்டு வேறொருவருடன் குடும்பவாழ்க்கை நடத்துவதற்கு வசதியும் சௌகரியமுமான சட்டதிட்டங்கள் இஸ்லாமிய சட்டத்தில் இருக்கவேண்டியது அவசியமேயாகும்.

ஆங்கிலோ முஹம்மதன் லா

தற்போது இந்தியா கவர்ன்மெண்டாரின் அங்கிகாரத்தின்பேரில், முஸ்லிம்களின் மார்க்க சம்மந்தமான பிரசினைகள் ஆங்கிலோ முஹம்மடன் லாவின்படி தீர்க்கப்படுகின்றன. ஆதலால், இந்த விவாக விலக்கு, விவாகப்பிரிவினை, சம்மத விவாக விலக்கு முதலிய விஷயங்களும் கூட இதே ஆங்கிலோ முஹம்மடன் லாவின் படி இந்தியாவிலுள்ள கோர்ட்டுகளில் தீர்க்கப்படலாம். ஆதலின், இவைகளுக்கென பிரத்தியேகமான புதிய சட்டம் இயற்ற வேண்டியதில்லை; முஸ்லிம்களது மத உரிமை சம்மந்தமாகத் தற்போதிருக்கிற ஆங்கிலோ முஹம்மடன் லாவே போதுமானது என்று சொல்லக்கூடும். ஆனால், தற்போது அரசாங்கத்தாரால் அங்கிகரிக்கப்பட்டு, இந்திய கோர்ட்டுகளில் அமல் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிற ஆங்கிலோ முஹம்மடன்லா இவ்விஷயங்களுக்குப் போதியனவாக இல்லை என்று தான் வருத்தத்துடன்கூற வேண்டியதிருக்கிறது. ஏனெனில், முஸ்லிம்களின் சமுதாயம், வாழ்க்கை, வார்சு பாத்தியம் முதலியவைகள் சம்மந்தமாக முஸ்லிம்களது மார்க்கச் சட்டப்படியே அமல் நடத்துவதற்காக முஸ்லிம்களது மார்க்கச் சட்டத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தபோது சில அசந்தர்ப்பங்களாலும் முக்கிய காரணங்களாலும் இஸ்லாமிய ஷரீஅத்திலுள்ள சட்டதிட்டங்கள் விபரமாக மொழிபெயர்க்கப்பட முடியாமற் போய்விட்டது. ஆதலால், அரசாங்கத்தாரால் அமல் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிற ஆங்கிலோ-முஹம்மடன் லாவானது முஸ்லிம்களது தாகத்தைத் தீர்க்கத்தகுந்ததாக இல்லை.

நூதனமான காலம்

பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் ஆட்சி செய்த இந்திய முஸ்லிம்களது சந்ததியினருக்கு ஒரு நூதனமான காலம் வந்தது. அக்காலத்தில் முஸ்லிம்கள் தங்களது மதத்தின் பெயரைக் கூறுவதுகூட முடியாத நிலைமையாக இருந்து வந்தது. இப்படிப்பட்ட நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் ஆசேஷபனையும், தடையுமில்லாமல் இஸ்லாமிய ஷரீஅத்தின் சட்டங்களில் எந்த அளவு அங்கிகரிக்கப்படுகின்றனவோ அந்த அளவே பெரும் பாக்கியம் என்றும், தற்கால சாந்தியாகக் கிடைத்த அளவைமட்டிலும் ஒப்புக்கொள்வதென்றும், பாக்கியுள்ள விஷயங்களை இன்னொரு சமயத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்றும் கருதப்பட்டது. தற்போது அரசாங்கத்தாரிடமிருந்து சில காரியங்களை அடைந்து கொள்வது முற்காலத்தைப்போல் அவ்வளவு கஷ்டமாக இல்லை என்பது மறைந்த விஷயமன்று. இவ்வித நிலைமையிலும்கூட "தற்போது அரசாங்கத்தாரிடத்தில் இந்த அளவுக்கு ஒப்புக்கொள்ளச் செய்யலாம்; பாக்கியுள்ளவைகளைப் பின்னொரு சமயத்தில் பார்த்துக்கொள்ளலாம்" என்று கூறி நாம் மௌனமாக இருந்துவருகிறோம். இம்மாதிரியான கஷ்டம் இதற்கு முன்னரும் இருந்து வந்ததால் அக்காலத்திலிருந்த நமது மூதாதையினர் அரசாங்கத்தாரிடத்தில் ஆங்கிலோ முஹம்மடன் லாவை அங்கிகரிக்கச் செய்திருப்பது அக்காலத்தைய நிலைமைக்கு மிகவும் அதிகமென்றே கூறவேண்டும்.

முஸ்லிம் நீதிபதிகள்.

முஸ்லிம்களது சமூகத்தை மட்டிலும் பொருத்த அநேகம் பிரசினைகள் காளி, காளியுள் குளாத், ஸத்ருஸ்ஸுதூர் ஆகிய பதவிகளை வகித்துவந்த நீதிபதிகளிடத்திலேயே முடிவு பெற வேண்டியவைகளாக இருக்கின்றன. முக்கியமாக விவாகம், விவாகப் பிரிவினை, ஆண்குறி அறுக்கப்பட்டவன், நரம்புத் தளர்ச்சி யுள்ளவன், அன்னவஸ்திரம் அளித்தல், மஹர்தொகை, மஹர் தொகையை நன்கொடை அளித்தல், வஸிய்யத்து முதலியவைகள் சம்மந்தமான மஸ்அலாக்களில் காளிகளும், முஸ்லிம் ஜட்ஜுகளும் தீர்ப்புக்கூற வேண்டியது அவசியமாக இருந்துவருகிறது. இந்த மஸ்அலாக்கள் சம்மந்தமாக விரிவான ஏற்பாடுகளைச் செய்வது முற்காலத்தில் மிகவும் கஷ்டமாக இருந்தது. அக்காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் இவ்விஷயத்தில் மிகவும் கடினசித்தமுள்ளதாக இருந்தது. காளிகள், முப்திகள், ஸத்ருஸ்ஸுதூர்கள் ஆகிய உத்தியோகப் பதவிகளின்

பெயர் நாமத்தைக் கேட்பதுகூட அப்போதைய அரசாங்கத்திற்கு வெறுப்பாக இருந்தது. ஆகவே, அந்தப்பதவிகளனைத்தையும் அகற்றி விட்டு அவைகளுக்குப் பதிலாக பிரிட்டிஷ் அரசாங்கம் ஜட்ஜுகளையும், சப்ஜட்ஜுகளையும் நியமித்தது.

அக்காலத்திலுள்ள முஸ்லிம்கள் இதனை ஆக்ஷேபித்து, தங்களுக்கு அந்தப் பழைய உத்தியோகப்பதவிகள் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தி அதில் தீவிரமாக முயற்சி செய்திருந்திருப்பார்களாயின், அக்காலத்திலுள்ள இஸ்லாமிய விரோதிகள் ஆங்கில அரசாங்கத்தினிடம் குண்டுணி சொல்லி, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு விரோதமாகக் கலகம் செய்வதற்காகவே முஸ்லிம்கள் இந்த உத்தியோகப் பதவிகளை மீண்டும் விரும்புகின்றனர் என்று மிகச்சுலபமாக நம்பும்படிச் செய்துவிடுவார்கள். தவிரவும், பிற்காலத்தில் ஸ்திரீகள் காலையில் விவாகம் செய்துகொண்டு, மாலையில் விவாக விலக்குச் செய்துகொள்வதற்காக கோர்ட்டில் வழக்குத் தொடுத்துவிடக் கூடியவாறு அவ்வளவு சுதந்திரமுள்ளவர்களாகிவிடுவார்கள் என்பதையும், விவாக விலக்குச்செய்ய நீதிஸ்தலம் மறுத்துவிடுமாயின் அந்த ஸ்திரீகள் கிறிஸ்துவ மதத்தையோ அல்லது ஆரிய சமாஜத்தையோ தழுவித்தங்களது கணவனைவிட்டுப் பிரிந்துவிடுவார்கள் என்பதையும் அக்காலத்திலிருந்த முஸ்லிம்கள் கனவிலும் கருதி இருக்கவில்லை. மேலும், அக்காலத்திலிருந்த ஸ்திரீகள் வெட்கம், நாணம், மடமை, பயிர்ப்பு ஆகியவைகளுள்ளவர்களாகவும், கணவன்வீட்டில் எத்தகைய கஷ்டத்தையும் சகித்துக்கொண்டு அங்கே மரணமடைவது தங்கள் பெற்றோருக்குக் கண்ணியம் கொடுப்பதாக இருக்கிறதென்ற உணர்ச்சியுள்ளவர்களாகவும் இருந்துகொண்டிருந்தனர். ஆதலின், அப்பொழுதுள்ள முஸ்லிம்கள் ஆங்கிலோ முஹம்மடன் லாவை மிக விரிவாக ஒப்புக்கொள்ளும்படிச் செய்ய முயலவில்லை. அக்காலத்தில் செய்யத்தவறிய இக்குறையினால் இக்காலத்திலுள்ள நம்மவர் பல கஷ்டங்களை அனுபவிக்கவேண்டியதாக இருக்கிறது. ஆனாலும், அக்காலத்திலுள்ள முஸ்லிம்கள் தங்களது நிர்ப்பந்த நிலைமையினால் செய்த குறையை ஒருநூற்றாண்டுக்குப் பின்னருள்ள நாமும் வேண்டுமென்றே செய்துகொண்டிருப்பது முடியாத காரியமாகும்.

விவாக விலக்கு ஒப்பந்தமும் மதம் மாறும் விஷயமும்

மௌலானா ராஷிதுல்கைரி அவர்கள் இந்தத் தலைப்பின்கிழ் பலவியாசங்களைப் பத்திரிகைகளில் பிரசுரித்தார். அவ்வியாசத்தின் சாரம், ஸ்திரீகளுக்கு விவாகப் பிரிவினை ஒப்பந்தத்திற்குரிய பாத்தியதையை ஆடவர்கள் ஒப்புக்கொள்ளவும், சதா ஸ்திரீகளைத் தொந்தரை செய்து அக்கிரமஞ் செய்துகொண்டிருக்கிற கணவன்மார்களை விட்டு அவர்களுக்கு விடுதலை வாங்கிக்கொடுக்கவும் கூடிய சட்டத்தை இயற்ற வேண்டும் என்பதுதான். இவ்வியாசத்திற்குப் பிறகு நானும் இது சம்பந்தமாக சுமார் 10 வருஷங்களுக்குமுன் ஒருவியாசம் "அல் ஜமிய்யத்" பத்திரிகையில் எழுதினேன். அதற்கப்பால் சில ஸ்திரீகளும் இதனைப்பற்றி வியாசம் எழுதினர். கொஞ்சகாலத்திற்குப் பிறகு இது நின்றுவிட்டது. வேலை செய்வோர் மிகக் குறைவாகவும், வேலைகள் மிக அதிகமாகவும் இருப்பதால் எல்லாக் காரியங்களும் அரைகுறையாக நிற்பதற்கிணங்க இந்தமுயற்சியும் முற்றுப்பெறாமல் நின்றுவிட்டது.

இப்பொழுது சிலகாலமாக சில கனவான்கள் இந்தப் பிரசினையை மறுபடியும் எடுத்துக்கொண்டதால் பத்திரிகைகளிலும் இதுசம்பந்தமாகப்பல வியாசங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்தியா சட்டசபையிலுள்ள சில அங்கத்தினர்கள் இது சம்மந்தமாகத் தீர்மானங்களையும், மசோதாக்களையும் இந்தியா சட்டசபைக்கு அனுப்பி இருக்கிறார்கள். அரசப்பிரதிநிதியும் இம்மசோதாவை இந்தியா சட்டசபையில் கொண்டுவருவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார். ஆகவே, இம்முறை இது சம்மந்தமாக ஏதேனும் ஒரு சட்டம், சட்டசபையில் நிறைவேறி விடுவது நிச்சயம் என்று தெரிகிறது. ஆனால், இந்தியா சட்டசபைக்கு இந்த மசோதாக்களை அனுப்பிய அங்கத்தினர்கள் உலமாக்களிடம் கலந்து அந்த மசோதாவைத் தயார் செய்யாமலிருந்துவிட்டது வருந்தத்தக்க விஷயமாகும். எவ்வாறாயினும், அந்த மசோதாவைப்பற்றி விவாதம் செய்யவும், அதிலுள்ள நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து அதில் திருத்தம் செய்யவும் இன்னமும் சாவகாச மிருந்து கொண்டிருக்கிறது. கல்வியிற் றேர்ந்த கனவான்கள் இவ்விஷயத்தைக் குளிர்ந்த மனத்துடன் கவனித்து, சட்ட

சபையில் கொண்டுவரப்பட இருக்கிற மசோதாவில் வேண்டிய சீர்திருத்தத்தைச் செய்து விட்டால் அது சட்டமாகிவிடுவதுடன், துன்பமனுபவிக்கும் ஸ்திரீ ஜாதியினருக்கு ஓரளவு விமோசனம் அளித்ததாகவும் ஏற்படும்.

நோயின் தன்மை.

நாம் ஒரு சட்டத்தை இயற்ற விரும்புவோமாயின் முதலின் நாம் சில விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கவேண்டியது அவசியமாகும். சட்டத்தின் மூலமாக நிவிர்த்தி செய்ய விரும்புகிற கஷ்டங்கள் யாவை? எப்படிப்பட்ட சட்டமியற்றப்பட்டால் இக்கஷ்டங்கள் நிவர்த்தியாகும் என்ற விஷயங்களைக் கவனிக்கவேண்டும் என்பது எனது அபிப்பிராயமாகும். நமக்குத் தெரிந்தவரையில் தங்களுடைய கணவன்மார்களால் காரணமில்லாமலே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற முஸ்லிம் ஸ்திரீகளுக்கு விடுதலை யளிப்பதற்கான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். நியாயமான கோரிக்கைகளையும் கூடக்கவனிக்காமல் தங்களது மனைவியரைத் தொந்தரை செய்யும் கொடுமையாளர்களான கணவன்மார்களைவிட்டு விடுதலை பெறுவதற்காக முஸ்லிம் ஸ்திரீகளுக்குத் தக்கமார்க்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதுதான் இப்பொழுதுள்ள முக்கிய பிரசினை. இந்தச்சட்டம் ஏற்படுத்துவதற்குள்ள அசல் வியாதி என்னவெனில், சில யோக்கியமான ஸ்திரீகள் அயோக்கியத்தனமான தங்கள் புருஷர்கள் செய்யும் கொடுமைகளில் சிக்குண்டு தவிக்கின்றனர். இந்தப் புருஷர்கள் அவ்விஸ்திரீகளுக்குச் சகலவிதமான கஷ்டங்களையும் விளைவிக்கின்றனர். இந்தப் புருஷர்கள் தங்கள் மனைவிமார்களுக்கு அன்ன வஸ்திரம் அளிக்க வேண்டுமென்று நினைப்பதுமில்லை, அவர்களை விவாக பந்தத்திலிருந்து விலக்கிவிட இஷ்டப்படுவது மில்லை. அவர்களை இங்கு மில்லாமல் அங்கு மில்லாமல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருப்பவர்களைப் போல் தவிக்கவிட்டு வைத்திருக்கின்றனர். ஆகவே, இப்படிப்பட்ட ஸ்திரீகள் தங்களது ஜீவியத்தை மனச்சாந்தியுடன் கழிப்பதற்கான ஒரு வழியைக் கண்டுபிடிக்கவேண்டும். இச்சட்டம் இயற்றுவதற்கு எங்கும் பொதுவாகப் பரவியுள்ள மேற்கண்ட வியாதியே காரணமாகும். இவ்வியாதிக்குத் தக்க ஔஷதம் தற்போது இந்தியா கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டு, இந்தியக் கோர்ட்டுகளில் அமலில் இருந்துவருகிற ஆங்கிலோ முஹம்மடன்லாவில் இல்லை. மேலும் சில புருஷர்கள் தங்கள் மனைவியரை நல்லவிதமாகநடத்துகின்றனர். ஆனாலும், தம்பதிகளுக்கிடையிலுள்ள பிரத்தியேகமான சில கடமைகளை நிறைவேற்ற முடியாத நிலைமையிலும் இருக்கின்றனர். இப்படிப்பட்ட புருஷர்களிற் சிலர் சிகிச்சை செய்யப்படத் தகுந்தவர்களாகவும் இருக்கின்றனர். வேறு சிலர் சிகிச்சை செய்யப்படுவதற்கு முற்றிலும் தகுதியற்றவர் களாகவுமிருக்கின்றனர். உதாரணமாக, ஆண்குறி அறுக்கப்பட்ட ஆடவர்கள், தளர்ச்சியுள்ள ஆடவர்கள் இப்படிப்பட்டவர்களிடம் அகப்பட்டிருக்கிற ஸ்திரீகளுக்கும் தக்க விமோசனம் அளிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இன்னும் சில ஆடவர்கள் எங்கே இருக்கிறார்கள்? இருக்கின்றனரா? இறந்துபட்டனரா என்ற விஷயமே தெரியாமல் இருக்கின்றனர். இப்படிப்பட்ட தகவலில்லாத பேர்வழிகளின் மனைவியர்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகின்றனர். சில ஆடவர்கள் இருக்குமிடம் தெரிகிறது. ஆனாலும், அவர்கள் தங்களது மனைவியருக்கு அன்னவஸ்திரம் அளிப்பதுமில்லை; தங்களுடைய இருப்பிடத்திற்குத் தங்கள் மனைவியரை அழைத்துக்கொண்டு அவர்களைக் காப்பாற்றுவதுமில்லை. இப்படிப்பட்ட சங்கடத்திற்குள்ளகப்பட்ட ஸ்திரீகளுக்கும் விமோசனம் வேண்டியதாக இருக்கிறது. சில ஆடவர்கள் பயித்தியக்காரர்களாகவோ, சித்தசுவாதீன மற்றவர்களாகவோ ஆகிவிடுகின்றனர். இவர்களின் மனைவிமார்கள் இவர்களால் பல துன்பங்களை அடைய நேரிடுகிறது. இப்படிப்பட்ட கஷ்டத்திலகப்பட்ட ஸ்திரீகளுக்கும் விமோசனமளிக்கக்கூடிய வழியைக் கண்டுபிடிக்கவேண்டும். சில ஆடவர்கள் தங்கள் மனைவிமார்களுக்கு அன்னவஸ்திரமும் அளிக்கின்றனர். அவர்களுடன்கூடி வாழவும் செய்கின்றனர். தம்பதிகளுக்கிடையிலுள்ள பிரத்தியேகமான கடமையை நிறைவேற்றவும் செய்கின்றனர். ஆனாலும், அவ்வாடவர்கள் எந்நேரமும் தங்கள் மனைவியரைத் திட்டுவதும் தூஷிப்பதுமே வேலையாகக் கொண்டிருக்கின்றனர். அன்பான வார்த்தை அரைக்ஷணமும் செய்வதில்லை. காரணமில்லாமல் அடித்துத் தொந்தரை செய்பவர்களாகவு மிருக்கின்றனர். இவ்விதமான அடாச்செய்கைகளின் காரண

மாக சில ஸ்திரீகள் தங்களது கணவன்மார்களை விட்டுப் பிரிந்துவிட விரும்புகின்றனர். இன்னும் சில ஸ்திரீகளுக்கு வாய்த்த கணவன்மார்கள் அன்ன வஸ்திரமளித்தல், கூடி வாழ்தல், அன்பாக நடத்துதல், மதுரமான வார்த்தைகள் கூறல் முதலியவைகளில் நல்லவர்களாகவே இருக்கின்றனர். ஆனாலும் வெண்குஷ்டம், கருங்குஷ்டம், காசம், க்ஷயம், சுவாசகாசம், நீண்ட நாள் சுரம் முதலிய வியாதியுள்ளவர்களாக இருப்பதால் இவ்வியாதிகளைச் சகித்துக் கொண்டு ஸ்திரீகள் அவ்வாடவர்களுடன் சேர்ந்து வாழத் தகுதியற்றவர்களாக இருக்கின்றனர். வேறு சில ஆடவர்களுக்கு இப்படிப்பட்ட வியாதிகள் எதுவும் கிடையாது; நற்குண முள்ளவர்களாகவும் இருக்கின்றனர். ஆனாலும், தரித்திரக் கொடுமையால் அன்ன வஸ்திர மளிக்கச் சக்தியில்லாம லிருக்கின்றனர்; அல்லது வியாதியின் காரணமாகக் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்க வழியில்லாதவர்களாக இருக்கின்றனர்; அல்லது ராஜீயக் குற்றங்களுக்காகவோ வேறு விதமான குற்றங்களுக்காகவோ சிறைவாசம் செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு, அச்சிறைவாச காலத்தில் தங்கள் மனைவியருக்கு அன்னவஸ்திர மளிக்கச் சக்தியற்றவர்களாக இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்களின் மனைவியரும் தங்களுக்கு விமோசனம் வேண்டுமென்று விரும்புகின்றனர்.

வியபிசாரக் குற்றம்.

கணவன்மார்களுக்கு மேற்கண்ட விதமான பல குறைகள் இருப்பது சகஜமாக இருப்பதுடன் இன்னொரு விதமான குறையும் ஏற்படுவதுண்டு. அது யாதெனில், சிலர் தங்களது மனைவியர் மீது வியபிசாரக் குற்றத்தைச் சுமத்துகின்றனர். "எனது மனைவி இன்ன மனிதனுடன் துர்நடத்தை செய்துகொண்டிருக்கிறாள்" என்றுதெளிவாகக் கூறிவிடுவதுமுண்டு. சிலர் தனது மனைவிபெற்ற பிள்ளையைக் குறித்து "இந்தக் குழந்தை எனது குழந்தையன்று" என்பதாகக் கூறிவிடுகின்றனர். அல்லது "இந்தக் குழந்தையின் ஜாடை இன்ன மனிதரைப்போலிருக்கிறது; எனக்குக் கர்ப்பந் தரித்த குழந்தையாக இருந்தால் எனது ஜாடையாக வன்றோ இருக்கும்" என்றுகூறுகின்றனர். அல்லது குழந்தை பிறந்ததைக்குறித்து வாழ்த்துக்கூற வரும் தனது நண்பர் உற்றார் உறவினரிடத்தில் "எனக்கு ஏன் வாழ்த்துக்கூறுகின்றீர்கள்? இன்ன மனிதரிடம் சென்று வாழ்த்துக் கூறுங்கள்; இக்குழந்தை என்னுடையதன்று; அந்த மனிதருடைய குழந்தையேயாகும்" என்று கூறிவிடுகின்றனர். இவ்விதமாகக் கூறுகிற வார்த்தைகளெல்லாம், தனது மனைவி விபசாரம் செய்தாள் என்பதையே அறிவிப்பனவா யிருக்கின்றன. இவ்வார்த்தைகளையும் புருஷனுடைய தூஷணை, திட்டல் ஆகியவைகளில் சேர்த்துக்கூறலாம். ஆயினும், யான் இதனைப்பற்றிப் பிரத்தியேகமாகக் கூறியதற்குக் காரணம் என்னவெனில், இஸ்லாமிய ஷரீஅத்தில் இவ்விதமான வார்த்தைகளுக்கு விசேஷக் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. இவ்விதமான பேச்சுக்களைக் கணவன் கூறிவிட்டால் அவன் "லிஆன்" (பிரமாணம்) செய்ய வேண்டும். அத்றகப்பால் அந்த ஸ்திரீயை விலக்கிவிட வேண்டியதேற்படும். அதற்கு முடியவில்லை யாயின் அபாண்டம் கூறியதற்காகக் கணவன் தண்டனை யனுபவிக்க வேண்டிய திருக்கும். ஸ்திரீயானவள் தனது கணவன் கூறும் அக்கிரம வார்த்தைகளனைத்தையும் சகித்துக்கொள்ளச் சம்மதிப்பாள். ஆனாலும், தன்மீது விபசா ரக்குற்றம் சுமத்தப்படின் அதனை அவள் சகித்துக்கொள்வது அவளால் முடியாத காரியமாக இருந்துவருகிறது.

சமஅந்தஸ்து உரிமையும், புஷ்பவதியாகுவதன் உரிமையும்.

தகப்பன் பாட்டன் ஆகியவர்களைத் தவிர்த்து இதர 'வலி' காரர்கள் புஷ்பவதியாகாத ஒரு சிறு பெண்ணை ஒருவருக்கு விவாகம் செய்து கொடுத்தபின், அந்த விவாகத்தைப் பிரித்துவிடுவதற்கு ஸ்திரீகளுக்கு உரிமை இருந்து வருகிறது. உதாரணமாக, புஷ்பவதியாகாத ஒரு பெண்ணை, அவளுடைய தகப்பன் பாட்டனை இல்லாத வேறு ஒரு வலிகாரன் அவளுடைய சிற்றப்பன், பெரியப்பன், மாமன் ஆகியவர்களில் ஒருவருடைய புதல்வருக்கு விவாகம் செய்து கொடுத்ததாக வைத்துக் கொள்வோம். இப்படிச் செய்யப்பட்ட விவாகத்தை அவள் புஷ்பவதியானவுடன் மறுத்துவிடவும், மறுத்ததற்குப் பிறகு 'காளி' மூலமாக அந்த விவாகத்தை ரத்துச் செய்துவிடவும் அந்த ஸ்திரீக்கு உரிமை இருந்து வருகிறது. இதுபோலவே சமஅந்தஸ்து உரிமையுமிருந்துவருகிறது. ஆனால், இது சிறிது விபரமாகச் சொல்லவேண்டிய விஷயமாகும்.

உதாரணமாக, புஷ்பவதியான ஒரு கன்னிப் பெண் தனது வலிகாரனின் சம்மதத்தின் பேரில் ஒருவனை மணந்துகொள்வதாகவும், அந்த மணம் நடைபெறும்பொழுது அவனை மணந்துகொள்பவரின் அந்தஸ்து எத்தன்மைத்து என்பது தெரியாமலிருந்ததாகவும் வைத்துக்கொள்வோம். தவிரவும், மணமகன் தனது குலம் கோத்திரம் தொழில் முதலியவைகளைக் கூருமல் தவறுதலாகக் கூறினன் என்றும், அவன் பொய்யாகக் கூறியதைப் பெண் வீட்டார் மெய்யென்று நம்பி விவாகம் செய்வித்தனர் என்றும், விவாகம் நடைபெற்றபின் அவனது அந்தஸ்து பெண்வீட்டாரின் அந்தஸ்துக்குக் குறைவானது என்று வெளியானதாகவும் வைத்துக்கொள்வோம். இப்படிப்பட்ட நிலைமையில் அவ்விவாகத்தை ரத்துச் செய்துவிட மணமகளுக்கும் மணமகளுடைய வலிகாரனுக்கும் உரிமை இருக்கிறது.

புஷ்பவதியாகாத ஒரு இளம் பெண்ணை அவளது தந்தை அல்லது பாட்டன், ஒருவனுக்கு விவாகம் செய்துகொடுப்பதாகவும், விவாகம் செய்து கொடுக்கும்போது மணமகன் சம அந்தஸ்துள்ளவன்தான் என்று மணமகளுடைய தந்தை அல்லது பாட்டன் நினைத்திருந்ததாகவும், மணமகன் சமஅந்தஸ்து இல்லாதவன் என்று வெளியானல் இந்த விவாகத்தை ரத்துச் செய்துவிடத் தங்களுக்கு உரிமை இருக்கிறது என்று மணமகளின் தந்தை அல்லது பாட்டன் ஒரு நிபந்தனையை ஏற்படுத்தி அவளை விவாகம் செய்துகொடுத்ததாகவும் வைத்துக்கொள்வோம். இவ்விவாகம் நடைபெற்றபின், மணமகள் புஷ்பவதியாகுவதற்கு முன்பே அம்மணமகன் சமஅந்தஸ்தில்லாதவன் என்று வெளியானல் அந்த விவாகத்தை ரத்துச் செய்துவிட மணமகளின் தந்தை அல்லது பாட்டனுக்கு உரிமை இருக்கிறது; மணமகள் புஷ்பவதியான பின்னர் அம்மணமகன் சமஅந்தஸ்தில்லாதவன் என்று வெளியானல் அந்தமணத்தை ரத்துச் செய்துவிட மணமகளுக்கும், அவளது தந்தை அல்லது பாட்டனுக்கும் உரிமை இருந்துவருகிறது. மேலும், அம்மணமகளும், அவளது தந்தை அல்லது பாட்டன் ஆகிய இருவரும் அந்த மணத்தைப்பற்றிய தங்களது திருப்தியை வெளிப்படுத்திக் கொள்ளும் வரை அந்த மணத்தினுல் தம்பதிகளிருவருடைய விவாகபந்தத்துவம் வாஜிபாக ஏற்பட்டுவிடாது.

இது சம்மந்தமாக இன்னும் பல விபரங்களிருந்துவருகின்றன. உதாரணத்திற்காக இந்த இடத்தில் இரண்டு விஷயங்கள் மட்டிலும் யான் கூறியிருக்கிறேன்.

இஸ்லாமிய சட்டம் பரிபூரணமானது.

இச்சட்டத்திற் கவசியமான வியாதிகள் யாவை என்ற விபரத்தை மேலே கூறியாகிவிட்டது ஆகவே இவைகள் உண்மையானவைகள் என்ற விஷயத்தை யாரும் மறுக்க முடியாது. விவாகம், விவாக விலக்கு ஆகியவைகளில் இது சம்மந்தமான இன்னும் அநேகம் நூற்றுக்கணக்கான உபவிதிகளிருக்கின்றன வாதலின் அவைகளனைத்தையும் இச்சிறு வியாசத்தில் கூறி முடித்துவிட முடியாது. ஆனுல், சமயத்திற்கேற்ப அவசியமான அளவுக்கு அவைகளனைத்தும் பகிரங்கத்திற்கு வந்துகொண்டுமிருக்கின்றன. இனிமேலும் அவைகள் வந்துகொண்டிருக்கும். இஸ்லாம் மதம் பரிபூரணமான சட்டமாகுமாதலின் அதில் சகல வியாதிகளுக்கும் உயர்தரமான சிகிச்சை முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் வாழ்க்கையின் எந்த அம்சமும் கவனிக்கப்படாமல் விடப்பட்டில்லை. உணவருந்தல், ஜலம் பருகுதல், உட்காருதல், எழுந்திருத்தல் முதலிய சிறுசிறு காரியங்களுக்கெல்லாம் சட்டங்களும் ஒழுங்குகளும் இருக்கும்போது, விவாகம் விவாகப் பிரிவினை ஆகிய பெரிய காரியங்களுக்கெல்லாம் எவ்வண்ணம் சட்டதிட்டங்கள் இல்லாதிருக்கமுடியும்? இப்பிரசினைகளைப்பற்றி மட்டுமில்லாமல் இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட இதர விஷயங்களனைத்தையும் பற்றி இஸ்லாம் மதத்தில் சட்டங்களிருக்கின்றன. எனினும், ஆங்கிலோ முகம்மடன் லாவை ஏற்படுத்தும்போது மிகமிகக் குறைந்த அளவுக்கு உபவிதிகளைமட்டிலும் போதுமாக்கிக்கொண்டிருப்பதால், விவாகம் விவாக விலக்கு சம்மந்தமான அநேக விஷயங்கள் அறபிக் கலாசாலைகளிலுள்ள பாட புத்தகங்களிலும், உலமாக்களிடம் பத்வா வாங்குவதிலும் நின்றுவிட்டன. இச்சட்டங்களைப்பற்றி ஆங்கிலேயரும் அறியமாட்டார்கள்; ஆங்கில அரசாங்கத்தின் நீதிமன்றங்களும் அறியமாட்டா. இந்நிலைமையில், "முஸ்லிம்கள் இந்தியா சட்டசபையின் மூலம் தங்களுடைய வியாதிக்குத்தக்க ஔஷதத்தைத் தேடிக்கொள்ள விரும்புகின்றனர்" என்று விஷயமறியாத

சிலர் கருதுகின்றனர். ஆனால் முஸ்லிம்களின் நோக்கம் இதுவல்லவென்பதை அவர்கள் உறுதியாக உணரட்டும்.

தான்றோான் பிறனை எப்படித் தேற்றுவான்?

ஆங்கிலேய அரசாங்கத்தின் மாகாண சட்ட சபைகளுக்கும், மத்திய சட்டசபைக்கும் அந்த அரசாங்கத்தின் சட்டங்களிலுள்ள குறைகளையும் தவறுகளையும் திருத்துவதற்கே நேரம் போதாமலிருக்கும்போது முஸ்லிம்களிலுள்ள குறைகளை எங்ஙனம் நிவர்த்திசெய்ய நேரம் கிடைக்கப்போகிறது? சட்டநிரூபண சபைகள் தினந்தோறும் சட்டத்தை இயற்றவும் பின்னர் அதனை ரத்துச்செய்யவுமாகவே இருக்கின்றன. சட்டசபைக் கூட்டங்களின் எந்தக் கூட்டத்திலும் முன்னர் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களில் ஏதேனும் ஒன்றுக்கு திருத்த மசோதா கொண்டுவரப்படாத கூட்டம் ஒன்றுமே இல்லை என்று சொல்லலாம். குருடன் பிறனுக்கு வழிகாட்டமுடியுமா? எனவே, முஸ்லிம்கள் தங்கள் மதசம்மந்தமான இக்காரியங்களுக்கு ஆங்கில அரசாங்கத்தின் மூலம் புதிதாகச் சட்டங்களை இயற்றிக்கொள்ளவிரும்பவில்லை. ஆனால் இஸ்லாம் மதத்தில் இருக்கிற சட்டங்களை ஆங்கில அரசாங்கத்தின் நீதிமன்றங்களில் அமல் நடத்துவிக்கவே விரும்புகின்றனர்; முஸ்லிம்களிடமிருந்து பறிக்கப்பட்ட அவர்களது உரிமையைத் திரும்பவும் அடையவே அவர்கள் முயலுகின்றனர்.

மதம் மாற்றக் குழப்பம்

முஸ்லிம் ஸ்திரீகளுக்கு அவர்களது முரட்டுப் புருஷர்களால் கஷ்டமுண்டாகி இருக்கிறதென்பதை மறுக்கமுடியாது. அந்த முரட்டுப் புருஷர்களிடமிருந்து விமோசனம் பெறுவதற்கு தற்போதைய நிலைமையில் எவ்வித வழியுமில்லை. இஸ்லாமிய ஷரீஅத் சட்டத்தைப் பரிபூரணமாக அமல்நடத்தவும் தற்போது வசதி இல்லை. இந்த நிர்ப்பந்த நிலைமை இன்றைக்குப் புதிதாக ஏற்பட்டதன்று. இந்த தேசத்தில் ஆங்கில ஆட்சி ஏற்பட்ட அக்காலத்திலிருந்தே ஏற்பட்டுவிட்டது. இவ்வுரிமையை வாங்கும்போது ஆங்கிலேயர் 'ஷாஆலம்' சக்கிரவர்த்தியிடம் செய்து கொடுத்த வாக்குறுதிகளை மறந்து அந்தக்காலத்திலேயே காஜி கோர்ட்டுகளை மூடிவிட்டனர். அன்றைய தினத்திலிருந்து முஸ்லிம்களுக்கு இக்கஷ்டகாலம் உண்டாகி இருக்கிறது. இக்கஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்கு ஆடவர்கள் முன்வராமலிருக்கிறார்கள் என்பதை ஸ்திரீகள் உணர்ந்துகொண்டதிலிருந்து அவர்கள் தங்களுக்குரிய பரிகாரத்தைத் தாங்களாகத் தேடிக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். ஆங்கிலோ முஹம்மடன் லாவிலுள்ள இக்குறைகள் இப்படியே இருக்க தங்களது குறைகளுக்கு விமோசனம் அளிக்கக்கூடிய குறுக்குவழி வேறு ஏதேனுமுண்டா என்று அன்னோர் முயற்சித்தனர்.

"ஜலம் தனக்குரிய வழியைத் தானே தேடிக் கொள்கிறது"

என்ற பழமொழிக்கேற்ப ஸ்திரீகளும் தங்களுக்கென ஒருவழியைக் கண்டுபிடித்துவிட்டனர். அதாவது மதமாற்றத்தின் மூலம் தங்கள் கஷ்டங்களை நிவர்த்திசெய்யும் முறையைக் கண்டுபிடித்து இம்முறையை ஸ்திரீகள் தங்கள் விடுதலைக்குரிய ஆயுதமாக உபயோகித்தனர். அதிலும் தற்கால சாந்தியாகவே உபயோகித்தனர். ஆயினும், அநேகம் முஸ்லிம் ஸ்திரீகள் இம்மதமாற்றத்திற்கிரையாகிவிட்டனர். இதனால் இன்றுவரை சில முஸ்லிம் ஸ்திரீகளின் பெயர் நாமம் இருக்குமிடம்கூடத் தெரியாமலாகிவிட்டது.

ஸ்திரீகள் இம்முறையில் தங்களுக்குத் தாங்களே தீங்கிழைத்துக் கொண்டுவிட்டனர். முஸ்லிம் ஸ்திரீகள் தாங்களாகவே இவ்வுபாயத்தைக் கண்டுபிடித்துக் கொண்டாலும் சரி அல்லது அவர்களது மாதா பிதாக்களின் ஆலோசனையின்படி இப்படிச்செய்தாலும் சரி இதன் மூலம் முஸ்லிம் சமூகத்திற்குள் ஒரு கலக்கமும் குழப்பமும் ஏற்பட்டுவிட்டது என்பது மட்டிலும் நிச்சயம். அதிலும் இந்த முறை, தகுதியற்ற கணவனுக்குள்ளிருக்கும் ஸ்திரிகளின் விடுதலைக்கு மட்டிலும் உபயோகிக்கப்பட்டு வந்திருந்தால் ஆடவர்கள் இதில் அத்துணை கவனம் செலுத்தி இருக்கமாட்டார்கள். ஆனால், தங்களது கணவனைத் தவிர்த்து வேறு ஆடவனை விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் மத மாற்றம் என்ற இந்த உபாயத்தைத் தனக்குச் சாதகமாக உபயோகிக்கத் தொடங்கிவிட்டனள். இப்படி மதம் மாறுவதானது இஸ்லாமிய ஷரீஅத்தில் அரசாங்கத்திற்கு விரோதமாகக் கலகம் செய்வதற்குச் சமமாகவும், இதற்கு மரணம் அல்லது ஆயுள் பரியந்தம் சிறைவாச தண்டனை எனவும் இஸ்லாம் மதம்

சட்டம் விதித்துள்ளது. இப்படிப்பட்ட கடுமையான குற்றத்தை முஸ்லிம் ஸ்திரீகள் விளையாட்டுக் கருவியைப்போ லுபயோகிக்க ஆரம்பித்து விட்டனர். தங்களுடைய கணவன்மார்கள் மீது கோபம் அல்லது மனத்தாங்கல் ஏற்பட்டுவிட்டால் உடனே அவர்கள் வேறொரு கணவனைத் தேடிப்பிடித்துக்கொண்டு கிறிஸ்துவ மதத்தையோ அல்லது ஆரியமதத்தையோ தழுவ தலைப்பட்டுவிடுவர்.

பரிகார முறை யாது?

முஸ்லிம் மாதுக்கள் தங்கள் விமோசனத்திற்காகக் கண்டு பிடித்திருக்கும் இம்முறை தீங்கானதாகவும் அபாயகரமானதாகவு மிருக்கிறதென்பது ருஜுவாகி விட்டது. ஆகவே, இனி ஸ்திரி ஜாதியினர் உயிர் வாழ்வதற்குத் தக்க பரிகார முறை வேறு யாது? என்ற வினா இவ்விடத்தில் உண்டாகின்றது. கணவன் மனைவி ஆகிய இருவருக்கும் பிரத்தியேகமாகவுள்ள கடமையை நிறைவேற்றுவதற்கோ அல்லது பூர்த்தி செய்வதற்கோ கணவன்மார்கள் தகுதியற்றவர்கள் என்று மார்க்க விதிப்படி உண்மையாகவே ருஜுவாகி விடுமாயின் அப்படிப்பட்ட கணவனை விட்டு ஸ்திரீகள் எவ்விதம் சுயேச்சையடைவது என்ற பிரசினையுண்டாகின்றது.

குல்உ செய்வதா? விவாகத்தைப் பிரிப்பதா?

கணவனுக்குப் பணம் கொடுத்து விவாக விலக்கு வாங்கிக்கொள்ள வேண்டும் என்று இது சம்மந்தமாக ஒரு விவாதம் சிலகாலத்திற்கு முன் உண்டாயிற்று. 'குல்உ' என்பது பணங்கொடுத்து விவாக விலக்கு வாங்கிக் கொள்வதாக இருப்பதால் உண்மையில் இது ஒரு வியாபாரத்தைப் போலவே இருக்கிறது. ஸ்திரியானவள் இஷ்டப்பட்டபோது தனது கணவனிடமிருந்து விவாக விலக்கு வாங்கிக் கொள்ளலாம் என்றால் அவள் அவனுக்குப் பணம் கொடுத்தோ அல்லது தனக்குச் சேர வேண்டிய 'மஹர்'த் தொகையை இழந்தோ, அல்லது புருஷன் வீட்டாரால் தனக்குக் கிடைத்த வெகுமதிகளை வாப்பஸ் செய்தோ தனது கணவனிடமிருந்து விவாக விலக்கு வாங்கிக்கொள்வதாயின் இதுவும் புருஷனுடைய இஷ்டத்தைப் பொறுத்த விஷயமே யாகும். பணம் வாங்கிக்கொண்டும் கூட தனது மனைவியை விவாக விலக்குச் சொல்லி விடப் புருஷன் சம்மதப்படவில்லையாயின் அப்புறம் அவளுக்கு வேறுவழி ஏதுவுமில்லை என்றே ஏற்படுகிறது. எனவே, 'குல்உ' என்ற இவ்விஷயம் தம்பதிகளிருவரும் சம்மதித்துச் செய்யவேண்டிய விஷயமாகவே இருந்து வருகிறது. இவருடைய சம்மதத்தைப் பொறுத்த இவ்விஷயத்திற்கு அரசாங்கச் சட்டம் அவசியமில்லை. மேலும் விவாகம் செய்து கொள்வது ஸ்திரீ புருஷருடைய சம்மதத்தை பொறுத்திருப்பதால் அதற்கு அரசாங்கத்தின் மூலம் பிரத்தியேகமான சட்டம் புதிதாக இயற்ற வேண்டிய அவசியமில்லாததுபோல, 'குல்உ' செய்து கொள்வதற்காகவும் அரசாங்கச் சட்டம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்பது நன்கு தெரிகிறது. எனவே, 'குல்உ' செய்வதற்குச் சட்ட மியற்றுவது பிரயோஜனமில்லை. ஆனால், புருஷனுடைய சம்மத மில்லாமலேயே விவாகத்தைப் பிரித்து விடுதல் அதாவது 'பஸகு' செய்து கொள்வதற்குக் கோர்ட்டு அதிகார மளிப்பதுதான் பிரயோஜனமானது. எனினும், இவ்விதமான தீர்ப்புச் சொல்வதற்கு முன் தம்பதிகள் இருவரும் கலந்து பேசி 'குல்உ' செய்துகொள்ள இஷ்டப்பட்டால் அவ்வாறு செய்துகொள்ள கோர்ட்டார் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்னும் உபவிதி ஒன்று இருப்பது மாத்திரம் போதுமானது.

விவாகத்தைப் பிரித்தல், அல்லது பலவந்த விவாக விலக்கு

'குல்உ' செய்தல் அதாவது பணங் கொடுத்து விவாக விலக்கு வாங்குதல் என்ற பிரசினையின் தன்மையைப் பற்றி மேலே சொல்லப்பட்டு விட்டது. எனவே, விவாகப் பிரிவினை என்ற 'பஸகு'க்குரிய சட்டத்தை ஏற்படுத்தி, கனவன் உண்மையிலேயே தகுதியற்றவனாக இருப்பின் விவாக விலக்குச் சொல்லும்படி அவனை நிர்ப்பந்திக்கவும், கணவன் விவாக விலக்குச் சொல்ல மறுத்தால் விவாகத்தைப் பிரித்து விடவும் ஹாக்கிமே மஜாஸிக்கு அதிகாரம் கொடுத்து விடுவது என்பது ஒரு வழிதான் எஞ்சி இருப்பதால், இந்த ஒருமுறையால் தான் திக்கற்ற ஸ்திரிகளுக்கு விமோசனம் கிடைக்க இடமுண்டு. இந்த முறையைப் பற்றித்தான் தற்போது பத்திரிகைகளில் விவாதம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, இதில் பிரயோஜனப் படத்தக்க ஒரு காரியத்தை கிரியாம்சையில் செய்ய இறங்கி

விடுவதுடன், மத்தியச் சட்ட சபையில் நிறைவேற்றுகிற சட்டத்தை நல்லவிதமாக ஆலோசனை செய்து கொள்வார்களாயின் ஸ்திரீ ஜாதியினருக் கேற்பட்டுள்ள இவ்வியாதிக்கு நம்மவர் தக்க ஒளஷதத்தைத் தெரிந்து கொண்டனர் என்னலாம். ஆனால், ஒரு கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காகச் செய்யப்படும் இக்காரியம் இதர கஷ்டங்களுக்கு வழிவிட்டுக் கொடுப்பதாக ஏற்பட்டுவிடக் கூடாது. எனவே சாதாரணமாக குடும்பங்களில் ஏற்படுகிற அற்ப விஷயங்களுக் கெல்லாம் விவாகப் பிரிவினை செய்து கொள்ள கோர்ட்டுகளின் தலைவாசல்களைத் தட்டவேண்டிய சந்தர்ப்பம் உண்டாகும்படிச் செய்து விடலாகாது.

விவாக விலக்குச் சொல்லுதல் ஆடவர்களுக்குரிய பாத்தியமாகும்.

பரிசுத்த இஸ்லாமிய ஷரீஅத்து விவாக விலக்குச் சொல்லும் உரிமையை ஆடவர்களுக்கு அளித்திருக்கிறது என்ற விஷயத்தை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். எனவே ஒரு ஸ்திரீயை விவாகம் செய்துள்ளவன் விரும்பினால் அவளை விவாக விலக்குச் சொல்லிவிட முடியும்; அவன் இஷ்டப்படும்போது அவளை விவாக பந்தத்திலிருந்து விலக்கிவிடத் தகுதியுள்ளவனாக இருக்கிறான். ஆனால் விவாக விலக்குச் சொல்வதை இஸ்லாமிய ஷரீஅத்து அனுமதித்திருந்த போதினும் அல்லாஹுதஆலாவுக்கு இக்காரியம் சந்தோஷத்தையோ திருப்தியையோ அளிப்பதாக இல்லை. ஆயினும், வாழ்க்கை முறையிலேற்படும் சில கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக இவ்வுரிமையை இஸ்லாமிய ஷரீஅத்து கணவனுக்கு அளித்திருக்கிறது. மேலும், விவாக விலக்குச் சொல்வதற்கு என்று பிரத்தியேகமான சட்டதிட்டங்களும் முறைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தச் சட்டங்களை மீறி ஒருவன் விவாக விலக்குச் சொல்லிவிடுவானாயின் அதற்காக அவன் பாபியாகவு மாகின்றான். இவ்வுரிமையை ஸ்திரீ புருஷர் ஆகிய இருவருக்கும் அளிக்காமல் புருஷர்களுக்கு மாத்திரம் அளித்ததற்கு யாது காரணம் என்ற விஷயங்களை விவரிப்பதற்கு இது இடமல்லவாதலின், அதனைப்பற்றி யாம் கூறவில்லை.

விவாகப் பிரிவினை ஸ்திரீக்குள்ள பாத்தியமாகும்

விவாக பந்தத்தை நீக்கிவிட இஸ்லாமிய ஷரீஅத்து 'தலாக்' சொல்லும் உரிமையை ஆடவர்களுக்கு அளித்திருப்பதால் ஸ்திரீகளுக்கு இவ்விஷயத்தில் என்ன உரிமை இருக்கிறது என்ற கேள்வி உண்டாகிறது. ஒரு ஆடவன் தனது மனைவியை விவாக விலக்குச் செய்து விடுவதிலேயே தனது வாழ்க்கைக்குப் பல நன்மைகள் இருப்பதாகக் கருதுவதுபோல, ஸ்திரீயானவளும் தனது கணவனை விட்டுப் பிரிந்து விடுவதிலேயே தனது வாழ்க்கைக்கு நன்மை இருப்பதாகக் கருதவும் இடமுண்டு. குடும்ப வாழ்க்கையில் தம்பதிகளிருவரும் ஒருமனப்பட்டு ஒற்றுமையுடன் அந்நியோன்யமாக இருப்பாராயின் இவ்வுலகில் அவ்விருவருக்கும் அதனைப் பார்க்கினும் பெரியதொரு பாக்கியம் வேறொன்று இருக்கமாட்டாது என்று கூறுவது மிகையாகாது. இதுபோல தம்பதிகளிருவரும் பிணங்கிக்கொண்டு, ஒற்றுமையில்லாமல் மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருப்பின் அதனைப் பார்க்கினும் கஷ்டமான விஷயம் வேறொன்றுமில்லை. எனவே, இஸ்லாமிய ஷரீஅத்தானது ஆண் பெண் ஆகிய இருபாலருக்கும் சமத்துவ உரிமை அளித்திருப்பதால் ஆடவர்கள் நினைத்த மாத்திரத்தில் விவாக பந்தத்தை முறித்துக்கொள்ள உரிமை பெற்றிருப்பது போல, ஸ்திரீகளும் விவாகபந்தத்தை முறித்துக்கொள்ள அவர்களுக்கும் உரிமை ஏற்படுத்தி இருக்கிறது. ஆனால், அவர்கள் நினைத்த மாத்திரத்தில் தங்கள் இஷ்டம்போல் செய்துகொள்ளாமல் காஜியாரிடம் மனுக்கொடுத்து தனது கஷ்டத்தைக்கூறி விவாக பந்தத்தை விலக்கிக்கொள்ள இடமளித்திருக்கிறது. ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றி காஜிகோர்ட்டு அதிகாரத்தை நீக்கியபோது ஸ்திரீகளுக்குரிய இந்த உரிமையும் அழிக்கப்பட்டுவிட்டது. ஸ்திரீகளுக்கேற்பட்ட இந்தப் பாதகத்தினால் அவர்கள் அறை நூற்றாண்டிற் கதிகமாக அநேகம் கஷ்டசங்கடங்களை அனுபவித்து வருகிறார்கள். அதனை நிவர்த்தி செய்துகொள்ள அவர்களுக்கு இன்றுவரை வேறு தக்க மார்க்கம் அகப்படவில்லை.

விவாகப் பிரிவினைச் சட்டமும் ஹனவி மதுஹபும்

இன்று சில பெரியார்கள் கவனஞ்செலுத்தி வருகிற ஸ்திரீகளின் உரிமையானது புதிய உரிமையன்று. நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் ஸ்திரீகளுக்கு அளித்துள்ள இவ்வுரிமை

யைத்தான் இப்பொழுது அதிகாரம் வகித்திருக்கும் அரசாங்கம் பறிமுதல் செய்துவிட்டது. முஸ்லிம்கள் தங்களது நிர்ப்பந்த நிலைமையின் காரணமாக இவ்வுரிமையைக் குறித்து அரசாங்கத்தாரிடம் முயற்சி செய்ய முடியாமலிருந்தனர். ஆகவே, இப்பொழுது அவர்கள் கேட்பது பறிமுதலான தங்கள் உரிமையை வாப்பஸ் செய்யும்படி கூறுவதாக இருக்கிறதேயன்றி புதிய விஷயம் ஒன்றுமில்லை. ஆனால், இதனை வாப்பஸ் பெறும்போது மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இப்பொழுது ஸ்திரீகள் படும் இதே அவஸ்தை ஆடவர்களுக்குத் திரும்பிவிடாமற் பார்த்துக்கொள்ள வேண்டிய தவசியம்.

ஸெய்யிதுனா ஹஜ்றத் இமாம் அபூஹனீபா றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் ஸ்திரீகளுக்குள்ள விவாகப் பிரிவினை விஷயத்தில் குறுகிய புத்தியைக் காண்பித்துவிட்டார்கள் என்று சிலர் கூறுகின்றனர். இது விஷயத்தில் ஹஜ்றத் இமாம் அபூஹனீபா அவர்களைச் சிலர் குறைகூறுகிறார்களென்றால், வேறு சில விஷயங்களில் இதர இமாம்களைப் பிறர் குறை கூறுகின்றனர். தற்போதுள்ள சுயேச்சை வாதிகள் இஸ்லாம் மதத்தையே குறுகிய திருஷ்டியுள்ளதென்று குறைகூறுகின்றனர். இவ்வித நிலைமையில் இமாம்களைப்பற்றிக் குறைகூறுவதைத் தடைசெய்ய எவரால் முடியும். ஸ்திரீகளுக்கு விவாகப் பிரிவினை உரிமையை அளிக்கும் விஷயத்தில் இதர இமாம்கள் ஒப்புக்கொண்டுள்ள சில விஷயங்களை ஹனபி புக்கஹாக்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்பது உண்மையே யாகும். ஆனால், அவர்கள் இப்படி ஒப்புக்கொள்ளாததற்கு அவர்கள் குறுகிய திருஷ்டியுள்ளவர்கள்; அவர்கள் ஷரீஅத்தை உணராமலிருந்தனர்; அல்லது விஷயம் அவர்களுக்குப் புரியவில்லை என்பது காரணமல்ல. இது விஷயத்தில் அவர்களது முன் ஜாக்கிரதையும் அவர்களது அபார அறிவுமே இப்படிச் செய்யும்படிச் செய்திருக்கிறது. விவாக விலக்குச் சொல்லும் உரிமையை ஆடவர்களுக்கு மாத்திரம் இஸ்லாமிய ஷரீஅத்து அளித்திருக்கிறதென்பதுமட்டிலுமே ஸ்திரீகளுக்கு விவாகப்பிரிவினை உரிமையை அளிக்கும் விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதையும், நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டாலொழிய ஸ்திரீயை புருஷரைவிட்டுப் பிரிக்கக் கூடாது என்பதையும் அறிவிக்கிறது. ஹனபி புக்கஹாக்கள் குறுகிய திருஷ்டியுள்ளவர்களாக இருந்தால் அவசியம் நேர்ந்துழி இதர இமாம்களின் காஜிகளது மூலமாக விவாகப் பிரிவினை செய்துகொள்ள அனுமதித்திருக்கவே மாட்டார்கள். இது சம்பந்தமான இதர முக்கிய விபரங்கள் மார்க்கச்சட்ட புத்தகங்களில் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால், பாமரர்கள் மட்டிலுமென்ன படித்தவர்களில் சிலரும்கூட இம்மாதிரி இமாம்களின்மீது குணதோஷங்கூற ஆரம்பித்து விடுகின்றனர். இது இவர்களின் அறியாமையே யாகும். நடுநிலைமையாக இருந்து விஷயத்தை அலசிப்பார்க்கிற ஒருவர், இமாம்களின் மதுஹபுகளை நன்கு ஆராய்ந்து பார்ப்பாராயின் இமாம்கள் வெளிப்பார்வைக்குச் சில உபவிதிகளில் மாறுபட்டிருப்பதானது அடிப்படையான விஷயத்தில் அவர்களுக்குள் பிரிக்கமுடியாத பலமான ஒற்றுமையின்பேரில் இருக்கிறது என்பது தெரியவரும். அவசியமேற்படும்போது முஸ்லிம்கள் தங்களது இமாமுடைய அபிப்பிராயத்தை விட்டுவிட்டு இதர இமாம்களைப் பின்பற்றிக்கொள்ள இந்த மதுஹபுகள் அனுமதித்திருப்பதால், இமாம்கள் குறுகிய புத்தி காட்டுகிறார்கள் என்று விவாதிப்பது வீணான விஷயமேயாகும்.

தவிரவும், குறிப்பிட்ட ஒரு இமாமுடைய மதுஹபில் மாத்திரம் எல்லா விஷயங்களும் ஒன்றுகூடத் தவறாமல் சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்க முடியாது. கால மாறுபாடுகளும், நித்தம் நித்தம் புதிதுபுதிதாக உண்டாகும் பிரசினைகளும் நிலைமையை வித்தியாசப் படுத்திக்கொண்டே இருக்கின்றன வாதலின் இவ்விதம் எதிர்பார்ப்பதும், தங்களது நோக்கத்திற்கிணங்கியவாறு விஷயம் சொல்லப் பட்டிராவிடில் குணதோஷங் கூறுவதும் அறிவுடமையாகாது. ஆகவே, விவாகப்பிரிவினை விஷயத்தில் நான்கு மதுஹபுகளிலும் சொல்லப்பட்டிருக்கிற விதிவிலக்குகளை அனுசரித்துச் சட்டமியற்றுவது குற்றமல்ல. அப்படி இயற்றுவது ஹனபிமதுஹபுக்கு விரோதமானதுமன்று. ஆனால், இதில் சிரத்தை கொள்பவர்கள் நான்கு மதுஹபுகளின் மஸ்அலாக்களை நன்குணர்ந்தவர்களாகவும், முஸ்லிம்களின் தேவைகளை அறிந்தவர்களாகவும் இருக்கவேண்டியதவசியமாகும். சாதாரணப் பொதுமக்களோ துறவறம் கொண்டவர்களோ செய்யக்கூடிய காரியமல்ல.

விவாகப்பிரிவினை விஷயத்தில் ஹனபி பிக்ஹு களில் தகுந்த சௌகரியமான விதிகள் இல்லை என்றும், அதற்காக இதர இமாம்களில் ஒருவரைப் பின்பற்றுவதாகவும் வைத்துக்கொள்வோம். அப்படிப் பின்பற்றும்போது அவ்விஷயத்திற்குச் சம்மந்தப்பட்ட இதர விஷயங்களுக்கு அந்த இமாமுடைய மதுஹபில் சொல்லப்பட்ட உபவிதிகளையும் அனுசரிக்க வேண்டும். ஒரே விஷயத்திற்கு ஒரு மதுஹபிலுள்ள தீர்ப்பையும், மற்றொரு மதுஹபிலுள்ள நிபந்தனைகளையும் சேர்த்து இரண்டையும் ஒன்றாகக் குழப்பக்கூடாது. இப்படிக் குழப்புவதற்கு மார்க்கச்சட்டம் இடம் கொடுக்கவில்லை.

மதம்மாறுவதும் விவாகப் பிரிவினையும்.

விவாகப் பிரிவினைச் சட்டத்தைப்பற்றி இன்னும் அதிகமாக எழுதவேண்டியதும், விவாதம் செய்யவேண்டியதும் இன்னும் பாக்கியாகவே இருக்கிறது. விவாகப்பிரிவினைச் சட்டத்தை ஏற்படுத்தும்போது ஏதேனும் குறைகளேற்பட்டு, அதன்காரணமாக எதிர்பாராத வேறு கெடுதல்கள் உண்டாகி விடாமற் பார்த்துக் கொள்ளவேண்டியதிருக்கிறது. ஆயினும், விரிவஞ்சி இவ்வியாசத்தைச் சுருக்கிக்கொண்டனன். ஆதலின், அவசியப்படின் இன்ஷா அல்லாஹ் இனிமேலும் எழுதுவன். விவாகப் பிரிவினைச் சட்டம் ஏற்படுவதற்கு முன்பே பத்திரிகைகளில் மற்றொரு புதிய விவாதம் தோன்றிவிட்டது. இவ்விவாதத்தின் சாதகமும் பாதகமுமான வியாசங்கள் பல எழுதப்பட்டு வருகின்றன. “மதம் மாறுவதால் விவாகப் பிரிவினை உண்டாகிவிடுமா? அல்லவா?” என்பதுதான் இவ்விவாதத்தின் சாரமாகும். மதம் மாறிவிடுவதால் விவாக பந்தம் தானாக விலகிவிடுகிறது என்பது ஒரு சாராரின் அபிப்பிராயம். மற்றொரு வகுப்பார் இதற்கு நேர்விரோதமாக இருக்கின்றனர். மதம்மாறியவுடன் விவாக பந்தம் நீங்கிவிடமாட்டாது என்று இவ்வர்க்கத்தார் வாதிக்கின்றனர்.

இப்பொழுது இதனைப்பற்றி விவாதம் செய்வதற்குத் தருணமல்லவென்பது எனது அபிப்பிராயம். சில ஸ்திரீகள் விவாக பந்தத்தை விலக்கிக் கொள்வதற்கென்றே மதம் மாறும் தொழிலை கைக்கொண்டிருப்பதைக் கண்டு வருத்தமடைந்த சில மார்க்காபிமானிகள், விவாகப் பிரிவினைச் சட்டம் ஏற்படுத்துவதுடன், மதம் மாறியவுடன் விவாகபந்தம் விலகிப்போகும் என்ற சட்டத்தை ஒழித்துவிட வேண்டும் என்றும், மதம் மாறுகிற ஸ்திரீகள் தங்களுக்கு இஷ்டமான வேறொருவரை மணந்துகொள்ள உரிமை பெற்றிருக்கக்கூடாது என்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்விரு கக்ஷியினரும் தங்கள் அபிப்பிராயத்திற்கு அனுசரணையாகக் கூறும் ஆதாரங்களை நாம் இப்பொழுது கவனிக்கவேண்டிய அவசியமுமில்லை. அதனைப்பற்றி சரி தப்பு என்ற முடிவு கூறவேண்டியதுமில்லை. தற்போது, மதம் மாறுவதால் விவாகப் பிரிவினை ஏற்படுமா அல்லவா என்ற விஷயத்தை ஒத்திவைத்துவிட்டு, விவாகப் பிரிவினைக்குத்தக்க சட்டத்தை மாத்திரம் இயற்றிவிடுவோம். இந்தச் சட்டம் ஏற்பட்டுவிட்டால் விவாகப் பிரிவினைக்காகவென்றே ஸ்திரீகள் மதம்மாறும் தொழில் தானாக நின்றுவிடும். விவாகப் பிரிவினைச்சட்டம் கொஞ்சகாலம் அமலில் இருக்கட்டும். இச்சட்டம் அமுலில் வந்தபின்னரும் விவாகப் பிரிவினைக்காக மதம்மாறும் தொழில் வழக்கமாகத் தொடர்ந்து நடைபெற்று வருமாயின் அப்பொழுது இதனைப்பற்றிக் கவனம் செலுத்துவோம். இப்பொழுதே அவசரப்பட்டு வீணாக அபிப்பிராய பேதங்களையும் மனக்கசப்புகளையும் உண்டுபண்ணிக் கொள்ளவேண்டாம்.

கமிட்டி நியமனம்

இச்சட்ட சம்மந்தமாக இந்தியாவிலுள்ள குறிப்பிட்ட கல்வியாளர்களும், அறிஞர்களுமான சட்ட நிபுணர்களைக்கொண்ட ஒரு கமிட்டி நியமனம் செய்யப்படவேண்டும். இக்கமிட்டி அங்கத்தினர்கள் யாவரும் ஓரிடத்தில் ஒன்றுகூடி மதத்தின் நோக்கம் என்னவென்பதைக் கவனித்து, அதற்கு விரோதமாக இல்லாமல் ஒரு சட்டத்தை இயற்றவேண்டும். இச்சட்டம் தற்போதுள்ள முஸ்லிம் ஸ்திரீ புருஷரின் கஷ்டங்களனைத்தையும் போக்க வல்லதாக இருக்கவேண்டும். இச்சட்டத்தைப் பற்றி நல்லவிதமாக விவாதம் செய்து சாதக பாதகங்களைப் பரிசீலனை செய்து திருத்திய பின் மத்தியச் சட்டசபையில் சட்டமாக்கப் படுவதற்காகச் சமர்ப்பிக்கப் படவேண்டும். தற்போது இந்தியா சட்டசபை அங்கத்தினர்களான ஸெய்யித் குலாம்பேக் நிரங், ஸெய்யித் முஹம்மது அஹ்மது காஜிமீ ஆகியவர்கள் இது சம்மந்தமாக ஒரு மசோதாவைச் சட்டமாக்குவதற்காக இந்தியா சட்டசபையில்

கொண்டு வந்திருக்கிறார்கள். இம்மசோதா தற்போது 'ஜமிய்யத்துல் உலமா' சபையின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. இன்ஷா அல்லாஹ் அச்சபையின் காரியக் கமிட்டி இதனைப்பற்றிக் கவனம் செலுத்தும். ஜமிய்யத்துல் உலமா சபையின் காரிய கமிட்டியில் அங்கம் வகிக்காத இதர பிரபல உலமாக்களும் இக்கூட்டத்திற்கெனப் பிரத்தியேகமாக அழைக்கப் பட்டிருக்கின்றனர்.

"அல்ஜமிய்யத்"

இப்போதேனும் விழித்தலாகாதா ?

(தென்காசி. மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி வரைவது)

சகோதரர்களே !

நமது முஸ்லிம்களை இதர மதத்தினர் பல துறைகளிலும் ஏமாற்றி, தத்தம் மதப் போதனை, ஒழுக்காச்சாரம் முதலியவைகளை நம்மவர்களினுள்ளத்தில் பதியச்செய்வதற்காக பல துறைகளிலும் பலவித தந்திரோபாயங்களைக் கைக்கொள்கின்றனர். இவ்விதத் துறைகளில் மிகக் கைதேர்ந்தவர்கள் கிறிஸ்தவர்கள் தானென்பதை உலகு நன்கறியும். இம்மதத்தினர்களின் படித்த ஆண்களும் பெண்களும் பல நகர்களில் சென்று ஆண், பெண்பாடசாலைகளையும், வைத்திய சாலைகளையும் ஏற்படுத்தி சிறிது சிறிதாக இதர மதத்தவர்களுக்கு தங்கள் மதத்தின்பால் பக்தியுண்டாகும் வண்ணம் செய்து வருகின்றனர். பாடசாலை, ஆஸ்பத்திரி ஆகிய இருவழிகளிலும் அவர்களுக்கு அதிக பலன் கொடுப்பது பாடசாலைகளேயாகும். அதிலும் மிக்கப் பலன் கொடுப்பது பெண்பாடசாலைகளேயாகும்.

பெண் பாடசாலைகளில்லாத அநேக நகர்களில் இவ்வகுப்பினர் பெண் பாடசாலைகளை ஏற்படுத்தி, முதன் முதலாகப் படிக்கவரும் சிறுமிகளிடம் சிலக்காலம் சம்பளம் வாங்காமல் படித்துக் கொடுக்கின்றனர். பல நேரங்களில் மிஷனிலிருந்து பல மாதர்கள் இவ்விஸ்கூல்களுக்கு வந்து பலவிதப் பரிசுகளை மாணவிகளுக்கு வழங்கி உற்சாகப் படுத்துகின்றனர். இவ்வாறு இனமாகப் படித்துக் கொடுப்பதையும் மாதம் ஒருமுறை, அல்லது இருமுறை தலைமைக் கிறிஸ்தவ மிஷினிலிருந்து மல ஆங்கில மாதர்கள் வந்து சிறுமிகளுக்குத் தின்பண்டங்கள், பொம்மைகள், படங்கள், விளையாட்டுச் சாமான்கள், சிறு சிறு புத்தகங்கள் முதலானவைகளை பரிசளிப்பதையும் பார்த்த அச்சிறுமிகளின் பெற்றோர்கள் "உண்மையிலேயே கிறிஸ்தவ மிஷின் ஸ்கூல் உபாத்தியாயினிகள் கல்வியில் அக்கரையும், அன்பும் கொண்டே இத்துணைக் கஷ்டப்படுகிறார்கள்" என்று மனப்பால் குடித்து தத்தம் மக்களை மேற்கண்ட ஸ்கூல்களுக்கு அனுப்புவதுடனில்லாது மற்ற சிறுமிகளையும் அவ்விஸ்கூலுக்கே அனுப்பும்படி தங்களாலியன்ற முயற்சிகளைச் செய்வதுடன் அவ்விஸ்கூல்களை வானமளாவப் புகழுகின்றனர். அந்தோ இவர்கள் அவ்விஸ்கூல்களின் அந்தரங்க நோக்கத்தை உணராததுதான் பெரிதும் வருந்தத்தக்கது ! மேலும்,

அவ்விஸ்கூல் உபாத்தியாயினிகளும், பரிசளிக்கவரும் ஆங்கில மாதர்களும் வீடுகள் தோறும் சென்று கல்வியின் அவசியத்தைப் பற்றி அங்குள்ள பெண்மணிகளிடம் கூறி அவ்வீட்டிலுள்ள சிறுமிகளைத் தங்கள் ஸ்கூலுக்கு அனுப்பும்படிகூறி அங்குள்ள மாதர்களுக்கு கிறிஸ்தவப் போதனைகளடங்கிய சிறு புத்தகங்களையும் இனமாகப் பரிசளித்துச் செல்கின்றனர்.

இவ்வாறு பலவகையிலும் அக்கிறிஸ்தவ பெண்பாடசாலைக்கு ஏராளமாகச் சிறுமிகள் வருவதைக்கண்ட உபாத்தியாயினிகள், அச்சிறுமிகளுக்கு, வகுப்புக்குத் தக்கவாறு சிறிது சிறிதாக சம்பளங்களையும் ஏற்படுத்திவிடுகின்றனர். இச்சிறுமிகள் இவ்விஸ்கூலில் கொஞ்சகாலமிருந்து படித்ததும் உபாத்தியாயினி பதவி யளிக்கப்பட்டு சிறிது சம்பளமும் கொடுத்து ஆசைகாட்டி விடுகின்றனர். இவ்வாறு பலவிதமாக முன்னேற்றமடைந்து வரும்

ஸ்கூலில் என்ன பாடப்புத்தகங்கள் வைத்திருக்கின்றார்களென்பதைக் கவனித்தால் மனம் பதறுகிறது; இரத்தம் கொதிக்கிறது. என் செய்வோம். விஷயத்தை விளக்கவேண்டியதிருப்பதால் சிறிது வரைகின்றனன். அவ்விஸ்கூலினுள்ள பாடப் புத்தகங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று, ஏனைய இதர ஸ்கூல்களிலுள்ளதைப்போல் பொதுவான விஷயங்களடங்கியது. மற்றொன்று கிறிஸ்தவமதப் போதனைகள், இயேசுவின் சரித்திரம், இவைகளைப்பற்றிய வினாவிடைகள். இது சம்பந்தமான விஷயங்களைப்பற்றி நூதன மெட்டுகளில் அழகிய பாட்டுகள் முதலியனவைகளே இப்புத்தகங்களில் மிளிர்ந்து காணப்படுகிறது. இவைகளை அச்சிறுமிகளுக்கு முதல் வகுப்பிலிருந்தே நன்கு போதிக்கப்படுவதால் அச்சிறுமிகளின் நோக்கம், ஞாபகம், நடத்தைகள் எல்லாம் இதன் பக்கலே வயமாகி விடுகிறது. இறுதியாக இச்சிறுமிகளிடம் "நுங்களின் ஆண்டவன் யாரென்று" வினவினால் "எங்களின் பாவத்திற்காகச் சிலுவையிலறைபட்ட ஏசுகிறிஸ்துவே எங்களின் கர்த்தராகிய ஆண்டவன்" என்று கூறும் நிலைமைக்குப் பழக்கப்பட்டு விடுகின்றனர்.

அந்தோ இது மட்டுமா? அல்ல. அவ்விஸ்கூலில் முதன் முதலாகச் சேரும் நாலைந்து வயதையுடைய சிறுமிகளுங்கூட இவ்வாக்கியங்களை மனப்பாடமாக கூறுகின்றனரென்றால், இவ்விஷயங்களைப் போதிப்பதில் அவ்வுபாத்தியாயினிகள் எத்துணை முயற்சியும், சிறத்தையும் எடுத்திருப்பார்களென்பதை யான் வரையவும் வேண்டுமோ? இயேசுவின் சரிதை, கிறிஸ்தவமதப் போதனைகள், இயேசுவைப் பற்றிய பாட்டுகள் முதலிய விஷயங்களை நன்றாகத் தைரியத்துடன் கூறும் சிறுமிகளுக்கே ஏராளமாகப் பரிசுகள் வழங்கப்படுவதுடனில்லாது மேல் வகுப்புகளுக்கும் உயர்த்தப்படுகிறது. மேலும், அவ்விஸ்கூலில் எல்லாச் சிறுமிகளும் வந்தவுடன் பாடங்களை ஆரம்பிக்குமுன் ஜாதி மத பேதமின்றி எல்லோரும் எழுந்து நின்று இருகண்களையும் மூடிக்கொண்டு பயபக்தியுடன் நிற்றல் வேண்டும். நின்றபின் சில மாணவிகள் இயேசுவைப்பற்றிய துதிகளைப்பாடி இயேசுவிடம் பாப மன்னிப்புத்தேடி தங்களுக்குக் கல்வி யபிவிருத்தி யேற்பட வேண்டுமென்று பிரார்த்திக்கின்றார்கள். இது சமயம் ஏனைய சிறுமிகள் யாவரும் பயபத்தியுடன் "ஆமன்" என்று கூறும் வழக்கம் இன்றைக்கும் இருந்து வருகிறது. இவ்விதத் தன்மைகளுடனே இவ்விஸ்கூல் ஆரம்பமாகிறது. இவ்விஸ்கூலில் புகுந்தவுடன் மாணவிகளுக்கு இயற்கையிலேயே அமையப்பெற்றிருந்த நாணம், வெட்கம், பயிற்பு முதலியவைகள் சிறிது சிறிதாக நீங்குவதுடன் கோலங்களும், பழக்க வழக்கங்களும், நடைமுறை பாவனைகளும், நவீன முறையில் ஆரம்பமாகி மனம்போன போக்கில் நடக்கவும் துணிந்து விடுகின்றனர். அன்பர்களே! யான் மேல் வரைந்த விஷயங்களை நன்கு கவனித்து, அவ்விஸ்கூல் மாணவிகள் நடக்கும் முறைகளையும் நேரில் கவனித்தவர்களுக்கு கிறிஸ்தவப் பெண் பாடசாலைகளின் முக்கிய நோக்கம், கிறிஸ்தவ மதத்தை நஞ்சிறுமிகளின் ஹிருதயங்களில் பதியவைக்கவே இத்துணை சூட்சியும், முயற்சியும் செய்யப்பட்டு வருகிறதென்பது குன்றின் மேலிட்ட தீபம்போல் நன்கு தெரியவரும்.

கிறிஸ்தவ ஸ்கூல்களுக்குச் சிறுமிகளை அனுப்பிக்கொண்டிருக்கும் முஸ்லிம் சகோதரர்களே! இனி யாது செய்யவேண்டுமென்பதை நன்கு ஆலோசித்துப் பாருங்கள்!! நுங்களின் சந்ததிகள் கிறிஸ்தவர்களாக மாறுவதற்கு உதவிபுரிகின்றீர்களா? அல்லது இஸ்லாத்தின் கண்ணியத்தைக் காற்பதற்காகவும், நுங்கள் திருவேதத்தின் மகிமைகளையும், நபிகள் நாயகத்தின் நன்மொழிகளையும் உண்மைப்படுத்தி ஓங்கச் செய்வதற்காகவும் நுங்களின் சிறுமிகளை அவ்விஸ்கூலிலிருந்து அழைத்து நமது நன்மார்க்க போதனைகளைப் போதிக்கும் வேறு ஸ்கூல்களில் படிக்க அனுப்பப் போகின்றீர்களா? சத்தியமாக நுங்களுக்கு இஸ்லாத்தின் மீது உண்மையிலேயே பக்தியிருந்தால், உலக விருட்சகரான நபிகள் நாயகத்தைப் பின்பற்றியிருக்கிறோமென்ற நம்பிக்கையிருந்தால், இஸ்லாத்தின் இரத்தம் நுங்களின் ஹிருதயங்களில் ஓடுகிறதென்ற உறுதியிருந்தால் ஒரு க்ஷணப் பொழுதுகூட இவ்வாறாய ஸ்கூல்களில் நுங்களின் சிறுமிகள் இருக்கப் பொருந்திக்கொள்வீர்களா? ஒருபோதும் பொருந்திக்கொள்ள மாட்டீர்களென்பது திண்ணம்.

(தொடரும்.)

தமிழ்நாடு

காலண்டர்கள் வரவு

M. K. M. காதர் மஸ்தான் சாஹிப் & பிரதர்ஸ் :—சென்னை புதுப்பேட்டை ஐயாச் சாமி பிள்ளை தெருவு, 37, 38-வது நெம்பர் வீட்டில் செப்பு பித்தளைப் பாத்திர வியாபாரம் மெஸ்ஸர்ஸ் **M. K. M.** காதர் மஸ்தான் சாஹிப் & பிரதர்ஸ் அவர்களிடமிருந்து மாதம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும், இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று தேதிகளையும் மூன்று கலர்களில் வெளியாக்கக் கூடியதாகவும், விசேஷ தினங்களுக்கு பிரத்தியேக அடையாளமிட்ட தாகவுமுள்ள காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். அதில் அவர்களின் திருநெல்வேலியிலுள்ள பிராஞ்சு ஆபீஸின் அட்ரஸ் குறிப்பிடப்பட்டிருப்பதுடன் காலண்டர் வெகு அழகானதாகவு மிருக்கிறது.

A. L. S. ஜமால் முகம்மது :—கல்கத்தா காலேஜ் ஸ்ட்ரீட் 51-வது நெம்பர் கட்டிடத்தில் பிரபல தொழிற்சாலை ஓனரும், வியாபாரியுமாகிய ஜனுப் **A. L. S.** ஜமால் முஹம்மது அவர்களிடமிருந்து அழகிய காலண்டர் இரண்டு வரப்பெற்றோம். அவைகள் கண்கவர்ச்சியை அளிக்கக் கூடியதாகவும், பார்வைக்கு வெகுநேர்த்தியானதாகவும், மாதம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடிய ஆங்கிலேயத் தேதியுள்ளதாகவு மிருக்கிறது. அதன் அட்டையில் அவர்களது தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் சூட்டு கேஸ், டிரங்குபெட்டி பூட்டுகள், கைபிடிகளின் பிளாக்குகள் பொறிக்கப்பட்டு மற்ற சாமான்களின் பெயர்கள் இங்கிலீஷ், உருதூ, ஹிந்தி ஆகிய பாஷைகளில் குறிப்பிடப்பட்டு மிருக்கிறது.

சத்தியப் பிரசாரம்,

(காதியானிக் கண்டனம்)

ஏற்கனவே தஞ்சை ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவந்த "ஹிஸ்புல்லாஹ்"க்களின் அருஞ்சேவைகளும், அந்த ஜில்லாவின் பற்பல பாகங்களிலும் மகா நாடுகள் கூட்டுவதற்கேற்பட்ட காரணங்களும் காதியானிக் கொள்கையின் கெடுதிகளும், அது தென்னுட்டில் பரவிய வரலாறும், அதன் பிரசாரத்தை ஏற்று நடத்திவரும் தென்னுட்டு மிஷனரியின் விபரமும் விவரிக்கப்பட்டுளது. இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் வாசித்துணர்வார்களாயின் தக்க பிரயோசன மேற்படுமென்பது திண்ணம். அதிலும் லாகூர் பார்ட்டியினர் நயவஞ்சகத்தனமாய் முஸ்லிம்களை ஏமாற்றிவரும் இதுகாலை இப்புத்தகம் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அவசியமாகும். இப்புத்தகம் நண்பர்கட்கு இனுமாக வினியோகிக்கப்படுமாகையால் 0-0-9 ஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக் கொள்ளுவார்களாக.

அல்பராஹீனுற் றப்பானிய்யா பிற்றத்தி அலல்காதியானிய்யா

இந்த அரபி நூல், காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளை எடுத்து விளக்கி, அது சம்மந்தமாய் நம் சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கம் எவ்வாறுன தீர்ப்பளித்திருக்கிறதென்னும் விபரத்தை குர்ஆன் ஹதீதுகளின் தக்க மேற்கோள்களுடன் அழகிய முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இதனை வாசிப்பது கொண்டு காதியானிகள் பிதற்றித் திரியும் சன்மார்க்க முரணுனவைகள் சம்மந்தமாய் நமது சன்மார்க்கம் யாது தீர்ப்பளித்திருக்கிறதென்பது இனிது புலனுகும்.

இஃது சென்னை பிரபல முப்தீ மௌலானு மௌலவீ அல்ஹாஜ் முஹம்மது தமீம் சாஹிப் அவர்களால் எழுதப்பட்டு சென்னை, காயல்பட்டணம் முதலிய பற்பல ஊர்களின் உலமாக்களின் கையெழுத்துடனும், ஹிஸ் ஹோலினஸ் மௌலானு மௌலவீ அல்ஹாஜ் காரீ ஹாபிஸ் சுல்த்தானுல் வாயிஜ், முஹம்மது அப்துல் அலீம் சாஹிப் காதிரீ சித்திகீமீரட்டி அவர்களின் மதிப்புரையுடனும் வெளிவந்திருக்கிறது.

இது சென்னை, புதுப்பேட்டை பிரபல வர்த்தகரும், தனவந்தருமான மெஸர்ஸ் **A. P. M.** செய்யித் இப்ராஹீம் சாஹிப் & பிரதர், அவர்களது பொருளுதவியைக் கொண்டு அச்சிடப்பட்டிருப்பதால் தபால் செலவுக்காக ஒரு அணு ஸ்டாம்பு அனுப்புவர்கட்கு ஒரு பிரதி அனுப்பிவைக்கப்படும்.

இச்சிறந்த 'ரிஸாலா' அறபி பாஷையி லிருப்பதால் அறபி தெரிந்தோர் இதனைபெற்று வாசித்துப் பயன் பெறுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

சந்தா நேயர்கட்கு!

அன்பீர்!

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தாப் பணத்தை வருட ஆரம்பத்தி லேயே கொடுத்து, அரும் மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டுமென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இந்நிலைமையில் அநேக சந்தாதார்கள் சென்ற 1935-ம் ஆண்டுக்குரிய சந்தாப் பணத்தை இதுவரை அனுப்பிக் கொடுக்காமலே அசட்டையாக இருந்து வருகின்றனர். ஆகவே, அன்பர்கள் அன்போடு தங்கள் பழைய பாக்கிகளையும், புதிய வருடத்திற்குரிய சந்தா ரூபாயையும் தாமதமின்றி அனுப்பிவைப்பார்களென எதிர்பார்க்கிறோம். மேலும், சென்ற வருஷத்திற்கு ஏற்கனவே சந்தா செலுத்தியிருப்பவர்கள் நிகழும் 1936-ம் ஆண்டுக்குரிய சந்தா ரூபாயை முன்பணமாக அனுப்பி ஆதரவு புரிவார்களென எதிர்பார்க்கிறோம்.

நமது சந்தாதார்களில் சிங்கை வாசிகள்

ஜனாப் மு. முகம்மதுஷரீப் சாஹிப் அவர்கள்,

(208, ஸிலிங்கி ரோட்) இடமும்

பினாங், மலாக்கா & மலாய் நாட்டு வாசிகள்.

ஜனாப் K. A. பகீர் முகம்மது சாஹிப்,

(P. O. Box No. 60, கிள்ளான்) இடமும்

சிலோன் வாசிகள்

ஜனாப் A. M. K. ஆலிம் சாஹிப்,

(220, 2-ம் குறுக்குதெருவு, கொழும்பு) இடமும்

தங்கள் சந்தாக்களைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

சென்னை-600 008

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Sahib
Manager, Hifazath-ul-Islam, 43-A, Post Office St., G.T., Madras.